DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative, kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

25 வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் தமிழ் பேசும் வார இதழ்

$1.00
416-752-1524
www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
முதல் தரம் வீடு வாங்குபவர்களுக்கான அரசாங்க சலுகைகள் பற்றி அறிய என்னை அழையுங்கள்
Selva Karthigesu B.com (Hons)
Sales Representative
416-648-9757
CENTURY 21

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1324 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 20, 2021



# சிறுபான்மை அரசாக நோய்த் தொற்று காலத்தில் சவால்களோடு மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கியது ஜஸ்டின் ட்ரூடோ தலைமையே

## கனடா உதயனுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலின் போது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

எமது லிபரல் சிறுபான்மை அரசாங்கம் பதவியேற்று சில மாதங்களில் உலக நாடுகளோடு சேர்த்து, கனடாவையும் சூழ்ந்து கொண்ட கொரோனா நோய்த்தொற்று காரணமாக பதட்டத்துடன் காணப்பட்ட கனடிய மக்களுக்காக செயலில் இறங்கியது எமது பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கமே ஆகும். பொதுவாகவே ஒரு சிறுபான்மை அரசாங்கம் ஆட்சியில் தாக்குப் பிடிக்கக் கூடிய கால எல்லை பதினெட்டு மாதங்களே ஆகும். ஆனால் எமது அரசாங்கம் 21 மாதங்களை தற்போது பூர்த்தி செய்த பின்னரே எமது பிரதமர் மக்களின் ஆணையை புதிதாகப் பெறுவதற்காக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ஆளுனர் நாயகத்தை வேண்டினார். இந்த செப்டம்பர் 20ம் திகதிய தேர்தலில் எமது அரசாங்கத்தை மீண்டும் பெரும்பான்மை பலம் கொண்டதாக தேர்ந்தெடுக்க கனடிய மக்கள் விரும்பினால் எமக்கு வாக்களிக்கலாம். அல்லது கொன்சர்வேர்ட்டிவ் கட்சியை தேர்ந்தெடுக்க விரும்பினால் அவ்வாறு செய்யலாம். இதுவே எமது தலைவர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்களின் எண்ணமாகும்.

கனடியர்கள் மீண்டும் எமது லிபரல் அரசாங்கத்திற்கு வழங்கி அதன் மூலம் ஒரு புதிய ஆணையை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்களுக்கு வழங்குவதே தற்போதைய சூழலில் சிறந்த ஒரு முடிவாகும்" இவ்வாறு தெரிவித்தார், ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், நடைபெறவுள்ள தேர்தலில் மீண்டும் வேட்பாளராகப் போட்டியிடுபவருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவித்தார்.

*(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)*

# 'கனடாவில் தமிழர் சமூகத்தின் வளர்ச்சியானது கனடாவின் வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றது'

## - பிரம்டன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுண் புகழாரம்



"கனடாவில் கடந்த 35 வருடங்களாகவே தமிழ் மக்கள் பெருமளவில் குடியேறத் தொடங்கினார்கள். ஆனால் இவ்வாறு குடியேறிய தமிழர் சமூகத்தின் வளர்ச்சியானது அவர்களை ஏனைய சமூகத்தினர் போற்றுகின்ற நிலைக்கு உயர்த்தியிருக்கின்றது. அத்துடன் தமிழ்க் கனடியர்களின் வளர்ச்சியானது, கனடாவின் வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றது. அத்துடன் எனது அரசியல் பாதையிலும் தமிழ் மக்கள் எனக்கு செங்கம்பளம் விரித்ததை நான் என்றும் மறக்கப்போவதில்லை. இவ்வாறான எனது அரசியல் வெற்றிகளுக்கு கைகொடுத்த பலருள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தற்போதைய தலைவர் **சாந்தா பஞ்சலிங்கமும்** ஒருவர்..."

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று மார்க்கம் நகரில் நடைபெற்ற கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமையகக் கட்டடத்தின் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பிரம்டன் மாநகர மேயர் **பெற்றிக் பிரவுண்** புகழாரம் சூட்டினார். மேயர் **பெற்றிக் பிரவுண்** அவர்களே நாடாவை வெட்டி புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். தலைவர் திரு சாந்தா பஞ்சலிங்கம் தலைமையில் பொறுப்பேற்ற, இயக்குனர் சபையே முன்னின்று இயங்கி அதற்குரிய நிதியை திரட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal Express Services Available

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 272 1222
905 794 4404

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

# தலிபான் ஆட்சியும் உலக அரசியலும் – ஒரு விமர்சனப் பார்வை

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி மலரவிருக்கிறது. மிக நீண்ட நாட்களாக அடிமைப்பட்டு, உலகின் சகல வல்லரசுகளின் பலப்பரீட்சைக் களமாக இருந்து வந்த நாடொன்று, மிகப் பெரிய வல்லரசொன்றின் 'மிஷன் இம்பொசிபிள்' என்கின்ற சுலோகத்தோடு கூடிய பின்வாங்கலோடு தனது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியிருக்கிறது. சுருக்கமாகக் கூறுவதானால் தங்களது இயலாமையை ஒப்புக் கொண்டு அமெரிக்கா எனும் வல்லூறு வெளியேறுவதென்பது உலக சரித்திரத்தில் இடம்பெறப் போகின்றது. நாம் ஒரு சரித்திர சம்பவத்தின் சாட்சிகளாக அமைந்து இருக்கிறோம். 'இன்னும் எவ்வளவு காலம்தான் அந்த நாட்டில் கால் பதித்து நின்றாலும் இறுதி முடிவு இதுவேதான்' என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியதை நினைவு கூரலாம். 'அந்த நாட்டில் இருந்தே தெரிவு செய்யப்பட்ட மக்களால் கட்டமைக்கப்பட்ட ராணுவம் போரிட மறுக்கும் பொழுது எங்களது ராணுவத்துக்கு அங்கே போரிட்டு மடிய எந்தவிதக் காரணமும் இல்லை' என்கின்றார் அவர்.

அதற்கு ஒரு படி மேலே போய், 'நாங்கள் அங்கு சென்றதே ஒசாமா பின் லாடனை கொல்வதற்காகத்தான், அதனை நிறைவேற்றி விட்டோம். இனிமேல் எங்களுக்கு அங்கு எந்த வேலையும் இல்லை' என்று வெள்ளை மாளிகை அறிவித்து இருக்கிறது. ஒசாமா கொல்லப்பட்டு பத்து வருடங்களாகி விட்டன. ஆனால் இப்பொழுது தான் தங்களது மிஷன் நிறைவேறி விட்டதாக வெள்ளை மாளிகையின் மண்டையில் உறைத்திருக்கிறது. இந்த சாக்குப் போக்கெல்லாம் கவைக்குதவாத கதைகள். அங்கே இருக்கின்ற மண்ணின் மைந்தர்கள் தங்களது சகோதரரை எதிர்த்துப் போரிடத் தயாராக இல்லை என்பது இவர்களுக்கு நன்றாக விளங்கி விட்டது.

தங்களது கட்டுப்பாட்டில் இல்லாத நாடுகளில் கால் பதிப்பதற்கு இஸ்லாத்தையும் இஸ்லாமியர்களையும் கேவலமாகக் காட்சிப்படுத்தி, தங்கள் ஊடகங்கள் மூலமாக உலகம் முழுவதும் இஸ்லாமோபோபியா என்கின்ற வியாதியினை விதைத்து, பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டுப் பல நாடுகளுக்குள் புகுந்தார்கள். லிபியா, சிரியா, ஈராக், யெமன் என்று பல நாடுகளில் மக்கள் புரட்சி என்கின்ற பெயரில் பலவிதமான ஈனச் செயல்களில் ஈடுபட்டு, பல லட்சம் மக்களைக் கொன்று குவித்துக் கடைசியாகக் 'கண்டது எதுவுமில்லை கண்ணே ரகுமானே' என்று ஒவ்வொன்றாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த யுத்தங்கள் யாவற்றிலும் பெற்றவை யாவற்றையும் ஆப்கானிஸ்தானில் மொத்தமாகத் தொலைத்திருக்கின்றார்கள், தங்களது மரியாதையையும் சேர்த்து. அவர்கள் உட்புகப் பயந்த ஒரே நாடாக ஈரான் இருக்கிறது. 1979 ம் ஆண்டு ஈரான் புரட்சியின் போது தங்களது தூதரக அதிகாரிகளை சிறைப்பிடித்து 555 நாட்கள் வைத்திருந்த ஈரானிய மாணவர் படையினை அவர்கள் மன்னிக்கத் தயாராக இல்லை. ஈரானுக்கு ஒரு பாடம் படித்துக் கொடுப்பதற்காக அந்த நாட்டைச் சுற்றி ஒரு வியூகம் அமைத்தார்கள். ஒரு புறத்தில் ஈராக், மறுபுறத்தில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் அவர்களின் ஆதிக்கம் ஏற்கனவே இருந்தது. நடுவே ஈரானை துவம்சம் செய்வதே அவர்களின் ஒரேயொரு நோக்கம். ஆனால் ஆப்கான் நிலைமை சாதகமாக அமையவில்லை. காலூன்றுவதே கடினமான ஒரு விடயமாகிப் போனது. ஈரான் கூட எத்தனையோ பொருளாதாரத் தடைகளுக்கும் நடுவே இன்னும் விழுந்து விடாது நின்று பிடிக்கிறது. ஈராக்கின் பெரும் படைபலத்துடன் மேற்குலக ஆயுதங்களைக் கூட எட்டு வருட காலம் எதிர்த்து நின்ற மனவலிமை மிக்க நாடல்லவா அது?!

எல்லாவற்றுக்கும் நடுவே உண்மைகளை வெளியில் கொண்டுவருகின்ற ஊடகமாக அல்ஜசீரா உருவெடுத்து விட்டது. மேற்குலக ஊடகங்களுக்கு நடுவே அந்த ஊடகம் பல நேரங்களில் உண்மையை உலகுக்கு உரைத்தது. அவர்களின் ஊதுகுழல்களுக்கு சமமாக அது வளர்ந்த பொழுது, கட்டாருக்கு அழுத்தம் கொடுத்து அதனை மூடிவிட முயற்சி எடுத்தார்கள். முடியாமல் போகவே அவர்களின் பரகசிய கூட்டாளி சவூதி அரேபியா மூலமாகப் பொருளாதாரத் தடை கொண்டு வந்தார்கள். கட்டார் அதனை சமயோசிதமாக முறியடிக்க ஈரான் உதவி செய்தது. கட்டாரின் மேல் இன்னுமொரு விடயத்திலும் அவர்களுக்கு வெஞ்சினம் இருந்து கொண்டிருந்தது. அதாவது, ஹமாஸ் இயக்கத் தலைவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்ற ஒரே நாடு அதுதான். அது போன்று தாலிபானுக்கும் களம் அமைத்துக் கொடுத்தது அந்த நாடுதான். ஆனால் பொருளாதாரத்தில் அசைக்க முடியாத இடத்தில் இருக்கின்ற காரணத்தாலும், அந்த நாட்டுத் தலைமைத்துவம் யாருக்கும் அடிமையாகாது இருக்கின்ற காரணத்தாலும் கட்டாரை வழிக்குக் கொண்டு வர முடியவில்லை.

இப்படியான பின்புலத்தில் தான் தாலிபானின் வெற்றியை எடை போட வேண்டியுள்ளது. ஆப்கானிஸ்தான் நூறு வருடங்களுக்கு மேல் யுத்த பூமியாகவே இருந்து விட்ட காரணத்தால், அந்த மக்களால் வெளியுலக மக்கள் போன்று நாகரீகம் என்று மேற்குலகு கற்பிக்கின்ற, பெண்களைத் தாங்களாகவே ஆடைகளையச் செய்து, அவர்களின் அழகையும் கவர்ச்சியையும் காசாக மாற்றுகின்ற வித்தை அந்த மக்களை சென்றடையவில்லை. ஆண்கள் கூட கல்வியை முன்னெடுக்க முடியாதவாறு யுத்தத்தில் மூழ்கடிக்கப்பட்டுக் கிடக்கின்ற பொழுது பெண்களின் கல்வியை நோக்கி முன்னேறுவது நினைத்தும் பார்க்க முடியாத காரியம்.

இலங்கை போன்ற நாட்டில் கூட, சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் ஆண்கள் கூடக் கல்வியில் முன்னேறாத சமூகமாகவே முஸ்லீம் சமூகம் இருந்தது. பெண்கள் கல்வி கற்க முற்பட்ட பொழுதெல்லாம் வசை பாடி ஏளனம் செய்யும் சமூகமாக இருந்த மக்கள்தான் இன்றைக்கு சமூக வலைத்தளங்களில் தலிபான்களின் பிற்போக்குத்தனம் குறித்து வழக்காடுகின்றனர். எனது தாய் திருமணம் செய்யும் பொழுது அவருக்கு வயது ஒன்பது, எனது மாமியின் திருமணத்தின் போது அவரின் வயது ஏழு. அவரின் மாப்பிள்ளை படித்த குடும்பத்தைச் சேர்ந்த கிராமத் தலைவர். அதாவது அந்த நாட்களில் ஜி எஸ் மாரை 'வில்லேஜ் ஹெட் மேன்' என்று அழைப்பார்கள்.

நாட்டின் அரைவாசிக்கு மேற்பட்ட மக்களுக்கு மின்சாரமே சென்றடையாத நாட்டில், இன்டர்நெட், கம்ப்யூட்டர், கைப்பேசிகள், வானொலி, தொலைக்காட்சி என்று எவைதான் சென்றடைந்திருக்க முடியும். வெளியுலகத்தைப் பார்ப்பதற்கு சந்தர்ப்பமே வழங்கப்படாத ஒரு நாட்டு மக்களுக்கு அவற்றைக் கொண்டு சேர்க்க வேண்டிய கடமை ஏனையோருக்கு இருக்கிறது.

அது மட்டுமல்லாது, எமது இலங்கை போன்ற நாட்டில் இருந்த பெண் கல்வி ஹராம் என்று போதிக்கின்ற முல்லாக்கள் இன்னும் அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இஜ்மா, கியாஸ் அடிப்படையில் கால மாற்றத்தின் விளைவுகளையும் நவீன தொழிநுட்ப விடயங்களையும் அவர்களின் வாழ்வுடன் இணைப்பதற்கான முயற்சிகளை உலமாக்கள்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN: 416-894-6244

### வீடு மனை விற்பனை

இந்தியா, சென்னை நகருக்கு அருகில், பட்டா அங்கீகாரம் பெற்ற வீடு கட்டுவதற்கு உகந்த காலி மனை விற்பனைக்கு உள்ளது.

அனுகவும்: ரஹ்மான் அலி

647-581-2814

### Tutoring Available

Private and group tutoring available. Offering help on all subjects up to grade 12. Learn French language (conversation, vocabulary, written). Providing help with your assignments, homework, and school work.

Contact: 647-877-6457 or premithira@hotmail.com

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician

உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415

### Basement for Rent

Markham & Denison சந்திப்பிற்கு மிக அருகில் 2 படுக்கை அறைகளுடன் கூடிய புத்தம் புதிய basement அனைத்து வசதிகளுடன் உடனடியாக வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

(647) 858-2290

### Basement for Rent

Midland & St. Clair சந்திப்பிற்கு அருகில் (nearby to Midland & Eglinton) 1 bedroom basement with separate entrance, full bathroom, kitchen, laundry, parking, utilities & Wifi உடனடியாக வாடகைக்கு உண்டு.

Call: AJOPANA

(416) 825-6880

### பெண்களுக்கு வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் மார்க்கம்-ஸ்டீல்ஸ் சந்திப்புக்கு அருகில் உள்ள தையல் நிறுவனத்தில் வேலை செய்ய தையல் (ளநறபைெ) தெரிந்த பெண்கள் தேவை.

தொடர்புகளுக்கு:

(416) 419-3078

### வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் அமைந்துள்ள Rehabilitation Clinic ஒன்றுக்கு முழு நேர அல்லது பகுதி நேர அலுவலக உதவியாளர் உடனடியாகத் தேவை.

போதிய ஆங்கில, தமிழ் அறிவு, மற்றும் கொம்பியூட்டரில் வேலை செய்த அனுபவம் அவசியம்.

**Salary: From $15.00 per hour**

**Email resume to:**

admin@scarboroughrehab.com

### TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

### வேலைக்கு ஆட்கள் தேவை

மார்க்கத்தில் அமைந்துள்ள சூரிய மின்சக்தி உருவாக்கும் தொழில்நுட்ப நிறுவனம் எங்கள் தொழில் வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்ற சுய ஊக்கம் மற்றும் ஆர்வமுள்ளவர்களைத் தேடுகிறது. தெரிவு செய்யப்பட்டவர்கள் எங்கள் நிறுவல் மற்றும் பொறியியல் குழுக்களுடன் இணைந்து சூரிய மின்சக்தி உருவாக்கும், EV சார்ஜர்கள், மற்றும் பிற உபகரணங்களை வீடு, வணிக நிறுவனங்களில் பாதுகாப்பாகவும் செவ்வனேவும் நிறுவி பராமரிக்க வேண்டும்.

எங்கள் குழு உறுப்பினர்கள் சூரிய மின்சக்தி அமைப்புகள் மற்றும் பிற உபகரணங்களை பாதுகாப்பு நடைமுறையும், தரங்களையும் கடைப்பிடித்து திற-மையாக சரியான நேரத்தில் நிறுவி பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிப்பர்.

பின்வரும் பதவிகளுக்கு முழுநேர, பகுதிநேர மற்றும் ஒப்பந்தத்திற்கு வேலை செய்யும் ஆட்கள் தேவை:

1. Solar Panel installers
2. Project coordinator
3. Field Technician
4. Electrician
5. HVAC Technicians

உங்களிடம் திறமையுடன் வெற்றிபெறும் மனப்பான்மை இருப்பதாக நீங்கள் கருதினால் உங்களது விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலமாக admin@newdawn-es.com க்கு அனுப்பி வையுங்கள்.

மேல் கூறிய பதவிகளைப் பற்றி கேள்விகள் இருந்தால் எங்களை (416) 855-9377 இல் தொடர்பு கொள்ளவும்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


## உதயன் கதிரோட்டம்

# தலிபான்களின் ஆட்சியும் தமிழீழத்தின் வீழ்ச்சியும்

உலகில் ஆயுதங்களுடன் திரியும் மிகவும் ஆபத்தான மதவாதிகள் என்று கருதப்பட்ட தலிபான்களின் ஆட்சி ஆப்கானிஸ்தானின் மலரப்போகின்றது என்ற செய்தி வெளியாகி சில நாட்களே ஆகின்றன.

ஆனால் தமிழீழம் என்ற எம் மக்களின் கனவு உலக நாடுகள் ஒன்று சேர்ந்து நின்று அரங்கேற்றிய சர்வதேச அரச பயங்கரவாதத்தின் காலடியில் அகப்பட்டும் ஒடுக்கப்பட்டும் போக, இதே தமிழீழக் கனவு, மீண்டும் தமிழர் மனங்களில் துளிர் விட்டுவிடக் கூடாது என்பதில் பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் மாத்திரமல்ல எம்மொழி பேசுகின்ற அரசியல்வாதிகளும் அக்கறையும் அவாவும் கொண்டு செயற்படுகின்ற காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

தலிபான்களுக்கும் கனவுகள் நிறையவே இருந்திருக்கும். ஆனால் அவை தகர்ந்து போகவிடாமல் காத்து நின்று தலிபான்களின் ஆயுத பலம் அழிந்து விடாமல் ஆதரவு வழங்கிய சில நாடுகளைப் போன்றில்லாமல், 'தமிழீழம்' என்னும் கனவையும் அந்த வன்னி மண்ணில் தோன்றிய எழுச்சி மிகு காட்சிகளையும் அழித்தொழிக்க உலகின் வல்லரசுகளும் வறுமையில் வாடிய நாடுகளும் கைகோர்த்த வண்ணம் வன்னி மண்ணில் களத்தில் இறங்கிய நாட்களின் வடுக்கள் இன்னும் எம் மனங்களிலிருந்து அழிந்து போகவில்லை.

இவ்வாறான காலப்பகுதியில் தான் தலிபான்களின் கைகளுக்கு ஆப்கானிஸ்த்தான் என்னும் இஸ்லாமிய தேசம் பரிசாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தின் 'கதிரோட்டத்தின்' தலைப்பை படிப்பவர்கள் "இது என்ன? மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போல உள்ளதே" என்று எண்ணலாம். எனினும் 2009ம் ஆண்டு தங்களுக்குள் எதிர்ப்புணர்வு கொண்ட சில நாடுகள் கூட விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அவர்களின் தமிழ் ஈழம் என்ற கனவையும் அழித்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் தங்களுக்குள் இருந்த பகைமையை மறந்து வன்னியின் வான் பரப்பில் வட்டமிட்ட நாட்கள் மீண்டும் எம் மனங்களில் வந்து தாங்க முடியாக கவலையையும் கோபத்தையும் ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது, இந்த தலிபான்களின் ஆட்சி அமைந்த செய்திகள் வெளியான பின்னரே என்றால் அது பொய்யல்ல.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமை தான் கைது செய்து சிறைகளில் வைத்திருந்த இலங்கை அரசின் காவல்துறை மற்றும் இராணுவம் ஆகியவற்றில் பணிபுரிந்தவர்களையே தகுந்த முறையில் பராமரித்தது உபசரித்தது மட்டுமன்றி, அவர்கள் விடுதலை செய்யப்பட்ட போது தங்கச் சங்கிலிகள் கூட விடுதலைப் புலிகளால் பரிசாக வழங்கப்பட்டன என்பதெல்லாம் அப்போது தென்னிலங்கையின் சிங்கள மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் செய்திகளாக வெளிவந்தன.

இந்த செய்திகளுக்கு மாறாக, ஆப்கானிஸ்த்தானில் அமைந்திருந்த மிகவும் உயரமான புத்தர் சிலையை பகிரங்கமாக அறிவித்துவிட்டு தகர்த்து எறிந்தவர்கள் இந்த தலிபான் இயக்கத்தினர். ஊலிகல் இலங்கை உட்பட பல பௌத்தத்தைப் பின்பற்றும் நாடுகள் கண்டனத்தை வெளிப்படுத்தியும் கூட தங்கள் மூர்க்கத் தனமான காரியத்தை தலிபான்கள் அப்போது கைவிடவில்லை

முப்படைகளாம் தரைப்படை, விமானப்படை, கடற்படை என்ற பலத்தோடு இருந்தாலும் மிருகத்தனமாக அப்பாவி மக்களை கொன்றழிக்கும் செயல்களின் விடுதலைப் புலிகளின் தலைமை செயற்பட்டதற்கு எந்த ஆதாரமும் இருக்கவில்லை. ஆனால் தலிபான்கள் தம் சொந்த நாட்டு பெண்களையே கொலை செய்து வீதியில் சடலாமாகப் போட்டுச் சென்ற காட்சிகளை கண்களால் பார்த்து கண்ணீர் வடித்தவர்கள் தமிழீழக் கனவைக் கொண்டிருந்த எம் மக்கள்.

.இவ்வாறாக இந்தப் பக்கத்திலி இவ்வாரம் பதியப்பட வேண்டிய விடயங்கள் ஏராளம் இருக்கின்றன. முடிந்து போன 'கதை' யாக இருக்கின்ற தமிழீழம் என்ற கனவை மேலும் சிதைக்கத் தயாராகும் தமிழ் பேசும் அரசியல்வாதிகளும் அமைப்புக்களின் தலைவர்களும் இன்னும் எம் தமிழீழ மண்ணில் இருக்கின்றபோது, நாம் இந்த தலிபான்களை தரக்குறைவாக எழுதுவதற்காக இந்த தலைப்பை தேர்ந்தெடுக்கவில்லை.

ஆனால், உலகில் நன்கு வளர்ச்சியடைந்து ,இராணுவம் மற்றும் அரசியல் துறைகளில் பலமாக விளங்கிய விடுதலைப் புலிகளின் கனவு நிஜமாகியிருந்தால் எமது மண் மட்டுமல்ல அருகில் உள்ள தமிழ் நாட்டு மக்களும் மகிழ்ந்திருப்பார்கள். ஆனால் தலிபான்களின் வருகை கண்டு அங்கிருந்து வெளியேறத் துடிக்கும் அந்த நாட்டு மக்களில் ஒரு பகுதியினரும் இது வரை தங்கள் உயிர்களை இழந்த பலரும் அங்கு தலிபான்களின் இருப்பை விரும்பாமல் இருக்கும் போது மக்கள் விரும்பிய தமிழீழம் என்ற கனவை அழித்த அந்த நாட்களை ஆழ்ந்த கவலைகளுடன் எண்ணிப்பார்ப்பது எமக்கு தவிர்க்க முடியாத ஒன்றாகியுள்ளது. அதுவே இவ்வாரக் கதிரோட்டத்தின் நோக்கமாக உள்ளது.

# ஆப்கானிஸ்த்தான் தேசிய இளைஞர் உதைப்பந்தாட்ட அணியின் வீரர் ஜக்கி அன்வாரி விமான விபத்தில் மரணம்



தற்போது தலிபான்களின் கைகளில் வந்திருக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டின் ஆட்சி அதிகாரம் ஆரம்பமாகும் நிலையில் அங்கு இடம்பெற்ற விபத்து ஒன்றில் நாட்டின் தேசிய இளைஞர் அணி உதைப்பந்தாட்ட வீரர்களில் ஒருவரான ஜக்கி அன்வாரி காபூல் விமான நிலையத்தில் அமெரிக்க விமானத்தில் இருந்து விழுந்து மரணத்தை தழுவினார் என வெளிநாட்டு செய்தி ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது. .

மரணமடைந்து ஜக்கி அன்வாரி அன்றைய தினம் ஆயிரக்கணக்கான ஏனைய ஆப்கானிஸ்தான் மக்களைப் போன்றே அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற மக்களோடு தானும் ஒருவராய் ஞாயிற்றுக்கிழமை தலிபான்கள் தலைநகரைக் கைப்பற்றியதிலிருந்து விமான நிலையத்திற்கு ஓடியுள்ளனர் . அங்கு பலரும் நகர்ந்து கொண்டிருந்த விமானத்தில் ஏறுவதற்கு முயன்றனர். இந்த காட்சிகள் வியத்தகுந்த வகையில் இருந்ததாகவும் மயிர்க் கூச்செறிம் வகையில் காணப்பட்டதாகவும் இருந்ததாக செய்திகள் தெரிவித்துள்ளனர் சிலர் நகரும் விமானத்தில் ஏற முயன்றனர்.

இதேவேளை ஆப்கானிஸ்த்தான் அரியானா உதைப் பந்தாட்ட நிறுவனம் வெளியிட்ட தகவலின்படி , தேசிய இளைஞர் அணி உதைப்பந்தாட்ட வீரர் ஜக்கி அன்வாரி திங்களன்று யுஎஸ்ஏஎ.ஃப் போயிங் சி -17 இலிருந்து கீழே விழுந்தார் எனவும் அவரது மரணத்தை ஆப்கானிஸ்த்தானின் விளையாட்டுக்கான பொது இயக்குனர் அலுவலகம் உறுதி செய்துள்ளதாகவும் அறியப்படுகின்றது

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, அமெரிக்க இராணுவ விமானத்தின் வெளியில் பிடித்துக் கொள்ள முயன்ற 19 வயது இளைஞர் இறந்திருக்கலாம் என்றும் விமானத்தின் ஒரு கருவிக்குள் அகப்பட்டு அவர் இறந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.,

ஹமீத் கர்சாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமானம் புறப்படுவதற்கு முன்பு ஆப்கானிஸ்தான் பொதுமக்கள் நகர்ந்து கொண்டிருந்த விமானத்தைச் சுற்றிச சுற்றி ஓடியதால் என்ன நடந்தது எவ்வாறு மரணம் சம்பவித்தது என விசாரணைகள் நடைபெறுவதாக அமெரிக்க விமானப்படை புதன்கிழமை தெரிவித்துள்ளது.

காபூலை தலிபான் ஆட்சியாளர்கள் கைப்பற்றிய பின்னர், ஆப்கானிஸ்தான் பொதுமக்கள், ராணுவ விமானத்தின் தரையில் ஒருவரையொருவர் வளைத்துக் கொண்டு நெருக்கிக் கொண்டிருப்பது போன்ற புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலானது.

ஆப்கானிஸ்தானின் தலைநகரில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் இருந்து விமானம் புறப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர், இது அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளால் பயன்படுத்தப்பட்ட இராணுவ சரக்கு விமானம் எனக் கூறப்படுகின்றது

இந்த சம்பவம் தொடர்பாக வெளிநாட்டு ச் செய்தியாளர்களின் தகவல்களின் படி கத்தார் அல் உதீத் விமான தளத்தில் விமானம் தரையிறங்கிய போதுஅதன் அடியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன" என்றும் தெரிவிக்கப்பட்டது.








Tamil Fest
தமிழர் தெரு விழா
POWERED BY:
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
TAMIL FEST 2021
DRIVE-IN & VIRTUAL CONCERT
AUGUST 28TH & 29TH
4:00 PM EST
Mega Tuners
Shianaaz
WWW.TAMILFEST.CA
TITLE SPONSOR
POWERED BY SPONSOR
SUPPORTED BY
Canada
TORONTO
#SHOW LOVE TO
MEDIA SPONSORS
ATN
east FM 102.7
SILVER SPONSORS
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
Edward Jones
MAKING SENSE OF INVESTING
RAJ THAVARATNASINGHAM
FINANCIAL ADVISOR
HONDA
Formula Honda
Where You're Treated like Family.
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Future Realty Inc.
JC's BANQUET & CONVENTION CENTRE
NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
Pradon Silks
VIBRANT HOSPITALITY GROUP

கனடிய செய்திகள்
Canadian News

# The Official Grand Opening Ceremony of the New Head Quarters for Canadian Tamil Chamber of Commerce

# "கனடாவில் தமிழர் சமூகத்தின் வளர்ச்சியானது கனடாவின் வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றது"

## கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமையகக் கட்டடத்தின் திறப்பு விழாவில் பிரம்டன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுண் புகழாரம்



"கனடாவில் கடந்த 35 வருடங்களாகவே தமிழ் மக்கள் பெருமளவில் குடியேறத் தொடங்கினார்கள். ஆனால் இவ்வாறு குடியேறிய தமிழர் சமூகத்தின் வளர்ச்சியானது அவர்களை ஏனைய சமூகத்தினர் போற்றுகின்ற நிலைக்கு உயர்த்தியிருக்கின்றது. அத்துடன் தமிழ்க் கனடியர்களின் வளர்ச்சியானது, கனடாவின் வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றது. அத்துடன் எனது அரசியல் பாதையிலும் தமிழ் மக்கள் எனக்கு செங்கம்பளம் விரித்ததை நான் என்றும் மறக்கப்போவதில்லை. இவ்வாறான எனது அரசியல் வெற்றிகளுக்கு கைகொடுத்த பலருள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தற்போதைய தலைவர் சாந்தா பஞ்சலிங்கமும் ஒருவர் என் நான் மகிழ்ச்சியுடன் கூறுவேன். இதைப்போன்றே ஒன்றாரியோ மாகாண சபையில் அங்கத்தவர்களாக உள்ள லோகன் கணபதி மற்றும் விஜேய் தணிகாசலம் ஆகியோரின் மக்கள் சேவையையும் நான் போற்றுகின்றேன்".

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று மார்க்கம் நகரில் நடைபெற்ற அமைக்கப்பெற்றிருந்தன.

விழாவிற்கு வருகை தந்தவர்களுக்கு குளிர்பானங்களும் சிற்றுண்டிகளும் முதலில் வழங்கப்பெற்று பின்னர் மதிய உணவு விருந்துபசாரமும் இடம்பெற்றது.

உரிய நேரம் நெருங்கிய போது சிறந்த ஏற்பாட்டில் நாடா வெட்டப்பெற்று கட்டடம் திறந்து வைக்கப்பெற்றது. அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் வைபவம் இடம்பெற்றது.


அதனைத் தொடர்ந்து தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன.

அங்கு மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி உரையாற்றும் போது, தனது தொகுதியான மார்க்கம் தோர்ன்ஹில் மாகாண சபை தொகுதிக்குள் இந்த புதிய கட்டடம் அமைவதை வரவேற்பதாகவும் தொடர்ந்து மாகாண அரசின் ஊடாக தேவையான உதவியைப் பெற்றுத் தர தான் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பின்னர் விழாவை முன்னாள் தலைவர்களில் ஒருவரான கென் கிருபா அவர்கள் தொகுத்து வழங்கினார். சில பிரமுகர்கள் உரையாற்றியதைத் தொடர்ந்து கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தற்போதையத் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் உரையாற்றினார். அவர் தனது உரையை தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆற்றினார்.

















கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமையகக் கட்டடத்தின் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பிரம்டன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுண் புகழாரம் சூட்டினார். அன்றைய தினம் பெருந்திரளான வர்த்தக நண்பர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் ஆகியோர் கலந்து கொண்ட மேற்படி விழாவில் மேயர் பெற்றிக் பிரவுண் அவர்களே நாடாவை வெட்டி புதிய கட்டடத்தை திறந்து வைத்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்திற்குச் சொந்தமான இந்த கட்டடத்தை தற்போதைய தலைவர் திரு சாந்தா பஞ்சலிங்கம் தலைமையில் பொறுப்பேற்ற, இயக்குனர் சபையே முன்னின்று இயங்கி அதற்குரிய நிதியை திரட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், வர்த்தக சம்மேளத்தின் அங்கத்தவர்கள் மற்றும் இயக்குனர் சபை உறுப்பினர் ஆகியோரிடமிருந்தும் ஏனைய பல தமிழ்க் கனேடியர்கள் மற்றும் வர்த்தகத் துறை வெற்றியாளர் ஆகியோரிடமிருந்தும் பெற்று எவ்வித கடன் தொகையும் இல்லாது இந்த கட்டடம் கொள்வனவு செய்யப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி கட்டடத திறப்புவிழாவிற்கு ஒன்றாரியோ மாகாண சபையின் அங்கத்தவர்களான திருவாளர்கள் லோகன் கணபதி மற்றும் விஜேய் தணிகாசலம் ஆகியோரும் பெருமளவு நிதியை வழங்கிய தமிழ்க் கனடிய வர்த்தகப் பிரமுகரான திரு டன்ஸ்ரன் பீற்றர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பெற்றிருந்தனர். மிகவும் அழகிய முறையில் கட்டடத்தின் உற்பகுதி திருத்தியமைக்கப்பெற்று அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு தொகுதியாக காணப்படுகின்றது. அங்கு ஒரு கலந்துரையாடல் அறை மற்றும் கூட்ட மண்டபம் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்ட தகவல் தொழில் நுட்ப அறை ஆகியன அமைக்கப்பெற்றுள்ளன. அத்துடன் விருந்தினர் அறை வரவேற்பாளர் பகுதி ஆகியன நேர்த்தியாக

அவர் தனது உரையின் போது, சம்மேளனத்தின் தலைமைப் பதவியை தான் ஏற்பதற்கு தனக்கு ஆதரவாக இருந்த அனைத்து வர்த்தக நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்து தொடர்ந்து தனது கனவுகளில் ஒன்றாக விளங்கிய இந்த புதிய கட்டடத்திட்டத்திற்கு தன்னோடு ஒத்துழைத்து அதை நனவாக்க அருகில் இருந்து செயற்பட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்ததோடு தன்னில் முழு நம்பிக்கை வைத்து தங்கள் கடமைகளை செவ்வனே ஆற்றிவரும் சமமேளனத்தின் இயக்குனர் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் தான் மிகவும் கடமைப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் எமது நிர்வாகத்தில் எவ்வித கடனும் அற்ற நிலையில் கொள்வனவு செய்யப்பெற்ற இந்த தலைமைகம் எதிர்காலத்தில் பதவியேற்கும் இயக்குனர் சபையினருக்கும் அங்கத்தவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்றும் இதன் மூலம் எமது சம்மேளனத் எமது தமிழர் சமூகத்திற்கும் நாம் வாழும் இந்த கனடிய தேசத்திற்கும் சிறந்த சேவையை ஆற்றலாம் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

**(News and photos by Sathiyan)**





# அமைச்சரவை மாற்றம்: வைரசுக்குச் சோதனையா? அமைச்சருக்குச் சோதனையா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

டெல்டா திரிபினால் ஒன்பது நிமிடங்களுக்கு ஒரு மரணம் நிகழ்வதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார கூறியிருக்கும் ஒரு பின்னணியில் பொருளாதார நெருக்கடி நாட்டை அழுத்திக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் விலையேற்றத்தால் மக்கள் அதிகரித்த சுமையை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் மாற்றங்களைச் செய்திருக்கிறது.

ஹெகலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அது தொடர்பாக முகநூலில் எழுதப்பட்ட குறிப்புகளில் அவர் முன்னைய அரசாங்கத்தில் பாதுகாப்புத்துறை பேச்சாளராக இருந்தபோது யுத்த நிலவரங்கள் தொடர்பாக எப்படிப்பட்ட உண்மைகளை கூறியிருந்தார் என்பது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆனால் அவர் அமைச்சராக வர முன்னரே கோவிட்-19 தொடர்பான உத்தியோகபூர்வ தகவல்களில் உண்மை இல்லை என்ற குற்றச்சாட்டு எழுந்து விட்டது.

பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் பின்வருமாறு கூறுகிறார்... "கொரோனா தொற்று தொடர்பாகச் சரியான புள்ளிவிபரங்கள் கிடைக்கவில்லை. இரசாயான ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்படும் பி.சி.ஆர். அறிக்கை மாத்திரம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. நாளாந்தம் சுகாதார பிரிவில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் விரைவான அன்டிஜன் பரிசோதனை தொடர்பான அறிக்கை புள்ளிவிபரத்தில் இடம்பெறுவதில்லை. அவர்கள் வேண்டும் என்றே செய்கிறார்களோ அல்லது அவர்களின் கவனக் குறைவோ எனத் தெரியவில்லை".

இப்பொழுது ஹெகலிய வந்துவிட்டார். அவர் உத்தியோகப்பற்றற்ற ஒரு தணிக்கையை அமுல்படுத்துவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அரசாங்கம் அமைச்சரவையில் மேற்கொண்டிருக்கும் மாற்றங்கள் நாடு இப்பொழுது எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளை சமாளிக்கும் நோக்கிலானவை என்பதில் சந்தேகமில்லை. இது அமைச்சரவை பொறுத்து இரண்டாவது மாற்றம். முதலாவது பசில் ராஜபக்சவை உள்ளே கொண்டு வந்தது. இப்பொழுது அமைச்சரவை மாற்றம் இதன்மூலம் அரசாங்கம் உள் நோக்கியும் வெளி நோக்கியும் சில சமிக்ஞைகளை காட்டவிரும்புகிறதா?

சலித்துப் போயிருக்கும் சிங்கள மக்களுக்கு ஒரு மாற்றம் என்ற செய்தியை அரசாங்கம் உள்நோக்கிக் காட்ட விளைகிறது. அதேசமயம் வெளியுறவு அமைச்சராக ஜிஎல்பீரிஸை நியமித்ததன்மூலம் வெளிநோக்கி மேற்கு நாடுகளுக்கு ஏதோ ஒன்றை கூறவிரும்புகிறதா? ஏற்கனவே பீரிஸ் சுமந்திரனை இலங்கைக்கான அமெரிக்க தூதுவரின் இல்லத்தில் சந்தித்திருக்கிறார். எனவே அரசாங்கம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளோடு பேச்சுக்களை தொடங்குவதன் மூலம் ஜிஎஸ்பி பிளஸ் சலுகை தொடர்பாக மேலும் சுதாகரிப்புக்களை செய்யப்போகிறதா?

கடந்த ஆட்சியின்போதும் ஜிஎஸ்பி பிளஸ் சலுகை தொடர்பில் ஐரோப்பிய யூனியன் நிபந்தனைகளை விதித்தது. குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் அல்லது அனைத்துலகத் தரத்துக்கு ஏற்ப அதில் மாற்றங்களை செய்ய வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் நிபந்தனை விதித்தது. அப்பொழுது கூட்டமைப்பு அரசாங்கத்தை பிணை எடுத்தது. அதன்மூலம் நிபந்தனையோடு அந்த சலுகை வழங்கப்பட்டது. இப்பொழுது மறுபடியும் அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் இலங்கை அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறது. இதனால் அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்துவதற்காக ஒரு குழுவை நியமித்திருந்தது.அந்த குழுவின் தகைமை குறித்து நிபுணர்கள் ஏற்கனவே கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அரசாங்கம் பெயரளவிலாவது பயங்கரவாத தடைச் சட்டத்தில் சில திருத்தங்களை செய்யக்கூடும். அதன்பின் கூட்டமைப்பு அரசாங்கத்தை பிணை எடுக்குமா இல்லையா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஆனால் பசில் அதற்கான வேலைகளை தொடங்கிவிட்டார் என்பது மட்டும் தெரிகிறது. இது முதலாவது. இரண்டாவது - அதையும் பஸில்தான் முன்னெடுக்கிறார். திருகோணமலை துறைமுகத்தை அண்டிய ஒரு தொகுதி காணிகளை அரசாங்கம் அமெரிக்கா தலைமையிலான குவாட் நாடுகளுக்கு கொடுக்கத் தயாராகி வருவதாக செய்திகள் வெளிவந்தன. இதற்குரிய அமைச்சரவை பத்திரமும் தயாரிக்கப்படுவதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. ஆப்கானில் இருந்து அமெரிக்கா வெளியேறி இருக்கும் ஒரு பின்னணியில் திருகோணமலை துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் காணிகளை பெற்றுக்கொள்ள கொள்ள அமெரிக்கா முயற்சிக்கிறதா? என்ற கேள்விக்கு விடைகாண வேண்டும். இது இரண்டாவது.

மூன்றாவது - அதுவும் பசிலின் வருகையோடுதான் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது. என்னவெனில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரான மிலிந்த மொரகொட இந்தியாவுடன் சேர்ந்து செயல்படுவதற்காக இரண்டு ஆண்டுத் திட்டம் ஒன்றை வரைந்திருப்பதாக வெளிவந்திருக்கும் செய்திகள்.

கோட்டாபய ஜனாதிபதியாக வந்ததும் அவரை இந்தியாவுக்கான தூதுவராக நியமித்தார். அதுமட்டுமல்ல அவருக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்கப் போவதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால் கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கும் மேலாக அந்த நியமனம் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு நிலைமை காணப்பட்டது. இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் இந்தியா அவருக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்க தயாரில்லை என்று கூறப்படுகிறது. அப்படி மிலிந்த மொரகொடவிற்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்குவதாக இருந்தால் அதைப்போல கொழும்பில் இருக்கும் இந்தியத் தூதுவருருக்கும் அமைச்சரவை அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்று இந்தியா நிபந்தனை விதித்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் பசில் ராஜபக்சவின் தலைமையில் புதிதாகக் காய்கள் நகர்த்தப்படுகின்றன. அதிலொன்றாக மிலிந்த மொறக்கொட இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதற்கு இரண்டு ஆண்டுத் திட்டம் ஒன்றை வரைந்திருப்பதாக கூறப்படுகிறது.

எனவே தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெரிகிறது. அரசாங்கம் இந்தியா தொடர்பான அதன் அணுகுமுறைகளில் மாற்றங்களை செய்ய விரும்புகிறது என்று பொருள். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இந்தியா முதலில் என்பதே அதன் வெளியுறவுக் கொள்கை என்று கூறிக்கொண்டாலும் நடைமுறையில் அது இந்தியாவுக்கு ஏமாற்றமளிக்கும் விதத்திலேயே பல விடயங்களிலும் நடந்துகொண்டது. குறிப்பாக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் மற்றும் மேற்கு முனையம் விடயங்களில் இலங்கை அரசாங்கம் இந்தியாவை திருப்திப்படுத்த தவறியது. அடுத்ததாக பலாலி விமான நிலையத்தை அடுத்தகட்டமாக புனரமைப்பதற்கு இந்தியா தயாராக இருந்த போதிலும் அரசாங்கம் Covid-19ஐக் காரணமாக கட்டி அதை தள்ளிப்போட்டு வருகிறது. அது ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு காரணமாகவும் பார்க்கப்படுகிறது.

மூன்றாவது காங்கேசன்துறையில் இருந்து இந்தியாவை நோக்கிய ஒரு கப்பல் பாதையை திறப்பதற்கும் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக ஒப்புதல் தரவில்லை.

இவ்வாறாக இலங்கை அரசாங்கம் இந்தியாவை திருப்திப்படுத்தும் விதத்தில் சில விடயங்களில் நடந்து கொள்ளவில்லை என்று தெரிகிறது. மாறாக முதலீடு என்ற அடிப்படையிலும் கடன் உதவி என்ற அடிப்படையிலும் அரசாங்கம் மேலும் சீனாவை நோக்கி சாயும் நிலைமையே காணப்படுகிறது. இதுபோன்ற பலகாரணங்களையும் முன்வைத்து அரசாங்கத்தின் மீது அழுத்தத்தை பிரயோகிக்கும் விதத்தில் இந்தியா இரண்டாவது வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றுமாறு தமிழ்நாட்டில் உள்ள சில தரப்புக்களை தூண்டியிருக்கலாம் என்று கூறுபவர்களும் உண்டு.

இவ்வாறான ஒரு பின்னணியில் பசில் ராஜபக்ச நாடாளுமன்றத்துக்குள் வந்ததும் அவர் ஒரே நேரத்தில் அமெரிக்காவை நோக்கியும் இந்தியாவை நோக்கியும் அனுகூலமான அசைவுகளை காட்டத் தொடங்கியிருப்பதாக தெரிகிறது. இவ்வாறான அசைவுகளில் ஆகப் பிந்திய ஒன்றுதான் வெளிவிவகார அமைச்சராக பீரிஸ் நியமிக்கப்பட்டிருப்பதும். ஜி.எல்.பீரிஸ் ஏற்கனவே சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட ஒருவர். மேற்கைப் பொறுத்தவரையிலும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவோடு ஒப்பிடுகையில் கையாள்வதற்கு இலகுவான ஒருவர். அப்படிப்பட்ட ஒருவரை வெளியுறவு அமைச்சராக நியமித்து அதன் மூலம் அரசாங்கம் மேற்கு நாடுகளுக்கு சாதகமான சில கதவுகளை திறக்க முயற்சிக்கின்றதா?

எனவே மேற்கண்ட அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் நமக்கு கிடைக்கும் சித்திரம் என்னவென்றால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பலவகைப்பட்ட நெருக்கடிகள் காரணமாக அரசாங்கம் தனது சில நிலைப்பாடுகளை தளர்த்தத் தொடங்கி இருப்பதாக தெரிகிறது. ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை முன்னிட்டு அரசாங்கம் மேலும் தனது நிலைப்பாடுகளில் நெகிழ்வை காட்டக்கூடும். ஆனால் அரசியல் பொருளாதார ராஜதந்திர பரப்புகளில் முன்னெடுக்கப்படும் இதுபோன்ற சுதாகரிப்புக்கள் யாவும் வைரசுக்கு எதிரான போரில் அரசாங்கம் தனது கவனத்தை முழுமையாக குவிப்பதற்கு உதவுமா?

இக்கட்டுரை எழுதப்படும் காலகட்டத்தில் நாட்டில் ஒக்சிசனுக்கு தட்டுப்பாடு வந்துவிட்டது. அரசாங்கம் இந்தியாவிடம் ஒக்சிசனை வாங்கத் தொடங்கியிருக்கிறது. டெல்டா திரிபு வைரஸ் மேல் மாகாணத்தை கடந்து நாடு முழுவதும் பரவிவருவது தெரிகிறது. இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டதைப்போல கெஹலிய ரம்புக்வெல பெருந் தொற்று நோய் தொடர்பான புள்ளிவிபரங்களில் உண்மைகளைக் கூறலாம் கூறாமல் விடலாம். ஆனால் அவர் Covid-19 தொற்றத் தொடங்கிய காலகட்டத்தில் ஒரு விடயத்தை பிரகடனம் செய்ததை இந்த நினைவூட்ட வேண்டும். விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோற்கடித்த அரசாங்கத்துக்கு ஒரு வைரஸை தோற்கடிப்பது பெரிய காரியம் இல்லை என்ற தொனிப்பட அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால் வைரசுக்கு எதிரான போரும் இன முரண்பாடுகளின் விளைவாக வந்த போரும் ஒன்று அல்ல என்பதை கடந்த சுமார் ஒன்றரை ஆண்டுகாலம் நிரூபித்திருக்கிறது. இதனால் அண்மையில் குறிப்பாக அமைச்சரவை மாற்றத்திற்கு முன்பு ரம்புக்வெல கூறினார் தடுப்பூசியைப் போடுங்கள் ஆனால் கடவுளைப் பிரார்த்தியுங்கள் என்ற தொனிப்பட. கடவுளையும் மந்திரித்த நீரையும் சிங்கள வெதமாத்தையா தம்மிகவின் குடிநீரையும் நம்பிய பவித்திரா வன்னியாராட்சியிடமிருந்து பறிக்கப்பட்ட சுகாதார அமைச்சே இப்பொழுது அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது வைரசுக்கு வந்த சோதனையா? அல்லது அவருக்கு வந்த சோதனையா?

---

**(2ம் பக்கத் தொடர்ச்சி)**

முன்னெடுக்க வேண்டும். இப்பொழுதுதான் வளர்ந்த நாடொன்றில் அவர்களை வலிமை மிகு நாடுகள் சந்தித்து இருக்கின்றன. உலகம் வேறெங்கோ போய் விட்டது என்பதனை அவர்கள் இப்பொழுது உணர்ந்திருக்க வாய்ப்பிருக்கிறது.

அவர்கள் முழுவதுமாக பாகிஸ்தானின் தப்லீக், மற்றும் ஜமாஅதே இஸ்லாமி அமைப்புக்களின் மதரஸாக்களில் இருந்து கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் தான். அமெரிக்காவும் பாகிஸ்தானும் அவர்களை ரஸ்யாவுக்கு எதிராகத் திரட்டி எடுத்து ஏவி விட்டார்கள். அவர்களிடம் தாங்கள் கல்வி கற்ற மத்ரஸாக்களின் கொள்கைகள் கோட்பாடுகள் ஒட்டிக் கொண்டுதான் இருக்கும். அவற்றில் இருந்து விடுபடுதல் சாத்தியமில்லை. இலங்கையில் ஓர் இயக்கம் ஆடிய தாண்டவத்தை கண்முன் கண்டவர்கள் நாம். இந்த இயக்கங்களினால் நலவுகளும் இருக்கின்றன. கெடுதல்களும் இருக்கின்றன. ஆனால் தடுத்து நிறுத்துவது என்பது முடியாத காரியம். அவர்களது செல்வாக்கு மிக்க குருக்களால் மட்டுமே அது சாத்தியமாகும்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் தலிபான்களின் வெற்றி ஒரு சில நாடுகளின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. அவற்றுள் இந்தியா, இஸ்ரேல் ஆகியவை முக்கியமானவை. பாகிஸ்தானை மிரட்டிக் கொண்டு, கா'மீரை கபளீகரம் செய்த இந்தியாவின் பி ஜெ பி அரசுக்கும், ஆர். எஸ். எஸ். இயக்கத்துக்கும் அது ஒரு பயமுறுத்தல்தான். இனிமேல் முஸ்லீம் மக்களின் மீது அநியாயமான இனவெறுப்பு அரசியலை முன்னெடுக்க முடியாமல் நிலைமை மாறலாம். மாட்டு அரசியலும், அடித்தே கொல்லுகின்ற இந்துத்துவா தத்துவத்தின் தீவிரவாதக் கொடுமையும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற உணர்வினை அரசுக்கு ஏற்படுத்தலாம். இல்லையென்றால், தீவிரவாதத்தை தாங்களே வரவேற்கின்ற நிலைமைக்கு அவர்கள் தங்கள் நாட்டினை வழிகாட்டுவதாகவே முடியும்.

அடுத்தது இஸ்ரேல், அவர்களைப் பொறுத்தவரை, ஈரான் மட்டுமே அவர்களின் மிகப்பெரிய எதிரி, மட்டுமல்லாது வெளிப்படையான எதிரியும் கூட. அமெரிக்காவினை ஈரானுக்குள் நுழைத்து அந்த நாட்டை சிதைப்பதற்கு பல்லாண்டு காலமாகத் திட்டமிட்டு காய் நகர்த்துகின்ற நாடு இஸ்ரேல். இனிமேல் எந்தக் காய் நகர்த்தல்களும் எடுபடப் போவதில்லை. இன்னுமொரு படையெடுப்பு நடத்துவதானால் அமெரிக்க மக்களை தயார்படுத்துவதற்கு இன்னுமொரு தலைமுறை பிறந்து வர வேண்டும். பொய்களைக் கட்டமைத்து ஈரானுக்கு எதிராக மக்களின் உணர்வுகளை ஒன்று திரட்ட முடியாது. ஈராக்கிற்கு எதிராகக் கட்டமைத்த பொய்களின் விகாரம் இன்னும் பல்லிளித்து நிற்கிறது. லிபியாவில் நினைத்தவை நடக்கவில்லை. ஈரானுக்குள்ளும் காலை நுழைத்து மீண்டு வர முடியாத சங்கடத்தில் மாட்டிக் கொள்ள அமெரிக்காவால் இந்த ஜென்மத்தில் முடியாது. இன்னுமொரு தோல்வி அமெரிக்காவை புதை குழிக்குள் அமிழ்த்தி விடும். மண்ணின் மைந்தர்களோடு மோதுவதென்பது மிகவும் சிரமமானது என்பதற்கு இஸ்ரேலும் பலஸ்தீனமும் சாட்சி. பாலஸ்தீனத்தை வெல்வதற்கு யூதர்கள் மூஸா நபி அலைஹிஸ்ஸலாத்தின் காலத்தில் இருந்தே போரிட்டு வருகின்றார்கள் என்பதற்கு பைபிளின் பழைய ஏற்பாடு சாட்சியாக இருக்கிறது. உலக அரசியல் என்பது ரசூல் ஸல் அவர்கள் காட்டித் தந்த இஸ்லாத்துக்குப் பின்னர் உருவானதல்ல. அது பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதன் தனது ஆணவத்தால் கட்டமைத்தது. அதில் மதம் தனது பங்கினை காலத்துக்குக் காலம் வகித்து நிற்கும்.

இறுதியாக, ஆப்கானிஸ்தான் ஒரு மாற்றத்தை நோக்கிப் பயணிக்கிறது. இதில் தங்கள் தங்கள் இயக்கம் சார்ந்த, மற்றும் கொள்கை சார்ந்த கருத்துக்களுடன் மோதுவதனை கைவிட்டு, பூகோள அரசியல் மாற்றத்தை அவதானித்து, உலக சமாதானத்துக்காகவும் மனித குல மேன்மைக்காகவும் பிரார்த்திப்போமாக. ஆமீன்.

*டாக்டர் . நஜிமுதீன்*



# ராஜபக்சக்களின் அடுத்த இலக்கு அரசு சார்பற்ற நிறுவனங்கள்?

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**

கடனில் சிக்கித் தவிக்கும் இலங்கை அரசு சோதனை மேல் சோதனையை எதிர்கொண்டு வருகிறது. தான் விரித்த வலையில் தானே சிக்குண்டு தவிக்கும் நிலையில் உள்ளது "முத்து தீவு". அரசியலில் குடும்ப ஆதிக்கம், கிட்டத்தட்ட ஒரு கட்சி ஆட்சி, அனைத்தும் நாமே எனும் இறுமாப்பு, தொடர்ச்சியான சிறுபான்மையினர் விரோத போக்கு, எல்லப் பிரச்சனைகளுக்குமான தீர்வாக பயங்கரவாத தடை சட்டம் எனும் பூச்சாண்டி என்ற அவப்பெயரே பன்னாட்டரங்கில் இலங்கைக்கு நிலவுகிறது.

போர்க் காலத்திலிருந்தே அரசால் செய்ய முடியாத, செய்ய மறுத்த, வசதிகள் இருந்தும் செய்ய விரும்பாத பல வேலைத் திட்டங்களை அரச சார்பற்ற நிறுவங்னகளே நிறைவேற்றி வந்தன. அடிப்படை வசதிகள், மருத்துவ தேவைகள், மகளிருக்கான உதவி என்று பல வகைகளில் அந்த நிறுவனங்கள் செய்து வந்தன. எனினும் பல நாடுகளில் அரச சார்பற்ற அமைப்புகள் மீதிருக்கும் சந்தேகம் இலங்கை அரசுக்கும் ஏற்பட்டுள்ளது.

அவ்வகையில் அரச சார்பற்ற அமைப்புகளின் நடவடிக்கையை முடக்க அல்லது அடிபணியச் செய்ய மொடுக் கட்சியின் அரசு தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. அரச சார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவதாகவும், மேலும் அதை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் பன்னாட்டரங்கில் உறுதியளித்த அரசு இப்போது அந்த நிறுவனங்களை கண்காணிக்கவும், அவர்களின் நிதி ஆதாரங்களின் மூலத்தை உற்று நோக்கவும் எண்ணியுள்ளது. அதற்கான சட்ட வரைவு ஒன்றையும் ராஜபக்ச அரசு உருவாக்குகிறது. இதனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளன.




அரசு சொல்வது ஒன்று செய்வது வேறொன்று என்று அந்த அமைப்புகள் விசனம் வெளியிட்டுள்ளன. அரசின் இந்தப் போக்கு தொடருமாயின் இலங்கையில் உதவி தேவைப்படும் மக்களுக்கு அதை தம்மால் செய்ய முடியாத நிலை உருவாகும் என்று அரச சார்பற்ற அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக ஏற்கனவே நிறுவப்பட்ட செயலகத்தின் கீழ் வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தை உருவாக்க அரசு எண்ணியுள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எங்கிருந்து, எப்படிப் பணம் வருகிறது என்பதைக் கண்காணிக்க மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவு, தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் அலுவலகத்துடன் அரச சார்பற்ற அலுவலகங்களின் செயகலத்தையும் இணைக்க ராஜபக்ச அரசு முடிவு செய்துள்ளதாக நம்பத்தகுந்த செய்திகள் கூறுகின்றன.

இது அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அதில் பணியாற்றும் உள்ளூர் மற்றும் ஒப்பந்த ஊழியர்களிடையே ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.



அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்க, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டது என்று தேசிய சமாதான பேரவை கூறுகிறது. அதேவேளை அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் புதிய சட்டம் அமைதி மற்றும் இந்த நல்லிணக்கத்திற்கு குந்தகம் ஏற்படுத்தி அரசின் நம்பகத்தன்மையை கேள்விக்கு உட்படுத்தும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

"அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்தாமை உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு வழிவகுக்கவில்லை. தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்படி பணப் பரிவர்த்தனைகளை விசாரணை செய்யத் தவறியமை மற்றும் அரசுக்கு வழங்கப்பட்ட புலனாய்வுத் தகவல்களை கருத்திற்கொள்ளாமையே காரணம்" என தேசிய சமாதான பேரவை தெரிவித்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலான எந்த விசாரணையும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் விதிமுறைகளுக்கு ஏற்ப நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ள தேசிய சமாதானப் பேரவை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கைகள் குறித்து முடிவற்ற விவாதம் தொடர்கையில், அரச சார்பற்ற நிறுவனங்களின் பழிவாங்கலை நியாயப்படுத்த முடியாது எனவும் தெரிவித்துள்ளது.

நாட்டில் அமைதி கட்டமைப்பு மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காகச் செயற்படும் தேசிய சமாதானப் பேரவை உள்ளிட்ட முன்னணி அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் இந்த மாதத்தின் முற்பகுதியில் ஜனாதிபதியையும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதோடு, சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியிடம் மனுவொன்றை கையளித்துள்ளனர்.

தேசிய சமாதான பேரவையின் தலைவர் ஜெஹான் பெரேரா, ராஜபக்ச அரசாங்கத்தின் நெருங்கிய கூட்டாளியான கலுபஹனே பியரத்ன தேரர், அருட்தந்தை ஆசிரி பெரேரா, முஸ்லிம் கவுன்சிலின் ஹில்மி அஹமட், செயற்பாடுகளின் போது காணாமல் போன இராணுவ வீரர்களின் உறவினர்களின் அமைப்பை நடத்தும் விசாக தர்மதாச, பெப்ரல் அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாராச்சி, மட்டக்களப்பில் அரச சார்பற்ற அமைப்பை நடத்தும் வர்ணகுலசிங்கம் கமலதாஸ், சஞ்சீவ விமலகுணரத்ன, பேராசிரியர் டி. ஜெயசிங்கம், பேராசிரியர் டியூடர் சில்வா, ஜோ வில்லியம்ஸ் மற்றும் தயானி பனகொட ஆகியோர் குறித்த மனுவில் கையெழுத்திட்டுள்ளனர்.

"பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நீடித்த அமைதியையும் நல்லிணக்கத்தையும் கொண்டுவர தேவையான நிறுவன சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் கட்டமைப்பிற்குள் பிரச்சினைகளைத் தீர்க்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்." என ஜூலை 21ஆம் திகதி ஜனாதிபதி ராஜபக்ச வெளியிட்ட டிவிட்டர் பதிவை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களை எவ்வித தடையுமின்றி செயலபட ஜனாதிபதி ஆணையிட வேண்டும் என்று அவரைச் சந்தித்த பிரதிந்திகள் கோரியிருந்தாலும் அது தொடர்பில் எவ்விதமான உறுதியும் அரச தரப்பில் அளிக்கப்படவில்லை.

"சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளை பாதுகாக்க சிவில் சமூகத்துடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகவும், அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதில் தனது அரசாங்கம் உறுதியாக உள்ளது" என்று ஜனாதிபதி தெரிவித்ததாக அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும், ஒரு பக்கம் சிவில் சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் செயல்பட ஆர்வமுள்ளது போல் காட்டிக் கொள்ளும் அரசாங்கம் மறுபுறம் அப்படியான அமைப்புகளின் குரல்வளையை நெறிக்கும் செயலில் இறங்குகிறது எனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகி வருகிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுப்பது மற்றும் அதிகாரப் பரவலாக்கல் நடவடிக்கையாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது உள்ளிட்ட பல கருத்துக்களை ஜனாதிபதி தெரிவித்ததாக அரச சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் கண்காணிப்பு செயலகத்தை பாதுகாப்பு அமைச்சுக்கு அல்லாமல் வேறு சிவில் விவகார அமைச்சகத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் இதன்போது கோரப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடியில் உள்ள அரசாங்கத்திற்கு கொரோனாவை கட்டுப்படுத்த உதவுமாறு, என்று அரச சாரா அமைப்புகளிடம் அரசு சார்பில் கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசின் அரச சார்பற்ற நிறுவனங்களை கண்காணிப்பு செயலகத்தின் தலைவர் தற்போதைய


MINISTRY OF DEFENCE & URBAN DEVELOPMENT

01.07.2014

National Secretariat for Non Governmental Organizations - 3rd Floor, "Sethsiripaya", Battaramulla.

RECEIVED - 7 JUL 2014

To All Non Governmental Organizations

Non Governmental Organizations acting beyond their mandate.

It has been revealed that certain Non Governmental Organizations conduct press conferences, workshops, training for journalists, and dissemination of press releases which is beyond their mandate.

We reiterate that all Non Governmental Organizations should prevent from such unauthorized activities with immediate effect.

D.M.S. Dissanayake
Director/Registrar

செயற்பாடுகளைக் கைவிட்டு அந்த நிதியை கொரோனாவை கட்டுப்படுத்த வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை அரச சாரா அமைப்புகள் நிராகரித்து விட்டன.

கனடா, பிரிட்டன், சுவிஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து அரச சாரா அமைப்புகளுக்கு வரும் நிதியுதவிகள் தீவிரமாகக் கண்காணிக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கியின் பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அரச சாரா அமைப்புகள் மற்றும் சிவில் சமூகத்திற்கான உதவி எனும் பெயரில் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ளவர்கள் அரசின் ஸ்திரத்தன்மையை குலைத்து நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த இந்த நிறுவனங்களை ஒரு முகமூடியாக வைத்து கொண்டு செயல்படுகின்றனர் என்று அந்த அதிகாரி குற்றஞ்சாட்டுகிறார்.

குறிப்பாக கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் அரசுகள் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் வாக்கு வங்கியை மனதில் வைத்து அவர்களுக்கு ஆதரவாக பக்கச்சார்பான வகையில் நடந்து கொள்கின்றன என்று ராஜபக்ச அரசின் அமைச்சர்கள் வெளிப்படையாகவே பேசி வருகின்றனர்.




பன்னாட்டு நிதியுதவிகளை நேரடியாகப் பெற முடியாமல் தத்தளிக்கும் இலங்கை அரசு, அரச சார்பற்ற நிறுனவங்களின் செயல்பாட்டை முடக்க நினைத்தால் அது பாதகமான எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும் என்பது திண்ணம். அதை உணர்ந்து அரசு செயல்படுவது நலம்.

சீனா என்கிற ஒற்றை நாட்டை நம்பி, பொருளாதார மற்றும் பன்னாட்டரங்கில் அரசியல் ரீதியில் வல்லமையும் செல்வாக்கும் கொண்ட மேற்குலக நாடுகளுக்கு நெருக்கடி கொடுப்பதாக நினைத்து, அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது தமது விரோதத்தை ராஜபக்ச அரசு காட்ட முற்பட்டால் அது மேலும் சிக்கலுக்கே வழி வகுக்கும். அரசு அதை உணர வேண்டும்.

கனடிய செய்திகள்
Canadian News

# ஒரு சிறுபான்மை அரசாங்கமாக நோய்த் தொற்று காலத்தில் சவால்களுக்கிடையில் மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கியது ஜஸ்டின் ட்ரூடோ தலைமையே

## கனடா உதயனுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலின் போது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு

**- ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**



எமது லிபரல் சிறுபான்மை அரசாங்கம் பதவியேற்று சில மாதங்களில் உலக நாடுகளோடு சேர்த்து, கனடாவையும் சூழ்ந்து கொண்ட கொரோனா நோய்த்தொற்று காரணமாக பதட்டத்துடன் காணப்பட்ட கனடிய மக்களுக்காக செயலில் இறங்கியது எமது பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கமே ஆகும். ஒரு சிறுபான்மை அரசாங்கத்திற்கு சாதாரண நாட்களிலேயே எதிர்க்கட்சியினரின் நெருக்குவாரம் மிக அதிகமாக இருக்கும். அரசாங்கம் எந்த திட்டத்தையோ அன்றி மசோதாவையோ பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தால் அதை எதிர்ப்பதும் ஆட்சியைக் கவிழ்ப்போம் என்று பயமுறுத்துவதுமாகவே நாட்கள் கழிந்து செல்லும். இவ்வாறு இருக்கும் போது நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை தரக்கூடிய திட்டங்களையும் நிதி உதவிகளையும் உடனடியாக அறிவித்தபோது கூட எதிர்க்கட்சிகள் அவற்றை விமர்சித்தன.



பொதுவாகவே ஒரு சிறுபான்மை அரசாங்கம் ஆட்சியில் தாக்குப் பிடிக்கக் கூடிய கால எல்லை பதினெட்டு மாதங்களே ஆகும். ஆனால் எமது அரசாங்கம் 21 மாதங்களை தற்போது பூர்த்தி செய்த பின்னரே எமது பிரதமர் மக்களின் ஆணையை புதிதாகப் பெறுவதற்காக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ஆளுனர் நாயகத்தை வேண்டினார்.

எதிர்க்கட்சிகள் வரவு செலவுத் திட்டம் போன்ற முக்கியமான பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டியவை சமர்ப்பிக்கப்படும் போது, எம்மை சங்கடப்படுத்துவதிலேயே கண்ஷணும் கருத்துமாக இருந்தார்கள். எனவே நோய்த் தொற்று காரணமாக பல் வேறு இழப்புக்கள் மத்தியில் நிதி நெருக்கடிகள் அரசுக்கு சவால்களாக காணப்பட்ட இந்த நேரத்தில் மக்களிடமிருந்து புதிய "ஆணை" ஒன்றைப் பெறுவதற்காகவே தேர்தலை நடத்த எமது பிரதமர் விரும்பினார்.

இந்த தேர்தல் முடிவுகள் எமது அரசாங்கத்தை மீண்டும் பெரும்பான்மை பலம் கொண்டதாக தேர்ந்தெடுக்க கனடிய மக்கள் விரும்பினால் எமக்கு வாக்களிக்கலாம். அல்லது கொன்சர்வேர்ட்டிவ் கட்சியை தேர்ந்தெடுக்க விரும்பினால் அவ்வாறு செய்யலாம். இதுவே எமது தலைவர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்களின் எண்ணமாகும்.

ஆனால் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியிடம் நல்ல திட்டங்கள் இல்லை. மக்கள் அவர்கள் ஆட்சியில் பல பாதிப்புக்களையும் எதிர்கொள்ள வேண்டிவரலாம். எனவே கனடியர்கள் மீண்டும் எமது லிபரல் அரசாங்கத்திற்கு வழங்கி அதன் மூலம் ஒரு புதிய ஆணையை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்களுக்கு வழங்குவதே தற்போதைய சூழலில் சிறந்த ஒரு முடிவாகும்.

இவ்வாறு தெரிவித்தார், ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், நடைபெறவுள்ள தேர்தலில் மீண்டும் வேட்பாளராகப் போட்டியடுபவருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவித்தார்.

கனடா உதயன் பத்திரிகைக்காக அவரை ஸ்காபுறோவில் உள்ள அவரது பிரச்சார அலுவலகத்தில் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தனது கருத்துக்களை முன்வைத்தார்.

ஹரி ஆனந்தசங்கரியிடம் நாம் முன்வைத்த கேள்விகளுக்கு அவர் மிகுந்த உற்சாகமாக பதிலளித்தார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் தங்கள் அரசாங்கம் ஆற்றிய சேவைகள் மற்றும் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்கள் ஆகியவை பற்றிக் கூறுவீர்களா, என்று நாம் கேட்டுக்கொண்டபோது அவர் முக்கியமான பல திட்டங்கள் பற்றி தெளிவாகக் குறிப்பிட்டார்.

கனடா முழுவதற்குமான பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும், ரொறன்ரோ பெரும்பாகத்தில் நடைபெறும் பலவற்றை தருவதாகக் குறிப்பிட்ட அவர் அவற்றை பட்டியலிட்டார்.

ஸ்காபுறோவை நோக்கிய விரைவுப் புகையிரத சேவை மக்கள் எதிர்பாராத அளவிற்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட உள்ளது என்று கூறிய அவர் தொடர்ந்தும்பல அபிவிருத்தித் திட்டங்களை ரொரன்ரோ பெரும்பாகத்தில் எமது அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

அவற்றுள் ரூஜ் தேசியப் பூங்காத் திட்டம் (Rouge National Urban Park) என்பது மிகவும் பெரியதோர் திட்டமாகும். இதன் மூலம் சூழல் பாதுகாப்பு மற்றும் பறவைகள் விலங்குகள் ஆகியவை பாதுகாக்கப்பெற்று இயற்கையும் பாதுகாக்கப்படுகின்றது. இந்த ரூஜ் தேசியப் பூங்காத் திட்டம் (Rouge National Urban Park) அமைந்துள்ள விசாலமான நிலப்பரப்பில் மக்கள் கூடும் இடங்கள் மற்றும் வரவேற்புப் பகுதி, சன சமூக நிலையம் ஆகியன அமைக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்திற்கு 30 மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஸ்காபுறோவில் அமையவுள்ள தமிழர் சமூக மையம் எமது அரசாங்கம் வழங்கிய பாரிய நிதி உதவியாகும். தமிழர் சமூக மையம் திட்டத்தில் தமிழர் சமூகத்திற்கு பயனுள்ள பல பிரிவுகள் அமையவுள்ளன. மேலும் கென்னடி புகையிரத நிலையத்திலிருநது மல்வேர்ன் வரையிலான நிலக் கீழ் விரைவுப் புகையிர விஸ்தரிப்புத் திட்டம் மக்களுக்கு மிகவும் பயனுள்ள திட்டமாக கருதப்படுகின்றது.. இதன் மூலம் எமது பகுதி மக்கள் அனைவரும் தாங்கள் அனுபவித்த போக்குவரத்து தொடர்பான சிரமங்களிலிருந்து மீழ்ச்சியடைவார்கள் என்று நான் நம்புகின்றேன். என்றார் ஹரி ஆனந்தசங்கரி.

அதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ் மக்கள் தொடுக்கப்பட்ட கொடிய யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு பொறுப்புக் கூறலும் மற்றும் போர்க்குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு இலங்கையின் பதில் அல்லது நடவடிக்கைகள் தொடர்பாக கேட்டபோது ஹரி ஆனந்தசங்கரி பின்வருமாறு தெரிவித்தார்.

"இது ஒரு முக்கிய விடயமாகும். அதுவும் ஐக்கிய நாடுகள் சம்பந்தப்பட்ட ஒரு விசாரணைக்குரிய விடயமாகும்.. இலங்கையிடம் பொறுப்புக் கூறல்தொடர்பான விடயங்களைக் கவனிக்க ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் ஐந்து முக்கிய நாடுகளில் கனடாவும் ஒன்றாகும். இதற்காக எமது அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையில் பல தடவைகள் குரல் கொடுத்துள்ளது. நானும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான கவுன்சிலில் உரையாற்றி உள்ளேன். எனவே இவ்வாறான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக செய்வதற்கும் எமது லிபரல் அரசாங்கத்தை தமிழ் மக்கள் மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும்." என்றார் ஹரி ஆனந்தசங்கரி.



தொடர்ந்து அவர் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் உலக வெப்ப மயமாகும் ஆபத்துகளிலிருந்து உலகம் விடுபடுவதற்கு ஏனைய நாடுகளோடு சேர்ந்து உழைக்க முன் வந்துள்ளார். காபன் வாயுவைக் கட்டுப்படுத்துதல்., மின்சார் வாகனங்களை பாவனைக்கு கொண்டு வருதல் போன்ற விடயங்களில் அக்கறை எடுத்து கனடாவில் பாரிய பிரச்சனைகளாக உள்ள காட்டுத் தீ, வெள்ள அபாயங்கள் ஆகியவற்றிலிருந்து மக்கள் நிவாரணம் பெறவும் நல்ல திட்டங்களை அமுல் செய்துள்ளார். மேலும் அதிக நிதி ஒதுக்கீடுகளை எமது அரசாங்கம் செய்துள்ளது.

அத்துடன் எமது பிரதமரும் அரசாங்கமும் நாடு முழுவதும் உள்ள குழந்தைகள் காப்பகங்களுக்குரிய கட்டணத்தை வழங்குவதற்கு சட்ட மூலமாக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்கள். ஒரு குழந்தையின் பராமரிப்புச் செலவாக நாளொன்றுக்கு பத்து டாலர்கள் வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது. எனவே இவ்வாறான திட்டங்களை அமுல் செய்ய ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கம் மீண்டும் அமைய வேண்டியது மக்களுக்கு அதிக நன்மைகளைத் தேடித்தரும் என்பது எனது நம்பிக்கை என்றார் ஹரி ஆனந்தசங்கரி.

இறுதியாக கனடா உதயன் வாசகர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள் என்ற கேள்விக்கு பதிலளித்த போது அவர் கூறுகையில், "நான் முன்னரே கூறியது போன்று எமது பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் தலைமையிலான அரசாங்கம் மீண்டும் பெரும்பான்மை அரசாங்கமாக ஆட்சியில் அமர மக்கள் விரும்பினால் அவர்கள் லிபரல் கட்சிக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 20 திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். அப்போது தான் எமது அரசாங்கம் கோவிட்-19 ஆரம்ப காலத்தில் எவ்வாறு மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட்டதோ அதே போன்று பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் சேவையாற்ற வாய்ப்புக் கிட்டும்" என்றார்.


அருள் மிகு நல்லூர்க்கந்தசுவாமி கோவில்

20 Nugget Ave #01,Scarborough, ONT. (Mc Cowan/Sheppard) தொலைபேசி இலக்கம் -4162939004



நல்லூர் கந்தன் 27 தின மகோற்சவ விஞ்ஞாபனம்

12.08.2021 வியாழன் முதல் 08.09.2021 புதன்கிழமை வரை

குகனேய அடியார்களே !

நிகழும் மங்களகரமான பிலவ வருசத்திற்கான நல்லூர் முருகன் 27 தினத்திருவிழா கனடா நாட்டில் ரொறன்ரோ மாநகரின் எழில் நகராம் ஸ்காபுரோ பகுதியில் எழுந்தருளியிருக்கும் நல்லூர்க்கந்தன் என்ற திருநாமத்துடன் கூடிய முருகப் பெருமானுக்கு 27 தினமும் திருவிழா நடைபெறத்திருவருள் கூடியுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தன் திருவிழாவை போன்றே இங்கும் அதே காலப்பகுதியில் அழகு மிகுந்த அலங்காரக்காட்சியுடன் அபிசேகம் ,விசேடபூசை,சுவாமிவீதிவலம் வருதல் போன்ற அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. முருகன் அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப் பெற்று வாழ்வீர்களாக.

காலை DAY TIME
காலை 07.00 மணி திருவனந்தல் 1st Pooja 7:00 AM
காலை 10.00 மணி காலைசந்தி 2nd Pooja 10:00 AM
காலை 10.30 மணி கும்ப பூஜை Kumba pooja 10:30 AM
பகல் 12.00 மணி விசேட பூஜை 3rd Pooja 12:00 PM
பகல் 12.20 மணி வசந்த மண்டபபூஜை Vasantha Mandapa Pooja
பகல் 01.00 மணி அன்னதானம் வழங்கப்படும். Annathanam Distribution

மாலை NIGHT TIME
மாலை 5.30 மணி சாயரட்சை 1st Pooja 5:30 PM
மாலை 6.30 மணி கும்ப பூஜை Kumba pooja 6:30 pm
மாலை 7.30 மணி மூலஸ்தானபூசை Main Pooja 7:30 Pm
இரவு 7.50 மணி வசந்த மண்டபபூஜை Vasantha Mandapa Pooja 7:50 Pm
இரவு 8.10 மணி சுவாமி உள்வீதி வலம் Sri Murugan Procession 8:10 pm

05.09.2021 ஞாயிறுக்கிழமை தேர்த்திருவிழா
காலை 6.00 மணி மூலமூர்த்திக்கு அபிசேகம்
காலை 7.00 மணி மூலஸ்தானபூசை
காலை 8.00 மணி வசந்தமண்டபபூசை
காலை 09.00 மணி தேர்புறப்பாடுதல்
காலை 10.00 மணி இருப்பிடம்சேர்தல்
பகல் 12.50 மணி பச்சைசாத்துதல் (தேரிலிருந்துசுவாமி இறங்குதல், பிராயச்சித்தாபிஷேகம்,சண்முகார்ச்சனை)அன்னதானம் வழங்கல்

| திகதி | கிழமை | நாள் | விசேட திருவிழாக்கள் |
|---|---|---|---|
| 12.08.21 | வியாழன் | 00 | கணபதிஹோமம் (காலை) |
| 13.08.21 | வெள்ளி | 01 | கொடியேற்றம் |
| 14.08.21 | சனி | 02 | |
| 15.08.21 | ஞாயிறு | 03 | |
| 16.08.21 | திங்கள் | 04 | |
| 17.08.21 | செவ்வாய் | 05 | |
| 18.08.21 | புதன் | 06 | |
| 19.08.21 | வியாழன் | 07 | பிரதோசம் |
| 20.08.21 | வெள்ளி | 08 | வரலஸ்மி விளக்குப்பூஜை. |
| 21.08.21 | சனி | 09 | |
| 22.08.21 | ஞாயிறு | 10 | மஞ்சம். |
| 23.08.21 | திங்கள் | 11 | |
| 24.08.21 | செவ்வாய் | 12 | |
| 25.08.21 | புதன் | 13 | சங்கடஹரசதுர்த்தி |
| 26.08.21 | வியாழன் | 14 | |
| 27.08.21 | வெள்ளி | 15 | |
| 28.08.21 | சனி | 16 | அருணகிரிநாதர் உற்சவம் |
| 29.08.21 | ஞாயிறு | 17 | [illegible] திருவிழா கார்த்திகை சப்பறத்திருவிழா |
| 30.08.21 | திங்கள் | 18 | |
| 31.08.21 | செவ்வாய் | 19 | சூரியோற்சவம் |
| 01.09.21 | புதன் | 20 | சந்தானகோபாலர் திருவிழா |
| 02.09.21 | வியாழன் | 21 | கஜவல்லி மஹாவல்லி திருவிழா |
| 03.09.21 | வெள்ளி | 22 | மாம்பழத் திருவிழா. |
| 04.09.21 | சனி | 23 | சப்பறம், சனிப்பிரதோசம் |
| 05.09.21 | ஞாயிறு | 24 | தேர் திருவிழா |
| 06.09.21 | திங்கள் | 25 | தீர்த்த உற்சவம் |
| 07.09.21 | செவ்வாய் | 26 | பூங்காவனம் |
| 08.09.21 | புதன் | 27 | வைரவர் உற்சவம் |

- பக்திபூர்வமாக திருவிழா உபயங்கள் செய்ய விரும்புவோர் [illegible]
- [illegible]




PLEASE WASH YOUR HANDS AND WEAR MASKS IN THE TEMPLE WHILE ALSO PRACTICING SOCIAL DISTANCING

முக்கிய அறிவித்தல்

ஆலயத்தினுள் அனைவரும் முககவசம் அணிந்தும் சமூக இடைவெளியை பேணவும்

அஷ்டோத்தர (108) சங்கு திருமஞ்சன சகிதம் ஸ்கந்தமஹா வேள்விபெருவிழாவுடன் ஏகதின லட்ச்சநாம ஜபபூசை

முருகன் அடியார்களே!

கனடா ரொறன்ரோவில் ஸ்காபுரோ நக்கற் வீதியில் கோவில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்து வரும் எம்பெருமான் கந்தவேள் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீ சார்வரி வருசம் தெட்சணாய வருசருது ஆவணிபுரட்டாதி மாதம் 01நாள் 17.07.2021 வெள்ளிக்கிழமை முதல் 19.09.2021 ஞாயிற்றுக்கிழமை வரையான மூன்று தினங்கள் சங்காபிசேகம்,அர்ச்சனை ,ஹோமம்,தர்ப்பணம் என்பன மிகசிறப்பு வைபமாக நடைபெற இருப்பதால் அடியார்கள் விழாவில் கலந்து கொண்டு உபயங்களை முன் வந்து ஏற்று நடாத்தி சண்முகப்பெருமானின் பரிபூரணமான திருவருள் பெறவேண்டுமாய் முருகன் திருவடி பணிந்து வேண்டிக்கொள்கிறோம்.

பலன்கள்:- ஏகதினலட்சார்ச்சனை,ஹோமம்,தர்ப்பணம்என்பனவற்றில் பங்குகொண்டால் தீர்க்கஆயுள் ஆரோக்கியம். திருமணத்தடைநிவர்த்தி,தொழில்விருத்தி, வியாபாரஅபிவிருத்தி, மனைவரவு,கல்விஅபிவிருத்தி,நோய்நீங்குதல், பிதிர்தோஷம். குடும்பவாழ்வு சிறக்க,காரியத்தடை,கஷ்டம் என்பன நீங்கும்

தொலைபேசி இல – 416 – 293 – 9004

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா உதயன் வெள்ளிவிழா ஆண்டுமலர் ஒரு சிறிய விமர்சனக் குறிப்பு

கடந்த 13.5.1996 அன்று தனது முதலாவது இதழை வெளியிட்டு, வெள்ளிதோறும் தனது வாராந்த நாளிதழை வெளியிட்டுவரும் கனடா உதயன் தனது 25ஆவது ஆண்டினை நிறைவு செய்து தனது 1322 ஆவது இதழை தனது வெள்ளிவிழா மலராக 06.8.2021 அன்று வெளியிட்டுள்ளது.

பல்கலாச்சார நாடான கடாவில் ஒரு இதழும் தவறாமல் வாராந்த இதழை இருபத்தைந்து ஆண்டுகாலமாக வெளிக்கொணர்வதென்பது சாதாரண விடையமல்ல. ஒரு நொடியின் பெறுமதியை விபத்தில் உயிர்தப்பியவனைக் கேளுங்கள். ஒரு நாளின் பெறுமதியை ஒரு தினக்கூலி மனிதனைக் கேளுங்கள். ஒரு வாரத்தின் பெறுமதியை வாரப்பத்திரிகையின் ஆசிரியரைக் கேளுங்கள் என்பார்கள். ஒவ்வொரு பத்திரிகையும் ஒரு பிரசவம், பிரசவ வேதனை. அப்படியாயின் இது எப்படிச் சாத்தியமாயிற்று. அதன் இரகசியம்தான் என்ன?

ஆசிரியரின் கடின உழைப்பு, இலட்சிய வேட்கை, அவரின் இல்லாளின் ஆதரவு, நண்பர்களின் ஒத்துழைப்பு, அவரைச் சார்ந்திருப்போரின் கடமை உணர்வு, செலவை ஈடுகட்டும் விளம்பரதாரர், கட்டாந்தரயைக் களனியாக்குவதுபோல் வெற்றுக்காகிதத்தை பத்திரிகை யாக்கும் எழுத்தாளர்கள் இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து பிரசவிக்கும் ஆற்றல் மிகுந்த பிரதம ஆசிரியர் அத்தனைக்கும் மேலாக பத்திரிகையை நேசிக்கும் வாசகர்கள்.. இவைதான் அந்த இரகசியம்.

வெள்ளிவிழா மலர் முழுவதையும் படித்துப்பார்த்தேன். வெள்ளி விழாவி-னை வாழ்த்த பலர் கவிதை வரைந்திருந்தார்கள். ஆசிரியரின் சாதனையை வாழ்த்தியிருந்தார்கள், கனதியான கட்டுரைகள், சிந்திக்கத்தூண்டும் சிறுகதைகள், அரசியல் ஆய்வுக்கட்டுரைகள் இப்படி...இப்படி.. அனைத்துமே வெள்ளி விழா மல-ரினை உச்சம்தொட வைத்துள்ளன.

எனினும் என் நெஞ்சைத் தொட்ட ஒரு ஆக்கத்தினைச் சொல்லியே ஆகவேண்டும். ஏதோ ஒரு வகையில் நாம் அனைவரும் நம் தாய்நாட்டுப் போர்ச்சூழலால் பாதிக்கப்படாமல் இருந்திருக்கமாட்டோம். எனினும் நாட்டு விடுதலைக்காக எம் போராளிகள் கொடுத்தவிலை ஈடுஇணையற்றது. அதைப்பற்றி "ஒரு துப்பாக்கியின் கண்ணீர்" என்னும் ஓர் கதையை திரு. மு. சிவலிங்கம் என்னும் எழுத்தாளர் எழுதியிருந்தார். 2010ஆம் ஆண்டுவரை தாயததில் தங்கியிருந்து கள நிலவரத்தினை நேரில் கண்டவன் என்றவகையில் அது என்னையும் மிகவும் பாதிக்கவே செய்தது. புலிகளைபற்றி பேசவே பயப்படும் இன்றைய சூழலில் துணிந்து அச்சிறுகதையை எழு-திய திரு சிவலிங்கம் பாராட்டுதலுக்குரியவர். அது மட்டுமனறி தனது, பெயர், முகவரி, தொலை-பேசி இலக்கத்தையும் வெளிப்படையாக சிறுகதைக்கு அடியில் குறிப்பிட்டிருந்தார். இலங்கை கொட்டகலையில் வசித்துவரும் அவருடன் தொடர்புகொண்டு பேசினேன். எனது வாழ்த்துக்களயும் தெரிவித்தேன்.

இவ்வாறான பல சிறப்புக்கள் கொண்ட வெள்ளிவிழா மலரைத் தந்த அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள். கனடாவில் தமி-ழர் இருக்கும்வரை உதயனும் இருக்கும், அது தொடர்ந்து உயிர் வாழும்.

**பொன். கந்தவேள்**




# அனைவராலும் விரும்பப்பெறுகின்ற ஒருவராகத் திகழ்ந்த அபின்சனின் மறைவு மொன்றியால் வாழ் இளையோர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது...

## அகால மரணமடைந்த அபின்சன் வேலாயுதம் அவர்களின் நினைவஞ்சலி நிகழ்வில் நண்பர்கள் கண்கள் கலங்கத் தெரிவிப்பு



"மொன்றியால் நகரில் நூற்றுக்கணக்கான நண்பர்களால் விரும்பப்பெறுகின்ற ஒரு அன்பனாகவும் சிறந்த விளையாட்டு விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்த அபின்சன் வேலாயுதம் அவர்களின் அகால மறைவு இங்குள்ள இளையோரை ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரை அநியாயமாக நாமும் அவரது குடும்பத்தினரும் இழந்துவிட்டோமே என்று அனைவரும் கவலையில் ஆழ்ந்துள்ளதை எங்கும் உணரக் கூடியதாக உள்ளது".


இவ்வாறு கடந்த 14-08-2021 அன்று சனிக்கிழமை மொன்றியால் நகரில் உள்ள அபின்சன் வேலாயுதம் அவர்களது இல்லத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய மறைந்த அபின்சன் அவர்களது நெருங்கிய நண்பர்கள் கவலையுடன் தங்கள் அஞ்சலியைப் பகிர்ந்து கொண்டனர்.

மொன்றியால் வாழ் தமிழர் சமூகத்தில் மாத்திரமல்ல வேற்றினங்களைச் சார்ந்த விளையாட்டு வீரர்களோடு நெருங்கிய நட்பும் அன்பும் கொண்டிருந்த செல்வன் அபின்சன் வேலாயுதம் கடந்த 04-07-2021 அன்று அகால மரணத்தைத் தழுவினார். அவரது நினைவாக இடம்பெற்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மலர் வெளியீடும் கடந்த 14-08-2021 அன்று சனிக்கிழமை மொன்றியால் நகரில் உள்ள அபின்சன் வேலாயுதம் அவர்களது இல்லத்தில் இடம்பெற்றது. நண்பர்கள் உறவினர்கள் என குறைந்த எண்ணிக்கையில் கலந்து கொண்ட இந்த அஞ்சலி நிகழ்வில் எழுத்தாளர் வீணை மைந்தன் நினைவு மலரை வெளியிட்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மறைந்த அபின்சன் தனது வாழ்வில் பல நல்ல நண்பர்களையும் ஆற்றல் மிகுந்த தோழர்களையும் பெற்றிருந்தார். இது அவரது நற்பண்புகளுக்கு ஒரு உதாரணமாகும் என்று தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரி-யரும் அபின்சன் குடும்பத்தின் நெருங்கிய உறவினருமாகிய லோகேந்திரலிங்கம் உரையாற்றுகையில் மைதானங்களிலே தனது கால்களால் பந்தை எவ்வளவு உயரத்திற்கோ அன்றி எவ்வளவு தூரத்திற்கோ உதைத்து வெற்றிகளை ஈட்டிய அபின்சன் தான் வாழ்ந்த குறுகிய காலப்பகுதியில் கல்வியிலும் விளையாட்டிலும் பிரகாசித்தார். ஆனால் அவரது வாழ்வு அகாலத்தின் காரணமாக அஸ்தனமனமாகிவிட்டது என்றார்.







அவரைத் தொடர்ந்து அபின்சனின் நண்பர்கள் சிலர் உரையாற்றினார்கள். தொடர்ந்து அபின்சனின் தந்தை வேலாயுதம் அவர்கள் உரையாற்றும் போது அபின்சன் எங்கள் குடும்பத்தை விட்டு நீங்கிச் சென்றாலும் அவர் விளையாட்டின் மூலம் வெற்றிகளாய்க் குவித்த கேடயங்களும் கிண்ணங்களும் தொடர்ந்து எங்கள் இல்லத்தை அலங்கரிக்கும் என்றார்.

**(செய்தியும் படங்களும் சத்தியன்)**

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழ் சிறப்புப் பிரதிகள் மொன்றியால் மாநகரில் சில நண்பர்களுக்கு வழங்கபப்பெற்றன

கடந்த 06-08-2021 வெள்ளிக்கிழமையன்று வெளியான, கனடா உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழ் சிறப்புப் பிரதிகள் தொடர்ச்சியாக நண்பர்களுக்கு வழங்கப்பெறுகின்றன. வழமையிலும் பார்க்க அதிக பிரதிகள் அச்சடிக்ப்பெற்றதால், பிரதிகள் நேரடியாக சிலருக்கு வழங்கப்பெற்று வருகின்றன. இந்த வரிசையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மொன்றியால் நகரில் நண்பர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோருக்கும் வழங்கப்பெற்றன. இங்கே காணப்படும் படங்கள் மொன்றியால் நகரில் எடுக்கப்பெற்றவையாகும்.







(செய்தியும் படங்களும் சத்தியன்)

# கனடா உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழ் சிறப்புப் பிரதிகள் தொடர்ச்சியாக நண்பர்களுக்கு வழங்கப்பெறுகின்றன



கடந்த 06-08-2021 வெள்ளிக்கிழமையன்று வெளியான, கனடா உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழ் சிறப்புப் பிரதிகள் தொடர்ச்சியாக நண்பர்களுக்கு வழங்கப்பெறுகின்றன. வழமையிலும் பார்க்க அதிக பிரதிகள் அச்சடிக்ப்பெற்றதால், பிரதிகள் நேரடியாக சிலருக்கு வழங்கப்பெற்று வருகின்றன.

இந்த வரிசையில் இன்று "உதயன்" நண்பரும் வர்த்தகப் பிரமுகருமான சங்கர் நல்லதம்பி அவர்களுக்கும் அவரது ஹோட்டல் பணியாளர் ஒருவருக்கும் நேரடியாகவழங்கப்பெற்றன.



# ஒன்றாரியோ பாடசாலைகளிலும் கோவிட் – 19 தடுப்பூசி வழங்கும் மையங்கள் அமைக்கப்படவுள்ளன

ஒன்றாரியோ மாகாணத்தின் பாடசாலைகளிலும் கோவிட்-19 தடுப்பூசி மையங்களை அமைக்க மாகாண அரசு தீர்மானித்துள்ளதாக ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினரும் ஒன்றாரியோ போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான விஜய் தணிகாசலம் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு அறிவித்துள்ளார்.

மேற்படி செய்திக் குறிப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கோவிட்-19 நோய்த்தொற்றினை முறியடிப்பதற்கு ஒன்றாறியோ அரசாங்கம் பொது சுகாதார அமைப்புகளுடனும் பொது நிதியுதவியைப் பெறும் கல்விச்சபைகளுடனும் இணைந்து பாடசாலைகளில் அல்லது பாடசாலைகளுக்கு அருகில் தடுப்பூசி வழங்கும் மையங்களை அமைக்கவுள்ளது. பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரும், பாடசாலை ஆரம்பித்து முதல் சில வாரங்களுக்கும் இத்தடுப்பூசி மையங்கள் இயங்கிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவை முதலாவது அல்லது இரண்டாவது சொட்டுத் தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்ளாதவர்களை அதனைப் பெற்றுக்கொள்ளச் செய்யும் நோக்கத்தினை இலக்காகக் கொண்டதுடன், தடுப்பூசியைப் பெறத் தகுதியுடைய மாணவர்கள், அவர்களது குடும்பத்தினர், ஆசிரியர்கள், பாடசாலை ஊழியர்கள் போன்றவர்கள் தடுப்பூசியைப்பெற்றுக்கொள்ள வசதியான முறையில் இவை அமைக்கப்பட்டுள்ளன.




ஒன்றாறியோவில் கோவிட்-19க்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது உங்கள் தெரிவாக தொடர்ந்தும் இருந்துவருகின்ற போதிலும், சுகாதார வல்லுனர்களின் அறிக்கையின்படி கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது கோவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்வற்கான சிறந்த வழியென ஊக்குவிக்கப்படுகின்றது.



கல்வித் துறையும், பொது சுகாதார அமைப்புகளும், தகுதியுடைய இளையவர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதிலும், வரலாறு காணாத இந்நோய்த்தொற்றின்போது மாணவர்களுக்களையும் குடும்பங்களையும் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளன. ஒன்றாறியோ அரசாங்கம் தடுப்பூசி வழங்கும் திட்டத்தினை தொடர்ந்து நடத்தி வருவதால், தடுப்பூசி பெற விரும்பும் தகுதியுடைய அனைவரும் பெற்றுக்கொள்ள தகுதியுடையவர்கள் அனைவரும் பெற்றுக்கொள்ள வழியமைக்கும் அதேவேளை, பாடசாலைகள் அனைத்தும் ஆண்டு முழுவதும் இயங்குவதையும் உறுதிப்படுத்திக் கொள்கிறது.

இவ்வாறு எம்பிபி விஜய் தணிகாசலம், தெரிவித்துள்ளார்.

# கனடாவின் நோவா ஸ்கோசியா மாகாணத்தில் லிபரல் அரசை தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றிய கொன்சர்வேர்ட்டிவ் கட்சி

பத்து மாகாணங்களையும் மூனறு பிராந்தியங்களையும் கொண்டு பிரிக்கப்பட்ட கனடாவின் நோவா ஸ்கோசியா மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமையன்று நடைபெற்ற தேர்தலில், ஆட்சியிலிருந்த லிபரல் அரசை தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றிய கொன்சர்வேர்ட்டிவ் கட்சிக்கு கனடாவின் பல மாகாணங்களிலிருந்து பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் மற்றும் அல்பேர்ட்டா மாகாணப் முதல்வர் ஜெய்சன் கென்னி ஆகியோர் தங்கள் வாழ்த்துக்களை புதிய அரசாங்கத்திற்கும் புதிய முதல்வருக்கும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இச் செய்தி எழுதப்பட்டிருக்கொண்டிருக்கும் இந்த நிமிடத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவரும் பதிய முதல்வராகப் பதவியேற்கவுள்ளவருமான ரிம் ஹொட்சன் அவர்கள் வெற்றியைக் கொண்டாடும் விழாவில் உரையாற்றிக்கொண்டிருக்கின்றார்.

அவர் தனது உரையில் எமது மாகாணத்தின் அனைத்துப் பிரஜைகளுக்காகவும் நான் முதல்வராகப் பதவியேற்கவுள்ளேன். அவர்கள் எந்த நிறமுடையவர்களாக இருக்கலாம். எந்த தாய் மொழியைப் பேசுகின்றவர்களாக இருக்கலாம். எந்த சமயத்தை பின்பற்றுகின்றவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் அனைவரும் எமது நோவா ஸ்கோசியா மாகாணத்தின் மக்களே. எனவே அவர்கள் அனைவரதும் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து முதல்வர் பதவியை ஆற்றுவதே எனது பொறுப்பு என்பதை உணர்கின்றேன் என்றார் ரிம் ஹொட்சன்.

இன்று நடைபெற்ற தேர்தல் முடிவுகளின் படி கொன்சர்வேர்ட்டிவ் கட்சி 30 ஆசனங்களையும் லிபரல் கட்சி 16 ஆசனங்களையும், என்டிபி என்னும் புதிய ஜனநாயகக் கட்சி எட்டு ஆசனங்களையும் எஞ்சிய ஒரு ஆசனத்தை சுயேச்சை வேட்பாளர் ஒருவரும் பெற்றுக்கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



இந்த மாகாண அரசொன்றின் தேர்தல் முடிவுகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள கனடிய தேசிய தொலைக்காட்சியான சிபிசி யின் சிரேஸ்ட ஊடகவியலாளர் ஒருவர் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 20ம் திகதி நடைபெறவுள்ள கனடாவின் பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியின் பெறப்போகும் ஆசனங்கள் தொடர்பான கணிப்பைக் கூறுவதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

ஒன்ராறியோ முழுவதும் லட்சக்கணக்கானோர் தங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்கள்.

**உங்கள் பங்கை செய்யுங்கள். தடுப்பூசியை போட்டுக்கொள் ளுங்கள்.**

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள், மருத்துவ மனைகள், டாக்டரின் காரியாலயங்கள், பார்மசிகள் மற்றும் பெருந்தொகையாக தடுப்பூசி போடும் இடங்களில் கிடைக்கும். ஒவ்வொரு தடுப்பூசியும் முன்பிருந்த சாதாரண நிலைமைக்கு நம்மை நெருக்கமாகக் கொண்டுவரும்.


**ontario.ca/bookvaccine**
இல் உங்கள் நியமிப்பை இன்றே பதிவுசெய்யுங்கள் அல்லது 300 மொழிகளில் உதவி பெற்றுக்கொள்ள
**1-888-999-6488**
ஐ அழையுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மக்களை கடுமையாகப் பாதிக்கும் கொரோனாத் தொற்று

## அச்சத்தால் மக்கள் வீடுகளில் முடக்கம்



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று பாதித்து வருவதால் மக்கள் அச்சத்திற்கும் பதட்டத்திற்கும் உள்ளாகியிருப்பதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.மேலும் டெல்றா கிருமி வேகமாகப் பரவுகின்றனது என்ற செய்தி பரவிச் செல்வதால் அச்சத்தால் மக்கள் வீடுகளில் முடங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விடயங்கள் தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் பல்வேறு பிராந்தியங்களில் பணியாற்றிவரும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர்களும் இந்த தொற்று பரவுகை தொடர்பாக அக்கறையோடு பணியாற்றுவதாகவும் மேலும் தொற்றுப் பரவாமல் தடுக்க தேவையாள நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அறியப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24மணி நேரத்தில் 303 கொரனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மூன்று பேர் மரணமடைந்துள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொரனா நிலைமைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த புதன்கிழமை 18ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், கோறளைப்பற்று மத்தி,செங்கலடி, பட்டிப்பளை ஆகிய பகுதிகளில் மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 152 கொரனா மரணங்கள் ஏற்பட்டுள்ளன. மூன்றாவது அலையில் 143 மரணங்கள் ஏற்பட்டுள்ளன. 20 வயதுக்கும் 50க்கும் வயதுக்குட்பட்டவர்கள் 15பேரும், 50வயதுக்கு மேற்பட்டவர்கள் 137 பேர் உயிரிழந்துள்ளனர்.இவ்வாறு மரணமடைந்தவர்களில் 54வீதமானவர்கள் ஆண்கள் ஆவர்.

கொரானா தொற்றுக்குள்ளானவர்களை வீட்டில்வைத்து பராமரிக்கும் முறையும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு சிலர் வெளியில் வர்த்தக நிலையங்களுக்கு சென்றுவரும் நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் சமூகபொறுப்புடன் செயற்பட வேண்டும்.

தொற்றுக்குள்ளானவர்கள், தொற்றுக்குள்ளானவர்களுடன் நேரடி தொடர்புகளைக் கொண்டுள்ளவர்கள் வீட்டினைவிட்டு வெளியில் வரவேண்டாம். அவ்வாறு யாரும் வெளியில்வந்தால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு சட்ட நடவடிக்கையெடுக்கப்படும்.

மாவட்டத்தில் தடுப்பூசிகளைப் பொறுத்தவரையில் 266,000 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத்தில் 61800 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. இது 30வயதுக்கு மேற்பட்ட 21வீதமானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் 30வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுவருகின்றது. இன்னும் 50ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்குமானால் 30வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்கல் பூர்த்தியடையும் எனவும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, கொவிட் தொற்றுக்கு உள்ளானோருக்கு சிகிச்சையளிக்கவென ஆதார கல்முனை பிரதேச வைத்தியசாலை களில் கட்டில்களின் எண்ணிக்கையை இருமடங்காக அதிகரிக்க வேண்டியுள்ளது. இன்னும் ஓரிரு வாரங்களில் அதனை மேற்கொள்வோம். கொவிட் நோயாளிகள் அதிகரிப்பதால் காரைதீவு சாய்ந்தமருது வைத்தியசாலைகளின் ஒரு பகுதியை கொவிட் சிகிச்சை நிலையமாக மாற்றத் திட்டமிட்டுள்ளோம். நிந்தவூர் வைத்தியசாலையை பூரணமாக கொவிட் வைத்தியசாலையாக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குண.சுகுணன் தெரிவித்தார்.

அண்மைக் காலமாக கொவிட் தொற்றுக்குள்ளாவோரில் 10 வீதமானோர் வைத்தியசாலை சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்கப்பட்டுவந்தனர். ஆனால் கடந்த 3 தினங்களாக 50 வீதமானோர் இவ்விதம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இன்றைய நிலைமையில் முதலாவது டோஸ் நிறைவு செய்ய 50 ஆயிரம் தடுப்பூசிகளும், இரண்டாவது டோஸ் ஆரம்பிக்க 2 இலட்சத்து 40 ஆயிரமும் தேவைப்படுகின்றன. முதலாவது டோஸ் ஏற்றி 3 வாரங்கள் கடந்துள்ளன. எனவே இரண்டாவது டோஸ் இன்னும் ஒரு வார காலத்தில் ஏற்றப்பட வேண்டும்.

அதனிடையே பொதுமக்களை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அனைவரும் இணைந்து கொவிட் தொற்றுக்கு எதிராக போராடுவோம். எனவே பொதுமக்கள் நிலைமையையுணர்ந்து இரண்டாவது டோஸ் ஏற்றும் வரை மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஆனால் தடுப்பூசி ஏற்றிக் கொண்ட பின்னரும் அதே பாதுகாப்பை அனைவரும் தொடர வேண்டியது கட்டாயம்.

அரசாங்கம் விரைவில் இந்தியாவிலிருந்து 190 தொன் எடையுள்ள ஒட்சிசன் தாங்கிகளை கொண்டு வரவுள்ளது. எமக்கு 12 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் 6 ஆயிரம் லீற்றர் கொள்ளவுள்ள தாங்கிகள் தரப்பட்டால் சவாலை எதிர்கொள்ளலாம். எமது பிராந்திய வைத்திய சாலைகளுக்கென பாரிய ஒட்சிசன் தாங்கிகள் தேவை. அதற்கு 65 மில்லியன் ரூபா தேவையாகும். ஒட்சிசன் இல்லாவிடில் எமது முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைய வேண்டி நேரிடும்.

அதேவேளை மருத்துவ உபகரணங்களும் கட்டில்கள் உட்பட வேறு சில உபகரணங்களும் தேவையாகின்றன. மல்டிறீடர் மொனிற்றர், ஒக்சிசென்றியேற்றர், ஹைபுளோ ஒக்சிமெஷின் ஆகியன தேவையாகின்றன. நாம் எமது சுகாதார அணியினருடன் இணைந்து இரவு பகல் பாராமல் சேவையாற்றி வருகின்றோம்.
கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு மேற்சொன்ன வசதிகளை காலதாமதமின்றி வழங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளில் இன்றைய நிலையில் சுமார் 1000 நோயாளிகள் உள்ளனர். ஆனால் இருப்பதோ 500 கட்டில்கள். மீதி 500 நோயாளிகளும் தரையில் அமர்ந்து சிகிச்சை பெற வேண்டியுள்ளது. ஆதலால் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எனவே ஒரு வாரத்தில் கட்டில்களின் எண்ணிக்கையை இருமடங்காக அதிகரிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு டொக்டர் குண.சுகுணன் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் (டி.சி.சி) "சூம்" தொழினுட்பத்தில் நடைபெற்ற போது கல்முனை அலுவலகத்திலிருந்தவாறு அவர் இவ்விபரங்களைத் தெரிவித்தார்.

"கல்முனை பிராந்தியத்தில் இதுவரை சுமார் 5000 பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். 106 மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. சராசரியாக தினமும் 100 தொற்றுக்களும் 2 மரணங்களும் ஏற்பட்டுவருகின்றன. தடுப்பூசி தாமதமானதன் விளைவு இது. எமது பிராந்தியத்திலுள்ள 07 ஆதார வைத்தியசாலைகளில் கொவிட் பிரிவுக்கென 200 கட்டில்களே உள்ளன. இடைத்தங்கல் நிலையங்களில் 370 கட்டில்கள் உள்ளன. கட்டில்கள் அனைத்திலும் நோயாளிகள் நிறைந்திருப்பதால் இடநெருக்கடி சிக்கல் தோன்றியுள்ளது." என்றும் டாக்டர் சுகுணன் தெரிவித்தார்.

இதேபோன்று அம்பாறை மாவட்டத்திலும் டெல்றா தொற்று தொடர்பான அச்சம் நிலவி வருவதாகவும் அறியப்படுகின்றது.

# அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் அன்னைத் தமிழில் அர்ச்சனை நெடுங்காலக் கனவு கைப்பட்டுள்ளது!

- கனடா நக்கீரன்

தமிழக வரலாற்றில், தமிழின வரலாற்றில் கடந்த ஓகஸ்ட் 15 ஆம் நாள் முக்கியமான திருநாள் ஆகும். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற பெரியாரின் கனவையும் கலைஞர் கருணாநிதியின் சட்டத்தையும் நடைமுறைப் படுத்தியுள்ளார் தமிழ் நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். இதன் மூலம் மொத்தம் 51 ஆண்டுகால சமத்துவப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

தமிழகத்தில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக முடியும் என்பதற்கு வழிவகுக்கும் முறையில் அர்ச்சகர் பயிற்சி முடித்த பட்டியல் பிரிவு 5 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 6 பேர், பிற்படுத்தப்பட்டோர் 12 பேர், பொதுப் பிரிவைச் சேர்ந்தவர் ஒருவர், பெண் ஓதுவார் ஒருவர் என 58 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் ஸ்டாலின் வழங்கி வைத்தார்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற போராட்டத்துக்கு நீண்ட வரலாறு உண்டு. தந்தை பெரியார் மறைந்த போது கலைஞர் கருணாநிதி "பெரியாருக்கு எத்தனையோ விருப்பங்கள் உண்டு. சாதி பேதமற்ற சமுதாயம், மூட நம்பிக்கை ஒழிந்த சமுதாயம் இதையெல்லாம் காண வேண்டுமென்று பெரியார் ஆசைப்பட்டார். அவரது ஆசைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டன சமநீதிக்காகக் குரல் எழுப்பி, மக்களுக்கு எழுச்சியூட்டி, துடிப்புடன் இறுதி வரை தனது தள்ளாத வயதிலும் சமுதாய இழிவு ஒழிப்புக்காகப் போராடியவர் தந்தை பெரியார்" என்றார்.



பெரியார் சமூகநீதிக்காகக் குரல் எழுப்பி, மக்களுக்கு எழுச்சியூட்டி, துடிப்புடன் இறுதி வரை தனது தள்ளாத வயதிலும் சமுதாய இழிவு ஒழிப்புக்காகப் போராடியவர். இறப்பதற்கு முன்னர் அவர் ஆற்றிய உரையில் "ஐம்பது வருடமாய் உழைத்ததிலே ஏதோ கொஞ்சம் மாறுதல். அதுவும், எதிரே நம்மைப் பார்த்து, சூத்திரன் என்று சொல்லமாட்டான். வீட்டிலே பேசுவான். இந்தச் சூத்திரப் பசங்க என்றுதான் பேசுவான். இந்த இழிவிலே இருந்து நீங்கணும்" என்ற தனது விருப்பத்தை வெளியிட்டார்.

தமிழகத்தில் 1970 இல் கருவறை நுழைவுப் போராட்டத்தினை அறிவித்த தந்தை பெரியா-ர், அப்போராட்டத்திற்குக் காரணமான அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகவேண்டும் என்ற கோரிக்கையினைச் சட்டமாக்குவதாக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தந்தை பெரியாருக்கு உறுதியளித்ததின் விளைவாக அப்போராட்டத்தினை அவர் கைவிடுகிறார். அதன் பிறகு, தலைவர் கலைஞர் 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், பார்ப்பனர் அல்லாதோரும் பயிற்சி பெற்று, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்கள் ஆகலாம் என்ற சட்டத்தினைக் கொண்டுவந்து சட்ட சபையில் நிறைவேற்றினார்.

கலைஞர் இயற்றிய இச்சட்டத்தினை எதிர்த்து பார்ப்பனர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். அவ்வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள், அர்ச்சகர் நியமனத்தில் வாரிசு உரிமைக்கோர முடியாது என்றும் அதே வேளையில், அர்ச்சகர் நியமனத்தில் ஆகம விதிகள் மீறப்பட்டால், அச் சட்டத்தினை எதிர்த்த பார்ப்பனர்கள் மீண்டும் நீதிமன்றத்தை அணுகலாம் என்றும் தெரிவித்தனர்.

இந்தத் தீர்ப்பினைப் பற்றித் தந்தை பெரியா-ர் "ஆபரேஷன் வெற்றி நோயாளி மரணம்" என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தலையங்கத்தை விடுதலையில் எழுதினார். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் வகையில் அரசியற் சட்டத்தைத் திருத்த வேண்டும் என நாடாளுமன்றத்தில் தனிநபர் மசோதா ஒன்றைத் திமுக நா.உறுப்பினர் 1974 இல் கொண்டுவந்தார். அதன் பிறகு, திமுக வில் ஏற்பட்ட பிளவு, நெருக்கடி நிலை, திமுக ஆட்சிக் கலைப்பு என்று தமிழகத்தின் சமூகநீதி முன்னேற்றத்திற்கும் மாநில சுயாட்சிக்கும் அடுத்தடுத்த தடைக்கற்களை மத்திய ஆளும்வர்க்கம் ஏற்படுத்தியது.

அதற்குப் பின்னர் அமைந்த தமிழக அரசு, திராவிடக் கட்சியின் அரசாகவே இருந்தாலும், அதன் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர்" கடவுள் இல்லையென்று சொன்ன பெரியார் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகவேண்டு மென்று கூறினா-ரா? ஆச்சரியமாக இருக்கிறதே" என்று கேட்டார். இருந்தும் திராவிடர் கழகம் கொடுத்த அழுத்தத்தின் விளைவாக எம்ஜிஆர் ஆட்சியில் நீதியரசர் மகாராஜன் குழு அமைக்கப்பெற்றது. ஆகம விதிகள் மீறப்படாமல் அனைத்து சாதியினரும் எவ்வாறு அர்ச்சகர் ஆகமுடியும் என்ற ஆலோசனைகள் பெறப்பட்டன. அக்குழுவின், வேத, ஆகம பயிற்சிப் பள்ளிகளை நிறுவி அதன்மூலம் அனைத்துச் சாதியினரையும் பயிற்றுவித்து, அர்ச்சகர் ஆக்கலாம் என்ற பரிந்துரையை தமிழக அரசு ஏற்றுக்கொண்டது.

1991 இல் ஜெயலலிதா தலைமையில் அமைந்த அண்ணா திமுக அரசு வேத பயிற்சி பள்ளிகள் நிறுவப்படும் என்று அறிவித்தது. அவை அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் எனப் பெயர்மாற்றம் செய்யப்படவேண்டு மென்று திராவிடர் கழகம் வலியுறுத்தி வெற்றியும் பெற்றது. ஆனால், அன்றைய அரசின் அறிவிப்பு, அறிவிப்பாகவே நின்றுபோனது. 2006 இல் அமைந்த திமுக அரசு, அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளை நிறுவியதுடன் 69மூ விழுக்காடு அடிப்படையில் அவர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்றும் அரசாணை வழங்கியது.

இதனை எதிர்த்து மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் ஆதி சைவச் சிவாச்சாரியார்கள் நலச்சங்கம் மற்றும் தென்னிந்திய திருக்கோயில் பரிபாலன சபை ஆகியவற்றின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. உச்ச நீதிமன்றம் 2015 இல் தமிழக அரசின் சட்டத்திற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது. மூன்றாண்டுகள் கழித்து மாரிச்சாமி என்ற பார்ப்பனர் அல்லாத அர்ச்சகர் தமிழக அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலிருக்கும் மதுரை அழகர் கோவிலுக்குட்பட்ட அய்யப்பன் கோவிலில் அர்ச்சகராகப் பணியமர்த்தப்பட்டார்.

இது தொடர்பாக 2007 இல் தமிழக அரசு நீதியரசர் ஏ.கே. இராஜன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு சைவ ஆகமங்கள் என்பது ஒரு குறிப்பிட்ட சாதியினர் செய்யும் புரட்டு என்று தரவுகளுடனும் சான்றுகளுடனும் நிறுவியியது. மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவிலிலுள்ள நாற்பத்தியொரு அர்ச்சகர்களில் நால்வருக்கு மட்டுமே ஆகமங்கள் தெரியுமென்றும் மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலுள்ள நூற்றிப்பதினாறு அர்ச்சகர்களில் வெறும் இருபத்தியெட்டுப் பேருக்கு மட்டுமே ஆகமங்கள் தெரியுமென்றும் தெரிவித்தது.

தந்தை பெரியார் தன்னுடைய வாழ்நாளின் இறுதிப்பகுதியில் கூட தமிழர் சமூதாய இழிவு ஒழிப்பு மாநாடு என்று 1973 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8,9 ஆகிய நாட்களில் நடத்தினார்.

இந்த வரலாற்றுப் பின்னணியில்தான் ஆட்சிப் பொறுப்பேற்ற நூறாவது நாளில் அனைத்துச்சாதியினரும் அர்ச்சகர் ஆவதற்கான பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது ஆகும்.

ஆனால் இந்திய நாட்டிற்கே முன்னுதாரணமாகக் கேரளத்தில் பினராயி விஜயன் தலைமையிலான இடது சனநாயக முன்னணி அரசு ஏற்கனவே அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்கள் ஆக்கி வரலாறு படைத்துவிட்டது குறிப்பிடத்தக்கது. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று 2002 இல் வெளியான தீர்ப்பினை 16 ஆண்டுகள் கழித்து செயல்படுத்தியிருக்கிறது கேரள அரசு. அர்ச்சகர் பயிற்சி பெற்ற அனைத்து சமுதாயத்தினரும் அர்ச்சகராக நியமிக்கப்படுவதே சமூகநீதியாகும்.



பண்டைய தமிழகத்தில் எல்லா வகுப்பினருள்ளும் சிவனடியார்கள் தோன்றினார்கள். அறுபத்து மூவருள் பிராமண நாயன்மார்கள் பதினான்கு பேர் வணிக நாயன்மார் அறுவர் வேளாள நாயன்மார் பதின்மூவர் குருக்கள் மரபினர் நால்வர், வேடகோவர், வேடர், இடையர், வண்ணார், பரதவர், சாலியர், பாணர், பறையர், சான்றார் முதலிய வகுப்புக்களிலும் நாயன்மார் தோன்றினர்.

எனவே பக்தி இயக்க காலத்தில் (7 - 9 ஆம் நூற்றாண்டு) கொடிய சாதி வேறுபாடுகள் பாராட்டப் படவில்லை. சைவநெறி தழைத்தோங்கப் பாடுபட்டவர்களில் தேவார மூவரின் பங்களிப்புப் பெரிதாகும். இவர்கள் தந்த பண்சுமந்த பாடல்கள் தோத்திரப் பாக்களாக உள்ளன. இவர்கள் பாடிய தலங்கள் திருமுறைத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. தேவார மூவர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என அழைக்கப்படுகின்றனர்.

பிராமணரான சம்பந்தர், திருநாவுக்கரசருடைய கல்வியறிவு, பட்டறிவு, முதுமை, பக்தியின் சிறப்பு இவற்றைக் கருதி அவரை 'அப்பரே' **(Father)** என்றழைத்தார். பிராமணரான அப்பூதி அடிகளும் அவரது குடும்பமும் வேளாளரான திருநாவுக்கரசருடன் இருந்து உணவுண்டனர். அப்பருக்குப் பாத பூசை செய்தார். சிவப் பிராமணரான சுந்தரர் உருத்திரக் கணிகையரான பரவையாரையும் வேளாளப் பெண்மணியான சங்கிலியாரையும் மணந்துகொண்டது கவனிக்கத்தக்கது. சிவநேயச் செட்டியார் தம் மகளை மணந்துகொள்ளும்படி பிராமணரான சம்பந்தரை வேண்டியதும், வேளாளரான கோட்புலியார் தம் இரு பெண்களையும் மணந்துகொள்ளும்படி ஆதி சைவரான சுந்தரரை வேண்டினமையும் மனங்கொள்ளத்தக்கது.

திருஞானசம்பந்தர் தான் தரிசிக்கும் கோவில்களுக்கு தன்னோடு திருநீலகண்ட யாழ்ப்பாணரை அழைத்துச் சென்றார். திருஞான சம்பந்தர் பாடும் பாடல்களுக்கு பண்ணமைத்து திருநீலகண்டர் தனது யாழில் வாசித்தார். அவரது துணைவியார் மதுங்கசூளாமணி வாயால் பாடினார். இவர்கள் பாணர் குலத்தவர் ஆவர்.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கை வார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளரே," என்று திருநாவுக்கரசர் பாடியிருக்கிறார்.

இவை அனைத்தையும் நோக்க, அக்காலச் சிவனடியார்கட்குள் சாதி வேற்றுமை காட்டப்படவில்லை என்பதும், பக்தி ஒன்றுக்கே மதிப்புத் தரப்பட்டது என்பதும் தெரிகின்றன. அனைவரும் கலந்து ஒன்றாய்ப் பழகுதல், பாடுதல், உண்ணுதல், உறங்குதல் சமய வள்ர்ச்சிக்குத் தேவையானது எனக் கருதப்பட்டது. மேலும் சாதி வேறுபாடுகள் அற்ற சமணத்தையும் பவுத்தத்தையும் வெல்ல முயன்ற சைவத்தில் அவ்வேறுபாடுகள் இருத்தல் இழிவென்று அவர்கள் கருதியிருத்தல் வேண்டும்.

இறைவன் "ஏழிசையாய் இசைப்பயனாய்" இருப்பவன். "பண் அவனே" "பண்ணின் திறனும் அவனே" என்பது நாயன்மார்கள் கண்ட உண்மைகள். சமய தத்துவங்களில் உயர்ந்தது நாத தத்துவம். நாதத்திலிருந்து இசை தோன்றுகிறது. இறைவனே இசை வடிவமாய் இருக்கிறான் என்பது சைவ சமயக்கொள்கை. இதனால் இசையோடு தோத்திரங்களைப் பாடுவதால், இறைவன் மகிழ்வான். அருள் புரிவான் என்று சம்பந்தர் கூறியுள்ளார். "தமிழோடு இசை கேட்கும் இச்சையில் நித்தம் சம்பந்தர்க்கு காசு நல்கினீர்" என்று சுந்தரர் சிவனை நோக்கிக் கூறியிருத்தல், இசையை இறைவன் விரும்புகிறான் என்பதை உணர்த்துகிறது.

அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமித்ததன் மூலம் ஆகம விதிகள் மீறப்பட்டுள்ளதாக பாஜக தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. ஆனால் ஆகம விதிகளின்படிதான் பணிநியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் விளக்கம் அளித்துள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு தமிழ் உணர்வாளர்களின் இன்னொரு நீண்ட கால வேண்டுகோளை ஓகஸ்ட் மாதம் 6 ஆம் நாள் நிறைவேற்றியிருக்கிறது. கோவில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 47 கோவில்களில் தமிழ் மந்திரங்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

சைவநெறி தழைத்தோங்க பாடுபட்டவர்களில் தேவார மூவரின் பங்களிப்புப் பெரிதாகும். இவர்கள் தந்த பண்சுமந்த பாடல்கள் தோத்திரப் பாடல்களாக பயன்படுத்தப்படுகின்றன.

சைவநெறி தழைத்தோங்க பாடுபட்டவர்களில் தேவார மூவரின் பங்களிப்புப் பெரிதாகும். இவர்கள் தந்த பண்சுமந்த பாடல்கள் தோத்திரப் பாடல்களாக உள்ளன. இவர்கள் பாடிய தலங்கள் திருமுறைத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

அன்னை தமிழில் அர்ச்சனை என்ற திட்டம் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் தொடங்கப்பட்டுள்ளது. தமிழில் அர்ச்சனைசெய்ய விரும்பும் அடியார்கள் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு அர்ச்சனை செய்து கொள்ளலாம்.

முதற் கட்டமாக வடபழனி முருகன் கோயில், திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில் உள்ளிட்ட 47 பெரிய திருக்கோயில்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதையடுத்து, தமிழகம் முழுவதும் உள்ள 539 முக்கிய கோயில்களில் 'அன்னை தமிழில் அர்ச்சனை' செய்யும் திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்காக, முருகன், விநாயகர், பெருமாள், சிவன், அம்மன் எனத் தனித்தனி கடவுள்களுக்கு ஏற்றவகையில் போற்றிப் புத்தகங்கள் வெளியிடப்படவுள்ளன.

மேலும் தமிழகத்தில் உள்ள கோயில்களில் அப்பகுதியில் உள்ளபெரும்பான்மை மக்கள் விருப்பப்பட்டால் அக்கோயில்களில் தமிழில் குடமுழுக்குச் செய்யப்படும். எந்தவிதமான முரண்பாட்டுக்கும் இடமில்லாமல், யார் மனதும் புண்படாமல் ஆகம விதிகளைப் பின்பற்றி முறையாக குடமுழுக்கு அனைத்து கோயில்களிலும் செய்யப்படும்.


தமிழகத்தில் தமிழ் வழிபாட்டிற்கும் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கும் பெரும் பணியும் தொடக்கப்பட்டுள்ளது. இது ஒரு நல்ல தொடக்கம். தேவையான அளவு அர்ச்சகர் பயிற்சி பள்ளிகளைத் திறந்து பட்டயப் படிப்பு மட்டுமின்றி பட்டப்படிப்பையும் உருவாக்கி சாதி வித்தியாசம் இன்றி அனைத்துக் கோவில்களிலும் அர்ச்சகர் பணிநியமனங்கள் செய்யப்பட வேண்டும்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் அன்னைத் தமிழில் அர்ச்சனை என்ற தமிழர்களின் நெடுங்காலக் கனவு கைப்பட்டுள்ளது!

இந்தியா செய்திகள்
India News

# வருமான வரி தொடர்பாக தமிழ்ச் சினிமா நடிகர்கள் தொடர்ச்சியாக நீதி மன்றத்தை நாடுகின்றார்கள்

## நடிகர் சூர்யா தொடர்ந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது



வருமான வரிக்கு வட்டி செலுத்துவதில் இருந்து விலக்கு கோரி நடிகர் சூர்யா தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்தது சென்னை உயர் நீதிமன்றம். வரிமான வரி தொடர்பாக தமிழ்ச் சினிமா நடிகர்கள் தொடர்ச்சியாக நீதி மன்றத்தை நாடுகின்றார்கள். இந்த வரிசையில் நடிகர் விஜேய் உடன் நடிகர் சூரியாவும் இணைந்து விட்டார் என எமது சென்னைச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

2007-08, 2008-09 ம் ஆண்டுகளுக்கு 3 கோடியே 11 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் வரி செலுத்த வேண்டும் என்று மதிப்பீடு செய்து 2011ம் ஆண்டு வருமான வரித்துறை நடிகர் சூரியாவிற்கு உத்தரவு பிறப்பித்தது.

மேற்படி வழக்கு விசாரணைக்கு வந்தபோது, வருமான வரியை நிர்ணயித்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் வருமானவரித்துறை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் 3 ஆண்டுகளுக்கு பிறகு முடிவு செய்ததால் தனக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் - என்று வாதிட்டார் நடிகர் சூர்யா.

வருமான வரி மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு சூர்யா முழு ஒத்துழைப்பு தராததால் வட்டி விலக்கு பெற உர்மையில்லை - என்று வாதிட்டது வருமான வரித்துறை.

இறுதியில் வருமான வரி தரப்பு வாதத்தை ஏற்று நீதிபதி எஸ்.எம். சுப்ரமணியம் சூர்யா மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு வழங்கினார்



# எழுத்தாளர்கள் விருதுபெற விண்ணப்பிக்கும் நடைமுறை மாற்றப்பட வேண்டும்

## நடிகர் கமல்ஹாசன்

எழுத்தாளர்களை, அறிஞர்களை, கலைஞர்களை விருதுகள் வழங்கிப் போற்றுவது ஓர் ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளம். பண்பாட்டிற்குப் பங்களித்த ஆளுமைகளைக் கவுரவிக்க எண்ணற்ற விருதுகள் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம் எனும் அறிவிப்பும் அவ்வப்போது வெளியாகின்றன. விண்ணப்பித்துப் பெறுவதன் பெயர் விருதல்ல. அதன் பெயர் பரிசு. விருதென்பது தகுதியான ஆளுமையைத் தேடி வரவேண்டிய ஒன்று.

கூருணர்வுள்ள எந்தக் கலைஞனும் அமைப்பிற்கு வெளியேதான் தன்னை நிறுத்திக்கொள்வான். எங்கும் தன்னை முன்னிறுத்திக்கொள்ள மாட்டான். சிபாரிசுக் கடிதங்களுக்கு அலைவதோ, தன்னுடைய நூல்களைத் தானே வாங்கி அனுப்பி வைப்பதோ, சான்றிதழ்களை இணைப்பதோ அவனைப் பொருத்தவரை கவுரவமான ஒன்றல்ல. அந்த நிமிர்வே ஒரு கலைஞனின் முதன்மையான அடையாளம். விண்ணப்பித்துப் பெறக்கூடிய எந்த விருதும் தன் ஆளுமைக்கு இழுக்கு என்றே எந்த அசலான கலைஞனும் நினைப்பான்.

வயிற்றுப்பாட்டுக்குக் கடன் கேட்கவே நல்ல கலைஞன் யோசிப்பான். கடன் கேட்டு அவமானப்படுவதற்குப் பதிலாகப் பட்டினியே கிடக்கலாம் என நினைப்பான். எனக்குத் தெரிந்த, எனக்குக் கற்பித்த எந்தக் கலைஞனும் விருதுக்கு அலைந்ததில்லை. ஒருவருக்கு ஒருவர் முண்டியடித்து விண்ணப்பித்து போட்டி போட்டு உறிப்பானை அடிப்பது போல விருதுக்கு விண்ணப்பம் கேட்டால், அசலான கலைஞர்கள் மௌனமாக நகர்ந்துவிடுவார்கள்.

ஒவ்வொரு விருதுக்கும் தகுதியானவர்களைக் கொண்டு நடுவர் குழு அமைக்கப்பட வேண்டும். விருதிற்குரிய நபர்களைத் தேடிக் கண்டடைவது இந்தக் குழுவின் பொறுப்பு. நடுவர் குழு உறுப்பினர்களின் விபரங்கள் பொதுவெளியில் வைக்கப்பட வேண்டும். இன்னின்ன தகுதிகளின் அடிப்படையில் இவ்விருதுக்கு இன்னார் தேர்வு செய்யப்பட்டார் என்பதை நடுவர் குழு அறிவிக்க வேண்டும்.

முடிந்தவரை விருதுகளை அக்கலைஞன் வாழும் ஊரில் சென்று விழா எடுத்து வழங்கவேண்டும். அவன் வாழும் சூழலில் அவனுக்குரிய கவனத்தையும் அங்கீகாரத்தையும் ஏற்பையும் உருவாக்கியளிப்பதே விருதுகளின் நோக்கமாக இருக்கவேண்டும்.

பல நல்ல கலைஞர்களை அவர்கள் இருக்கும்போதே கொண்டாடத் தவறிய பழி தமிழ்ச் சமூகத்திற்கு உண்டு. தகுதி வாய்ந்த ஒருவர் விருதுகளைப் பெறுவதற்கு முன்னரே இறந்துவிட்டாரெனின், தாமதம் ஆனாலும் அவருக்குரிய கவுரவம் செய்யப்பட வேண்டும்.

உனக்கு விருது வேண்டுமானால் நீதான் விண்ணப்பிக்க வேண்டும், என்னைத் தேடிவந்து வரிசையில் நின்று பணிந்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதில் ஒருவகையான மன்னராட்சி தொனி இருக்கிறது. இந்த வழக்கத்தை உடனடியாக மாற்றுவதுதான் நல்ல அரசின், நல்ல அரசாட்சியின் செயல்.

தமிழக முதல்வர் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



WE HAVE MOVED INTO A NEW SPACE TO SERVE YOU BETTER!

உங்கள் நலன்கருதி புதிய முகவரிக்கு எமது சட்ட அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது!

JOIN US FOR RIBBON CUTTING, REFRESHMENTS & A RAFFLE!

@theva.law

# GRAND OPENING

NEW LOCATION

# THEVA LAW

PROFESSIONAL CORPORATION

**SUNDAY AUGUST 22, 2021 @ 2 PM**

# மாபெரும் திறப்புவிழா!!!

எமது சட்ட அலுவலக திறப்புவிழாவில் கலந்து சிற்றுண்டியருந்தி அதிஸ்டலாப சீட்டிழுப்பிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

3 Centre Street, Suite 208
Markham, ON L3P 3P9
(MARKHAM RD & HIGHWAY 7)

info@thevalaw.com | 647-308-0517 | www.thevalaw.com

REAL ESTATE WILLS & ESTATES CORPORATE NOTARY PUBLIC

## வெள்ளி விழாக் காணும் உதயன் பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்கள்!






பணத்தை முதலீடு செய்ய விரும்புகின்றவர்களுக்கு நம்பமுடியாத விலைகளில் Condo Units



TESKA DEVELOPMENT

Welcome to Condo cottage in Halliburton county. This is a affordable turn key condo close to water and nature. Halliburton County, about one hour north of Peterborough, 15 minutes from Bancroft. There will be place to park your boats.

Free Assignment | Free parking
Affordable pricing | Rental guaranteed

Two bedroom, 1 washroom units (800 sqft) are starting at $267,500

One bedroom and one washroom units (600 sqft) are starting at $225,000

நவீன வாழ்க்கை தரத்துக்கு ஓர் சிறந்த முதலீடு!

This Development geared toward public offering only, we do not provide any commission for real estate agent/ broker. This allow us to to keep the cost low.

For all your enquiries:
Tim Siva – Business Development Manager
Teska Development Inc.
647-762-1740
www.teskadevelopment.com/cardiff
timsiva10@gmail.com



கனடாவில்
ஒரே நாளில் ஒரே மேடையில்

POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby

உதயன் வெள்ளி விழாவும்
நண்பன் WORLDWIDE விருது விழாவும்

Tasty தமிழா

30.10.2021
சனிக்கிழமை
மாலை 6.00 மணி தொடக்கம்

கலை நிகழ்ச்சிகள், இசை,
விருதுகள் வழங்கல்,
இராப்போசன விருந்து

Covid-19
கட்டுப்பாடுகளுக்கு
ஏற்ப
அழைக்கப்படுவோரின்
எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்படும்

Netwyn.Place Auditorium
10. Thornmount Drive
Scarborough ON, M1B 3J4

அனுமதிச் சீட்டுகளுக்கு
416 732 1608 அல்லது 647 762 9512

# 100% கரோனா தடுப்பூசி செலுத்திய ஊராட்சி



கும்பகோணம் அருகே 100 சதவீதம் கரோனா தடுப்பூசி செலுத்திய ஊராட்சி சார்பில் இன்று சுகாதாரப் பணியாளர்களுக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இதையடுத்து சுகாதாரப் பணியாளர்கள் மாவட்ட ஆட்சியருக்கு இது தொடர்பாகப் பரிந்துரையை வழங்கியுள்ளனர்.தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் சோழன்மாளிகை ஊராட்சி உள்ளது. இங்கு 9 வார்டுகளில் 962 வீடுகள் உள்ளன. இதில் 18 வயதுக்கு மேல் 1,950 பேர் வசித்து வருகின்றனர்.


இந்த கிராமத்தில் அனைவருக்கும் கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு, 100 சதவீதம் பூர்த்தி அடைந்ததைத் தொடர்ந்து இன்று ஊராட்சி மன்ற அலுவலகத்தில் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஊராட்சி நிர்வாகம் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.விழாவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் பி.ஜெயக்குமார் தலைமை வகித்தார். விழாவில் பட்டீஸ்வரம் வட்டார சுகாதார மருத்துவ அலுவலர் பிரேமா, மருத்துவ அலுவலர் புனிதவதி, சுகாதாரப் பணியாளர்கள், ஊராட்சி மன்றச் செயலர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து ஊராட்சி மன்றத் தலைவர் பி.ஜெயக்குமார் கூறுகையில், ''கரோனா முதல் அலை வந்தபோது நாங்கள் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாகக் கடைப்பிடித்தோம். மேலும் தொடர்ந்து கரோனா இரண்டாவது அலை வந்தபோது பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து, வீட்டுக்கு வீடு சென்று மருத்துவப் பரிசோதனைகள் செய்தும், முகக்கவசங்களையும் வழங்கினோம், வாரம் இரு முறை ஊராட்சி முழுவதும் கிருமிநாசினி தெளிக்கப்பட்டது.கரோனோ தடுப்பூசி செலுத்திக்கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தி கிராமத்தில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதற்காக சுகாதாரப் பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது'' என்றார். இதுகுறித்து பட்டீஸ்வரம் அரசு வட்டாரத் துணை மருத்துவமனை மருத்துவ அலுவலர் புனிதவதி கூறுகையில், ''பட்டீஸ்வரம் மருத்துவமனைக்கு 11 ஊராட்சிகள் உள்ளன.

இதில் கரோனா பாதிப்பு ஏற்பட்டபோது 38 பேர் பாதிக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.கரோனா தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டதும் , சோழன்மாளிகை ஊராட்சியில் பொதுமக்கள் ஆர்வத்துடன் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்வந்தனர். அதன்படி 18 வயது நிரம்பிய 1,950 பேருக்கு மேல் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாகக் கடந்த ஆக.4ம் தேதி தொடங்கி ஆக.14 ம் தேதி வரை வீடு வீடாகச் சென்று தடுப்பூசி செலுத்தப்பட்டது. இதில் கோவிஷீல்டு, கோவாக்சின் போன்ற தடுப்பூசிகளே பொதுமக்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளன.தற்போது இந்த ஊராட்சியில் 100 சதவீத தடுப்பூசி செலுத்தப்பட்டதை அடுத்து, இதன் விவரத்தை மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரைத்துள்ளோம்.

தமிழக அளவில் இந்த ஊராட்சி மூன்றாவது ஊராட்சியாக 100 சதவீதம் தடுப்பூசி செலுத்தப்பட்ட ஊராட்சியாக சுகாதாரத் துறையின் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.அனைவரும் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டதையடுத்து இந்த கிராம மக்கள் சார்பில் இன்று, சுகாதாரப் பணியாளர்களுக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டுள்ளது'' என்றார்.

# மத்திய அரசின் ரூ.7 லட்சம் கோடி திட்டங்களால் தமிழகம் பயனடைந்துள்ளது: எல்.முருகன்



மத்திய அரசின் ரூ.7 லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்கள் மூலம் தமிழகம் பயனடைந்துள்ளது என்று, மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்துள்ளார். மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் எல்.முருகன், சேலத்தில் மக்கள் ஆசி யாத்திரையை மேற்கொண்டு, மக்களைச் சந்தித்தார். அவருக்குப் பொதுமக்களும், பாஜக தொண்டர்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர். இதன் பின்னர் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:''மத்திய அமைச்சரவையை விரிவாக்கம் செய்த பிரதமர் மோடி, அதில் பட்டியல் இனத்தைச் சேர்ந்த 12 பேர், மலைவாழ் மக்கள் சமூகத்தைச் சேர்ந்த 8 பேர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட மக்களைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட 43 பேரை மத்திய அமைச்சர்களாக்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினராகக் கூட நான் இருக்கவில்லை. அமைச்சராக நாடாளுமன்றத்துக்குச் செல்வதற்கு மிகுந்த எதிர்பார்ப்போடு இருந்தேன். அரசியல் பின்புலம் ஏதுமில்லாத சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த 43 அமைச்சர்களையும், அறிமுகம் செய்து வைக்க, நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி காத்திருந்தார். ஆனால், எதிர்க்கட்சிகள் சதி செய்து, கூச்சல் குழப்பம் ஏற்படுத்தி, அறிமுக நிகழ்ச்சியைத் தடுத்துவிட்டனர். இதனால், அறிமுக வாய்ப்பை நாங்கள் இழந்துவிட்டோம்.மத்திய அரசின் திட்டங்களை மக்களுக்குக் கூறி, அவர்களின் ஆசியைப் பெற நடத்தப்பட்ட மக்கள் ஆசி யாத்திரையில், 3 நாட்களில் 6 நாடாளுமன்றத் தொகுதிகளில் 169 இடங்களில் மக்களைச் சந்தித்தேன்.

மத்திய அரசின் திட்டங்களால் அதிகம் பயனடைந்த மாநிலமாகத் தமிழகம் உள்ளது. இந்தியாவில் 54 கோடி மக்களுக்கு கரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மத்திய அரசு அறிவித்த 2 ராணுவத் தளவாட உற்பத்தி தொழில் வழித்தடங்களில் ஒன்று உத்தரப் பிரதேசத்துக்கும் மற்றொன்று தமிழகத்துக்கும் ஒதுக்கப்பட்டது. மீன்வளத்துறை சார்பில் சென்னையில், சிறப்புப் பொருளாதார கடற்பாசி பூங்கா ரூ.3 லட்சம் கோடி மதிப்பில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கவும், நாடு முழுவதும் கால்நடைத்துறை மூலம் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தியை மேம்படுத்தவும் ரூ.54 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீன்வளத்துறை மேம்பாட்டுக்காக ரூ.20 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக மத்திய அரசின் ரூ.7 லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்கள் மூலம் தமிழகம் பயனடைந்துள்ளது. 2014க்குப் பிறகு தமிழகத்தைச் சேர்ந்த ஒரு மீனவர் கூட தாக்கப்படவில்லை. மீனவர் பிரச்சினை வரும் போது இலங்கை அரசுடன் பேசி தீர்வு காணப்பட்டு வருகிறது. மீனவர் நலனுக்காக மத்திய அரசு தொடர்ந்து செயல்படும். கடந்த காலத்தில் இலங்கையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 4 பேர், அதில் இருந்து மீட்கப்பட்டனர்.பெட்ரோல், டீசலை ஜிஎஸ்டியின் கீழ் கொண்டுவர பெரும்பாலான மாநிலங்கள் தயாராகவில்லை. தமிழகத்தில் தேர்தலின்போது அளித்த வாக்குறுதியின்படி, திமுக நடந்து கொள்ளவில்லை. பெட்ரோலுக்கு ரூ.5 குறைப்போம் என்று வாக்குறுதி அளித்துவிட்டு ரூ.3 மட்டுமே குறைக்கப்பட்டுள்ளது. டீசல் விலை குறைக்கப்பட வில்லை. மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகை, பயிர்க் கடன், கல்விக் கடன் உள்ளிட்ட வாக்குறுதிகளைச் செயல்படுத்துவதற்கான விவரங்கள் நிதிநிலை அறிக்கையில் இல்லை. மொத்தத்தில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசாகவே திமுக உள்ளது''. இவ்வாறு எல்.முருகன் தெரிவித்தார்.பேட்டியின்போது, தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, கயிறு வாரிய முன்னாள் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# ஆங்கிலக் கடிதத்துக்கு இந்தியில் பதிலா? மாநில மொழியில் பதிலளிக்க மத்திய அரசுக்கு உத்தரவு



மதுரை எம்.பி.யின் ஆங்கிலக் கடிதத்துக்கு இந்தியில் பதில் கடிதம் அனுப்பிய விவகாரத்தில் மத்திய அரசும், அதன் அதிகாரிகளும் இந்திய அலுவல் மொழி சட்டத்தை முறையாகப் பின்பற்ற வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த மனு:

''மத்திய ரிசர்வ் படையில் குரூப் பி மற்றும் குரூப் சி பிரிவில் 780 பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்துத் தேர்வு டிச. 20ல் நடைபெறுகிறது. இதற்குத் தமிழகம், புதுச்சேரியில் ஒரு தேர்வு மையம் கூட அமைக்கவில்லை. இதனால் இவ்விரு மாநில விண்ணப்பதாரர்களின் நலனுக்காக குறைந்தபட்சம் ஒரு தேர்வு மையம் அமைக்கக் கோரி உள்துறை அமைச்சகம் மற்றும் சி.ஆர்.பி.எஃப். பொது இயக்குநருக்கு அக். 9ல் கடிதம் அனுப்பினேன்.

எனது கடிதத்துக்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த ராய், நவ.9ல் இந்தி மொழியில் பதில் கடிதம் அனுப்பியிருந்தார். இந்தியில் பதில் அளித்தது சட்ட விதி மீறலாகும். இதுதொடர்பாக உள்துறை இணை அமைச்சகத்திற்கு நவ. 19ல் எழுதிய கடிதத்துக்கு இதுவரை பதில் வரவில்லை. இந்தியில் அனுப்பிய கடிதத்தைத் திரும்பப் பெறவோ, ஆங்கிலத்தில் கடிதம் அனுப்பவோ நடவடிக்கை எடுக்கவில்லை.

தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியில் மட்டுமே பதில் அளிக்கும் நடைமுறை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழக மக்கள் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யக்கேட்டு மத்திய அரசுக்கு அனுப்பும் கடிதங்களுக்கும் இந்தியில் பதிலளிப்பது தொடர்கிறது. இது அரசியலமைப்புச் சட்ட உரிமைகளுக்கும், 1963ம் ஆண்டின் அலுவல் மொழிச் சட்டத்திற்கும் முரணானதாகும். இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களின் உரிமைகளை மீறுவதாகும்.

எனவே, தமிழக அரசுக்கும், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழக மக்களுக்கும் இந்தி மொழியில் கடிதம் அனுப்பக்கூடாது என்றும், ஆங்கிலத்தில் மட்டுமே கடிதங்கள் அனுப்ப வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். எனக்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் அனுப்பிய இந்தி கடிதத்தில் ஆங்கில வடிவத்தை உடனே வழங்கவும், விதியை மீறும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும்''. இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு மீது நீதிபதிகள் என்.கிருபாகரன், எம்.துரைசாமி அமர்வு இன்று பிறப்பித்த உத்தரவு: ''தாய்மொழி என்பது மிகவும் முக்கியமானது. அடிப்படைக் கல்வி தாய் மொழியிலேயே வழங்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக தற்போது ஆங்கில வழிக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆங்கில மொழிக்குப் பொருளாதார அடிப்படையிலும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இருப்பினும் எந்தத் தகவலும், விளக்கமாக இருந்தாலும் தாய்மொழியில் புரியும்போது மட்டுமே முழுமையடைகிறது.

இந்தியாவில் சில மொழிகள் ஆயிரம் ஆண்டுகள் பழமையானவை. பல மொழிகள் நூறு ஆண்டுகள் பழமையானவை. ஒவ்வொரு மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றின் வளர்ச்சிக்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒரு மாநில அரசு எந்த மொழியில் மத்திய அரசுக்கு விண்ணப்பம் அனுப்புகிறதோ, அதே மொழியிலேயே மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும். இதை இந்திய அலுவலக மொழிச் சட்டமும் உறுதி செய்கிறது.

ஆனால் மனுதாரரின் ஆங்கிலக் கடிதத்துக்கு இந்தி மொழியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதில் விதியை மீறும் எண்ணமில்லை என மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் மத்திய அரசு மற்றும் அதன் அலுவலர்கள் இந்திய அலுவல் மொழிச் சட்டத்தை முறையாகப் பின்பற்ற வேண்டும்''. இவ்வாறு நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



Chapel Ridge FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்டத்தில் மேலும் புதிதாக 43 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

மன்னார் மாவட்டத்தில் இது வரை 13 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ள போதும் இதில் 4 மரணங்கள் கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்ட பின்னர் இடம் பெற்றுள்ளது. இந்த மரணங்களில் 3 பேர் தடுப்பூசி எதனையும் பெற்றுக் கொள்ளாத நிலையில் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் புதன்கிழமை (18) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 30 வயதிற்கு மேற்பட்ட 58 ஆயிரத்து 378 பேருக்கு முதலாவது கொரோனா தடுப்பூசியும், 44 ஆயிரத்து 588 பேருக்கு இரண்டாவது தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது.

முதலாவது தடுப்பூசி 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 76 சதவீதமும், 2 ஆவது தடுப்பூசி 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 55 சதவீதமும் செவ்வாய்க்கிழமை (17) மாலை வரை வழங்கி முடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 1330 கொரோனா தொற்றாளர்கள் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 1313 பேர் இவ் வருடம் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 979 பேர் புத்தாண்டு கொத்தனியுடன் தொடர்புடையவர்களாக காணப்படுகின்றனர். இந்த மாதம் மொத்தமாக 289 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை (17) மேலும் 43 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 11 பேர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையிலும், 25 பேர் சமுதாயத்திலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இவர்களில் 25 பேர் அன்ரிஜன் பரிசோதனையின் போது கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் 13 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளது. இதில் நான்கு மரணங்கள் கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்ட பின்னரே இடம் பெற்றுள்ளது.

இந்த மரணங்களில் 3 பேர் தடுப்பூசி எதனையும் பெற்றுக் கொள்ளாத நிலையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். அவர்களின் இருப்பிடங்களில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவிற்குள் கொரோனா தடுப்பூசி வழங்கும் நிலையம் காணப்பட்ட போதும் அவர்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லை.

மரணித்த நான்காவது நபர் முதலாவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ள நிலையில் உயிரிழந்துள்ளார். தற்போது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது.எனவே பொதுமக்கள் விழிப்புடன் சுகாதார நடை முறைகளை பின் பற்றிக்கொள்ள வேண்டும்.



குணம் குறிகள் எதுவும் காணப்பட்டால் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சென்று தங்களை பரிசோதித்துக் கொள்வதற்கான வசதிகள் மன்னார் வைத்தியசாலையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது கொரோனா தொற்றாளர்கள் போதுமான அளவு இடவசதி உள்ள காரணத்தினால் வீடுகளில் தங்க வைத்து சுகாதார அதிகாரிகளின் கண்காணிப்பில் பராமரிக்கப்பட்டு வருகின்றமையினால் மக்கள் தமக்கு எதுவும் குணம் குறிகள் காணப்பட்டால் எவ்வித அச்சமும் இன்றி சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அருகில் உள்ள வைத்தியசாலையினையோ நாட முடியும்.

தற்போதைய சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக எவ்வித ஒன்றுகூடலையும் நடத்த முடியாது என்பதால் மக்கள் ஒன்று கூடலினை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பொலிஸார் அல்லது சுகாதார துறையினருக்கு தெரியாமல் இரகசியாமாக ஒன்று கூடுவதையும், நிகழ்வுகளை நடத்துவதையும் தவிர்த்துக் கொள்வது நல்லது.

பைஸர் தடுப்பூசியின் 2வது தடுப்பூசி முருங்கன் டொன் பொஸ்கோ தொழில் பயிற்சி நிலையத்திலும், மறுச்சிக்கட்டி அல் ஜஸீர் பாடசாலையிலும் நாளை வியாழக்கிழமை காலை முதல் வழங்கப்பட உள்ளது. இப்பகுதிகளில் 2 ஆவது தடுப்பு ஊசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் சென்று பெற்றுக் கொள்ள முடியும்.

மன்னார் நகரத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை 2 ஆவது தடுப்பு ஊசியை பெற்றுக்கொள்ள முடியும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (18-08-2021)**



# மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் அவசர கோரிக்கை

மன்னார் மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பலிகளை நடத்தாது இருக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இன் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வியாழக்கிழமை (19) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் அரசு மற்றும் சுகாதார துறையினர் இறுக்கமாக சுகாதார நடைமுறைகளை அமுல் படுத்தி உள்ளனர்.

அதற்கமைவாக மதஸ்தலங்களில் எவ்வித கூட்டு பிரார்த்தனைகளையும் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பலிகளை மேற்கொள்ள தடை விதிக்குமாறு கோரி மன்னார் மறைமாவட்ட ஆயரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ள நிலையில் திருப்பலிகள் மற்றும் வழிபாடுகள் அனைத்தும் நிறுத்த ஆயர் அவர்கள் பங்கு தந்தையருக்கு அறிவித்துள்ளார்.

மேலும் இந்து மற்றும் இஸ்லாமிய மதஸ்தலங்களிலும் மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்க உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.

அனைவரது பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் பட்சத்தில் மன்னார் மாவட்டத்தினை கொரோனா தொற்றில் இருந்து முழுமையாக பாதுகாத்துக் கொள்ள முடியும். இதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (19-08-2021)**







Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS

25 வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 24)*





# வந்தியத்தேவனின் கோடிக்கரைப் பயணம்

அவன் காதுகளில் இனிய கானம் ஒலித்தது. ஒலி வந்த திசையை நோக்கினான் அங்கு பூங்குழலி பொலிந்த முகத்தடன் கண்களை அகல விரித்து, கைகளை ஏந்தியபடி பாடிக் கொண்டிருந்தாள். அவன் பார்வை தன்னில் விழுவதைக் கண்ட பூங்குழலி, ‘என்னை எதற்காகத் தொடர்ந்து வந்தாய்?’ என்றாள். ‘நீ தானே உன் காதலர்களைக் காட்டுவதாகச் சொன்னாய் உண்மையில் சேந்தன் அமுதன் உன் காதலன் இல்லை என்றாய். இது யார் என்று பார்த்துவிட வேண்டும் என்று வந்தேன். நானும் கூட விண்ணப்பிக்கலாம் தானே’ என்றான். அதற்கு பூங்குழலி, ‘காதல் கீதல் எல்லாம் என்னோடு வைத்திருக்காதே’ என்று கோபத்தில் முகம் சிவந்தபடி சொன்னாள். திடீர் என்று வந்தியத்தேவன் உடல் நடுங்கியது, மூச்சுத் திணறியது, நாக்கு வரண்டது இது என்ன? கரிய இருளில் அங்காங்கே அக்கினி குண்டங்கள் தொகை தொகையாக மேலே எழுந்தன. இந்த அக்கினி குண்டங்களைக் கண்டு பெரும் பீதி கொண்டிருந்தான் வந்தியத்தேவன். பூங்குழலியோ அந்த அக்கினிக் குண்டங்களைச் சிரித்துச் சிரித்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் சிரிப்பு பேய்ச் சிரிப்பு என்றாலும் அது வந்தியத்தேவனிற்கு ஆறுதல் கொடுத்தது. ஒரு மனிதப் பெண் என் அருகே இருக்கிறாள் என்று. அவள் குரலும் அவனுக்கு கேட்டது. ‘இந்தக் கொள்ளிவால் பிசாசுகள் தான் என் காதலர்கள் இவர்களைப் பார்த்து சல்லாபம் செய்ய நள்ளிரவில் வருவேன்’ என்றாள். இந்தப் பித்துப் பிடித்த பெண்ணுடன் இலங்கை செல்வது நடக்காது! என்று எண்ணிக் கொண்டு, ‘இது தானா கொள்ளிவால் பிசாசு நான் ஒரு படித்த முட்டாள் ஆகிவிட்டேன். அதன் தோற்றத்தைக் கண்டு பயந்து நடுங்கிவிட்டேன் நான் எங்கே நிற்கிறேன். இது எப்படி உருவாகின்றது என்று சிந்திக்கவில்லை அறிவு பயத்தைப் போக்கும் நான் ஓர் அறிவிலியா? காந்தம் கலந்த பூமிப் பிரதேசங்களில் தண்ணீர் வெகு காலமாக தேங்கி நின்றால் அது சதுப்பு நிலமாகும். இந்த சதுப்பு நிலங்களில் இருந்து வாயு வெளியே வரும் போது நெருப்பு பிளம்பு வருவது போல் இருக்கும். சில நேரங்களில் குபு குபு என்ற வந்து மறையும் சில நேரங்களில் தங்கி நிற்கும். இதைக் கண்டு அறியாத மக்கள் பயப்படுவார்கள். கொள்ளி வால் பிசாசு என்று பெயரும் தந்தார்கள் அது தான் இது இந்த பிரமை பிடித்த பெண்ணிற்கு ஏன் தெளிவான விளக்கம்? பெண்ணே போகலாமா?’ என்றான் வந்தியத்தேவன். அவளோ விம்மத் தொடங்கினாள். ‘உன் காதலர்கள் எப்போதும் இங்குதான் இருப்பார்கள் நாளை பார்க்கலாம் வா’ என்றான். அவளோ வருவதாக இல்லை. அலுத்துக் கொண்ட வந்தியத்தேவன் சரி நான் போகின்றேன் என்றான். உடனே பூங்குழலியும் இறங்கினாள். இருவரும் கலங்கரை விளக்கம் நோக்கி நடந்தனர்.

அப்போது வந்தியத்தேவன், ‘வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றுகின்றதே அது பற்றி உன் கருத்து என்ன?’ என்றான். பூங்குழலி, ‘என் கருத்து ஒன்றும் இல்லை வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றுகிறது அவ்வளவுதான்! இப்படித் தோன்றினால் பெரிய கேடு விளையும் என்று மக்கள் பேசிக் கொள்வதும் தெரியும். நான் சோதிட சாஸ்திரம் படிக்கவில்லை எப்படிக் கருத்துச் சொல்வது’ என்றாள். பின்னர் வந்தியத்தேவனைப் பார்த்து, ‘சக்கரவர்த்தி உடம்பு சுகமில்லை என்று சொல்கிறார்கள் அதில் ஏதும் உண்மை உண்டா?’ என்றாள். பரவாயில்லை இவளிற்காவது இது எல்லாம் தெரிகிறதே! ‘ஆமாம் சக்கரவர்த்தி படுத்த படுக்கையாய் இருக்கிறார் அவரால் எழுந்து நடக்க முடியாது. அவரைக் குணமாக்க நான் இலங்கை போய் அங்குள்ள அபூர்வ சஞ்சீவியைக் கொண்டு வர வேண்டும். அப்பொழுது தான் சக்கரவர்த்தியை பிழைக்க வைக்க முடியும் நீ என்னுடன் இலங்கைக்கு வருகி-றாயா?’ என்றான். அவன் கூறியதைக் காதில் வாங்கிக் கொள்ளாத பூங்குழலி ‘இவரிற்கு பிறகு பட்டத்திற்கு வருவது யார்?’ என்று கேட்டாள். நீயும் நானும் இந்த நாட்டுப் பிரசைகள் அல்லவா? ஆதித்த கரிகாலனுக்கு யுவராஜ பட்டம் கட்டியாயிற்று அப்பொழுது அவர் தானே வருவார். மதுராந்தகன் தனக்கு இப்போது ராஜ்ஜியம் வேண்டும் என்கிறாராமே! இதில் யாருக்கு உரிமை கிடைக்கும்? என்றாள் பூங்குழலி. வந்தியத்தேவனோ இது என்ன இத்தனை விடயங்களை இவள் இவ்விடம் தெரிந்து கொண்டிருக்கிறாளே இவள் பித்துப் பிடித்தவள் அல்ல ஏன் பித்துப் பிடித்தவள் போல் நடந்து கொள்கிறாள் என்பது புரியவில்லை! சுந்தர சோழர் திடீர் என்று இறந்து விட்டால் நாட்டில் பெரும் குழப்பம் உண்டாகும். இதைத் தடுக்க நான் அவரசமாக இலங்கை சென்று மூலிகை எடுக்க வேண்டும். என்னுடன் வருகிறாயா பூங்குழலி? என்று மீண்டும் கேட்டான். அதற்கு பூங்குழலி, ‘ஏன் இந்த பெண் பிள்ளையைக் கேட்கிறாய்? உனக்கு இரு கைகள் உண்டு படகை எடுத்துப் போ! நடுக் கடலில் திசை தெரியாவிட்டால் மூழ்கிச் சாகுங்கள்’ என்றாள். வந்தியத்தேவன் மௌனமாக நடந்தபடி வீட்டிற்குச் சென்றதும் ஆழ்ந்த உறக்கத்தைத் தழுவி-க் கொண்டான். அவன் கனவுகளால் ஆட்கொள்ளப்பட்டான். அவன் கனவில் தானும், பூங்குழலியும் படகில் செல்ல, அவளின் அழகு அவனை அவள் மேல் காதல் கொள்ள வைத்தது. ஆனால் பூங்குழலியோ கையில் கத்தியுடன், ‘மீன்கள் பசியில் இருக்கிறன. நீ காதல் என்று கதைத்தால் உன்னைக் குத்தி கடலுக்குள் போட்டுவிடுவேன்’ என்றாள். திடுக்கிட்டு உறக்கம் தெளிந்து, மெல்ல எழுந்தான் வந்தியத்தேவன். தான் கண்டது கனவா? உண்மையா? என்று யோசித்தபடி, தன் இரு கைகளையும் தலைமேல் வைத்து வருடியபடி தன் கண்களை அங்குமிங்கும் சுழற்றி பூங்குழலியைத் தேடினான். அவள் வீட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. பின்னர் காலை உணவை முடித்து விட்டு குழவர் கோயிலுக்குச் சென்றான். அங்கு அவள் தந்தையிடம் பூங்குழலியைப் பற்றி விசாரித்தான். அவர் வந்தியத்தேவனை எச்சரித்தார். ‘என் மகள் மிகப் பொல்லாதவள் அவள் இப்போது காட்டில் மான்களோடு ஓட்டப் போட்டிக்குப் போயிருப்பாள் அல்லது கடற்கரையோரம் உலாவுவாள் அவளிடம் கவனமாக பழகு. காதல் என்றால் அவள் கத்தியைத் தூக்குவாள் உன் உயிருக்கு ஆபத்து அவளைக் கண்டு பிடித்து இலங்கைக்கு படகோட்டுவதைப் பற்றிக் கேட்டுப்பார்’ என்றார்.

வந்தியத்தேவன் காட்டுப் பக்கம் வந்தான். பூங்குழலியைத் தேடி-னான் அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இது என்ன இவளைத் தேடிப் பிடிப்பதிலேயே என் வாழ்நாள் கழிந்துவிடும் போலிருக்கிறதே! என்றபடி கடற்கரைக்குக் குளிக்கச் சென்றான். இடுப்பில் சுற்றிக் கட்டியிருந்த சுருள் துணி-யையும், கத்தியையும் எடுத்து கரையில் வைத்துவிட்டு மிக ஜாக்கிரதையாக ஆழம் பார்த்து மெல்ல மெல்ல கடலுக்குள் இறங்கினான். முழங்காலிற்கு மேல் ஆழமில்லை இது நல்ல கடல் ஆழம் பெரிதல்ல நான் குளித்து விட்டுப் போ-கலாம் என்றபடி வெகு தூரம் உள்ளே வந்தான். இளங் காலை நேரம் இதமான வெப்பமாக இருக்கும் தண்ணீரில் மூழ்கி எழுந்தான். சூரியக் கதிர்கள் மெல்ல மெல்ல இறங்கி கடலில் சங்கமிக்க வருவதைக் கண்டான். அப்பப்பா! எத்தனை விந்தை. வானில் எழும் சூரியன் தன் வெப்பத்தை பூமி நோக்கி தருகிறதே! இந்தத் தண்ணீரின் மேற்பரப்பில் படும் சூரிய வெப்பம், பகல் முழுவதும் மெல்ல மெல்ல நீரை ஊடுருவி தண்ணீரின் அடர்த்தியைக் கடந்து கீழிறங்கிச் செலகிறதே! அதனால் பகல் முழவதும் நீர் நிலைகள் குளிராக இருக்கின்றனவோ! இரவில், அதி-காலையில் நீர் வெது வெதுப்பாக இருப்பதால் தான் காலையில் குளிப்பது வழக்கமாயிற்றோ! என்றபடி ஆனந்தமாக நீரில் மூழ்கி எழுந்தான். உப்பின் சுவை நாவில் கரிக்கவே ‘இது என்ன விந்தை இத்தனை நீர் இருந்தும் பருக முடியவில்லையே. பாறைகளில் இருந்து பாய்ந்தோடி வரும் ஆறுகள் பாறைகளின் உப்புக்களைக் கரைத்துக் கொண்டு வந்து கடலில் விழுகிறது. உப்புக்கள் கடலில் கலந்துவிடுகிறது கதிரவனோ தன் வெப்பத்தினால் நன் நீரை உறிஞ்சி மழையாகத் தர உப்புக்கள் கடலிலேயே படிந்துவிடுகிறது அதனால்தான் போலும் கடல் நீர் உப்பு நீராகிவிட்டது’.




அவ்வேளை சலசலப்புச் சத்தம் கேட்கவே கரையைத் திரும்பிப் பார்த்தான். அங்கு பூங்குழலி வருவதைக் கண்டு, ‘உடனே போய் அவளைப் பிடிக்க வேண்டும் எனக்கு ஏதோ சொல்கிறாள் போல் தோன்றுகிறது! என்ன குனிந்து எடுக்கிறாள் ஏன் என் அரைச் சுருளை எடுக்கிறாள்? ஏய் பூங்குழலி அது என்னுடையது எடுக்காதே! என்ன சொல்கிறாய் கடல் இரைச்சலால் காதில் எதுவும் கேட்கவில்லை நில் நில்’ என்றான். அவள் வந்தியத்தேவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு காட்டுப் பக்கமாக வேகமாக ஓடினாள். வந்தியத்தேவன் கரையை நோக்கி ஓடினான். இது என்ன மீண்டும் காட்டிற்குள் அவளைத் தேடி ஆக வேண்டும் என் உடமைகளையும் கொண்டு போய்விட்டாளே! என்றபடி வேகமாக ஓடினான். பூங்குழலி எந்தத் திசையில் சென்றாள் என்று அவனுக்குத் தெரியவில்லை. முட்கள் அவன் உடம்பை கிழித்தன. செடிகள் அவனை உராஞ்சியது அங்கு நிற்கும் மரங்களிடம் மரங்களே பூங்குழலியை கண்டீர்களா? காக்கையே பூங்குழலியைக் கண்டாயா? என்று கேட்கவும் தொடங்கிவிட்டான். அப்பொழுது ஒரு மரத்தின் மேலிருந்து அரைச் சுருள் கீழே விழுந்தது. இது என்ன அதிசயம் என் அரைச் சுருள் மரத்தில் இருந்து விழுகிறதே! உடனே அதை எடுத்துப் பார்த்தான். யாவும் அப்படியே இருந்தது ‘எல்லாம் பத்திரமாக இருக்கிறதா? என்ற குரல் கேட்க, மரத்தை அண்ணாந்து பார்த்தான். அங்கு பூங்குழலி மரக்கிளையில் உட்கார்ந்து இருந்தாள். ஏய் பூங்குழலி உனக்குப் பணம் தேவை என்றால் என்னைக் கேட்டிருக்கலாம் ஏன் இப்படிச் செய்தாய்? என்றான். ஓ உன் பணமா யாருக்கு வேண்டும்! உன்னைக் காட்டிற்கு அழைத்து வரவே இப்படிச் செய்தேன் இங்கு மரத்தின் மேல் ஏறிப் பார் எதற்கு என்று புரியும்’ என்றாள். அவனும் ஏறிக் கொண்டான். அப்பொழுது பத்து பதினைந்து குதிரைகளும், வாள்களும், வேல்களும் தென்பட்டன. ‘ஆகா! இவர்கள் பழுவேட்டரையரின் ஆட்கள் என்னைத் தேடிப்பிடிக்க வந்திருக்கிறார்கள் இவள் என்னைக் காப்பாற்றவே இப்படிச் செய்தாள்’ என்று தெரிந்து கொண்டான் வந்தியத்தேவன். ‘பூங்குழலி ஏன் என்னைக் காப்பாற்றினாய்’ என்று வந்தியத்தேவன் கேட்க, ‘அதுவா உன்னைப் பார்த்தால் அரச குமாரன் மாதிரி இருக்கிறது! எனக்கு உன்மேல் பரிதா-பம். நீ தப்பி ஓட இங்கு வந்திருக்கிறாய் என்று சந்தேகித்தேன். பின்பு இன்று காலை வைத்தியர் மகன் மூலம் அதை உறுதிப்படுதினேன்’ என்றாள் பூங்குழலி. ‘அவன் என்ன சொன்னான்?’ என்று வந்தியத்தேவன் கேட்க, ‘அவன் என்னுடன் காதல் கொண்டான். அதற்கு நான் சொன்னேன், உன் நண்பன் உன்னை முந்திவிட்டான்’ என்று. அப்பொழுது வைத்தியர் மகன் பினகபாணி நீ ராஜ தண்டனைக்கு உரியவன், அவனிடம் நீ ஏமாந்து கொள்வாய் என்று எச்சரித்தான். பின்பு அவனுக்கு இந்த வீரர்களைக் காட்டினேன். அவனைப் பிடிக்க வந்தவர்கள் உன்னையும் பிடிப்பார்கள் நீ ஓடி விடு என்றேன். ஆனால் அவன் அந்த வீரர்களிடம் சென்று உன்னைக் காட்டிக் கொடுக்க முடிவு எடுத்து, அவர்களை எங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். ‘நான் உன்னிடம் இவற்றை சொல்லி முடிப்பதற்குள் அவர்கள் உன்னைத் தேடி வந்து விடுவார்கள். அதனால் தான் இப்படிச் செய்தேன்’ என்றாள். வந்தியத்தேவனோ ‘பாதகன் நண்பனைக் காட்டிக் கொடுத்து தன் சுயநலத்தைப் பேணிக் கொள்கிறான். இதனால் நாட்டிற்கு அழிவுகள் தான் மிச்சம்! நியாயம் நீதி அழிந்தொழிந்து துர் நாசச் செயல்கள் எங்கும் தலைவிரித்தாடுகின்றன’. என்றபடி, ‘பெண்ணே மிக்க நன்றி! உன்னை என்றும் மறக்கமாட்டேன். எனக்கு இலங்கை போய் ஆக வேண்டும் உதவி செய்வாயா? இதற்கு பிரதியாக ஏதேனும் உதவி வேண்டுமானால் கேள்’ என்றான் வந்தியத்தேவன். அதற்கு பூங்குழலி, ‘உன்னை நம்பலாமா?’ என்று சிரித்தாள். பின்பு ‘எனக்குப் பிரதி உதவி நீ செய்ய வேண்டும்! இப்பொழுது நான் சொல்வதைக் கேள்’ என்று அவனை அழைத்துச் சென்று, அங்கு இருந்த ஒரு பாழடைந்த மண்டபம் ஒன்றைக் காட்டி, ‘நீ இங்கே பொழுது சாயும் வரை இருக்க வேண்டும். சாப்பாடு கூடக் கிடைக்காது. பின்னர் நான் திரும்பி வந்து ஒரு குயில் போல் கூவுவேன். நீ வந்தால் படகில் போகலாம்’ என்றாள். ‘அதோ அது தான் இடம் அங்கே ஒரு சிறுத்தை குடியிருந்தது. அதை நான் அடித்துக் கொன்றேன். இது மரம் செடிகளுக்கு மறைவாக இருக்கும் இடம் யாருக்கும் தெரியாது. இந்த ஆயுதத்தை வைத்துக் கொள். நான் போய் வருகிறேன் இருட்டிய பின் இங்கு வருவேன். என் குரல் கேட்டால் மட்டும் நீ வெளியில் வா இருள் சூழ்ந்த பின் படகில் போவோம்’ என்றாள்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

---

# இவ்வார ராசிபலன்

**20-08-2021 வெள்ளி தொடக்கம் 26-08-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** தடங்கல் இல்லாத தனவரவுகளை சந்திக்கக்கூடிய நல்ல வாரம். காரியம் வெற்றி தரும். நட்பு பெருகும். பணப் பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்பு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கௌரவமான நாள். நந்தி வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**ரிஷபம்:** மர்மநோயும், தர்மவினையும் விலகக்கூடிய நல்ல வாரம். விநாயகர் வழிபாடு வெற்றி தரும். கவனமுடன் செயல்பட வேண்டும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். திடீர் செலவுகள் ஏற்படும். தனவரவுகள் தடைப்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கல செய்தியால் மனம் மகிழும். குதூகலம் தாண்டவமாகும். நவகிரஹ வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மூர்ஷிக வாகனன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,F




**மிதுனம்:** ஆதாயமோ அனுகூலமோ சேதாரமில்லாமல் கிடைக்கக்கூடிய ஆதாரமான வாரம். அமைதியான நாள். வளமான வாழ்வு அமையும். திருமண வாய்ப்புகள் கைகூடி வரும். காதல் எண்ணம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பொன், பொருள் சேரும். பங்குத் தொழில் கவனம் தேவை. பழையக் கடன் தீரும். குதூகலம் சேரும். வருமான வாய்ப்பு கூடி வரும். கல்வி ஆர்வம் கூடும். முருக வழிபாடு முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரம்மதேவா, அதிர்ஷ்ட எண்: 1,7,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**கடகம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கக்கூடிய நன்மையான வாரம். பாராட்டுக்கள் கூடும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புகள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும் உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். இடமாற்றம் ஏற்படும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: வழிவிடும் வனதேவதை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**சிம்மம்:** மனதில் மகிழ்ச்சி பெருகக்கூடிய மகத்தான வாரம். இனிப்பான செய்திகள் வரும். தோல்விகள் விலகும். கட்டிட தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தகாரியம் நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடக்கக்கூடிய எதார்த்தமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். தோல்விகள் விலகும். கட்டிட தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தகாரியம் நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு நிர்வாகத் திறமை அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**துலாம்:** வம்புதும்புகள் ஒழிந்து வரவுகள் அதிகரிக்கக்கூடிய வாரம். சச்சரவுகள் அகலும் நாள். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மற்றவரால் நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புகள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புகள் அடங்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சிஅம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**விருச்சிகம்:** கலைந்த குடும்பம் ஒன்று சேரக்கூடிய கலகலப்பான வாரம். பணிவான பேச்சுக்கள் தேவை. மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச் செய்தி வரும். வியாபார விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத் தொழில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**தனுசு:** பணவரவில் லாபமும் உடல்நலத்தில் ஷேமமும் கிடைக்கக்கூடிய வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரிய மனிதர்களை சந்திப்பிர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கை கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்ப மேன்மை தரும். ஆரோக்கியம்த சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்களமாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**மகரம்:** வீரியத்தோடு செயல்பட்டு வெற்றிகளை சேர்த்துக் கொள்ளக்கூடிய வாரம். போட்டிகள் உருவாகும் நாள். தாய் வழி உறவால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். தன வரவில் மேன்மை கூடும். நிதி நிலைமை சீராகும். பண வரவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். உடல்நலனில் கவனம் தேவை. கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**கும்பம்:** எடுத்த காரியத்தில் தொடுத்த வெற்றியை அடுத்தடுத்து சந்திக்கக்கூடிய வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீக சொத்து வந்து சேரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரளய தேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**மீனம்:** உங்களால் வரவும் உறவுகளால் செலவும் அதிகரிக்கக்கூடிய வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கை கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்ப மேன்மை தரும். ஆரோக்கியம்த சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S

---

## வீணாவின் கவிக்கணை

இவனோ பட்டினியில்
பழையதுக்காக ஏங்கிக்கிடக்க,
அவனோ மதியம் சுவைத்ததை
மாலையிலேயே தூக்கி எறிய,
இவன் கிழிந்த உடையை
ஒட்டுபோட்டு மானத்தை மறைக்க,
அவனோ ஒன்றை ஒரு நாளுக்கு
மேல் உடுப்பதை தவிர்க்க,
இவனுக்கோ படிக்கும் ஆர்வம்
கொட்டிக்கிடக்க,
பணம் மட்டும் ஏனோ எட்டக்கிடக்கு,
அவனோ பணத்தின் மேல
புரண்டுகிடக்க,
படிப்பு மட்டும் ஏனோ எட்டிக்கிடக்கு,
இருவரும் வாழ்வதோ ஓரே
கிரகத்தில் என்றாலும்,
ஏனோ இந்த ஏற்றத்தாழ்வு இங்கு?
விளங்கா விதியினை விதைத்ததும் நீயே,
வினையால் அதை அறுப்பதும் நீயே
இறைவா!!!



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 961



## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
### முல்லைத்தீவு

பரிலயம் கட்டப்பட்ட காலப் பகுதியில், கோவிலைச் சுற்றியுள்ள கிராமங்களில், உரல் நிறுத்தி நெல் குற்றமாட்டார்கள். மரணச் சடங்குகள் நிகழ்ந்தால், பறைமேளம் அடிப்பதில்லை. களியாட்ட நிழ்ச்சிகளையும் நடத்த மாட்டார்கள். சூடுமிதித்தல் போன்றவையும் நடைபெறுவதில்லை. இவ்வாறான பாரம்பரியங்களை மிக அவதானத்துடன் கடைப்பிடிப்பது வற்றாப்பளையைச் சூழவுள்ள கிராமங்களில் காணப்படுகின்றது. வற்றாப்பளை கண்ணகையின் பொங்கல், திங்கள் இரவு முடிவடைந்த பின்னர், மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலையில், பரிலயம் வழிவிடுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். பூசாரியார் வேப்பங் குழையால், தீர்த்தத்தினை எடுத்து எல்லா இடங்களிலும் தெளிப்பார். பின் மீதித் தீர்த்தத்தினையும், வேப்பங் குழையையும் நந்திக்கடலில் சேர்த்து விடுவார். இந்நிகழ்ச்சியின்போது குளிர்த்திப் பாடல்கள் பாடப்படும். பரிலயம் வழி-விடுதல் நிறைவேறியபின் கிராமங்களில், ஐதீகமாக நிறுத்தி வைத்த வேலைகள் யாவும் நடைபெறும். அத்தோடு கால்நடையாகக் கதிர்காமம் செல்வதற்காகத் தங்கியிருக்கும் அடியார்கள், தமது பயணத்தினையும் மேற்கொள்ளுவார்கள். இவற்றோடு தொடர்புடைய பொங்கல் ஒன்று நாவற்காட்டு வைரவர் கோவிலில் நடைபெறும். இதனை எட்டாஞ்சடங்கு என்றும் கூறுவர். இச்சடங்கு பரிலயம் வழிவிடுதல் நடைபெற்ற பின் வரும் திங்களன்று இடம்பெறும். இப்பொங்கல் பரியலங்கட்கு உணவளிப்பதற்காகப் பொங்கப்படுவதாகக் கூறுவர். பொங்கல் பொங்கிப்படைத்த பின்னர், கொள்ளி எறும்புகள் எனப்படும் ஒருவகை எறும்புகள் மொய்த்து அப்பொங்கலை உண்ணும். இவற்றைப் பரியலங்கள் எனக் கருதுவர்.

இலங்கையின் பலவிடங்களிலே கண்ணகை அம்மன் வழிபாடு காணப்படுகின்றது. கண்ணகி அம்மனைச் சிங்கள மக்கள் பத்தினித் தெய்யோ என்று அழைப்பதோடு, ஆடிமாத பூரணையில், கண்ணகை அம்மனுக்கு விழாவெடுப்பர். சில கண்ணகை அம்மன் கோவில்களில், கண்ணகி அம்மன் விழாக்காலத்தினைக் கண்ணகி அம்மன் சடங்கு எனக் கொண்டாடும் வழக்கமும் காணப்படுகின்றது. இச்சடங்கு மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்கள்வரை நடைபெறும். இக்காலங்களில் கண்ணகி வழக்குரை பாடப்பட்டு இறுதி நாளில் குளுத்திக்கதைப்பாடல் பாடப்படும். வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவி-லை அண்டிய கிராமப்பகுதிகளில், கண்ணகி அம்மனின் அருட்செயல்களைக் கருவாகக் கொண்டு, வடமோடிப்பாங்கிலான கோவலன் கூத்து ஆடப்படுகின்றது. வற்றாப்பளைக் கண்ணகி பொங்கலுக்கான தீர்த்தம் எடுப்பதற்கு முன், கோவிலுக்கு அண்மையிலுள்ள கிராமங்களில், கோவலன் கூத்து மேடையேற்றப்படும். வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு போன்ற கிராமங்களைச்சேர்ந்த அண்ணாவிமார், கூத்தினைப் பழக்கி, இரவிரவாக மேடை யேற்றுவார்கள். வற்றாப்பளைக் கண்ணகியம்மனின் பெருமைகளைக் கூறுவ-னவாக வசந்தன் பாடல், மழைக்காவியம், அம்மானை ஆகியன காணப்படுகின்றன. பொதுவாகக் கண்ணகியின் வரலாற்றினைச் சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரை, உடுக்குச்சிந்து, வசந்தன் கவிகள், கண்ணகி குளுத்திப்பாடல், கண்ணகிஅம்மன் காவியம், கண்ணகி அம்மன் அகவல் ஆகியவற்றின் மூலம் அறியலாம்.

கண்ணகி அம்மனை வழிபடுவதன் மூலம், கண்நோய், வயிற்றுநோய், மங்கமாரி, செங்கமாரி, வைசூரி, அம்மைநோய் போன்ற நோய்கள் நீங்குவது மட்டுமன்றி, கண்ணகி அம்மனின் அருளால் ஆகாததொன்றுமில்லை என்ற பக்திவைராக்கியம் கொண்டவர்களாக இவ் வழிபாட்டை மேற்கொள்ளும் மக்கள் காணப்படுகின்றார்கள். கடந்தகாலங்களில் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களில் பாதிப்படைந்த ஆலயங்களுள் வற்றாப்பனைக் கண்ணகைஅம்மன் கோவிலும் முக்கியமானதாகும். கடந்த காலங்களில், இக் கோவிலில் வருடாந்தம் நடைபெறும் பொங்கலை நடத்தவோ, அன்றிப் பக்தர்கள் இங்கு செல்வதையோ, இலங்கை இராணுவம் அனுமதிக்கவில்லை. இதனால் முள்ளியவளை வற்றாப்பளைச் சந்தியிலுள்ள, அம்மன் கோவிலில் மக்கள் பொங்கலையும், தமது நேர்த்திகளையும் செய்து வந்தார்கள். இக்கோவில் அமைந்துள்ள இடத்தில் காணப்பட்ட கல்லொன்றில் பக்தர்கள் கற்பூரம் ஏற்றி, வற்றாப்பளைக் கண்ணகி அம்மனின் பொங்கலை எண்ணி வழிபட்டனர்.

1983 ஆம் ஆண்டு உக்கிரமடைந்த தமிழின அழிப்புப் போராட்டம் வலுப்பெற்று, கண்ணகி அம்மன் கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் பாதிக்கப்பட்டனர். இதனால் 1985 ஆம் ஆண்டளவில் கற்பூரம் கொளுத்தி வணங்கிய இடத்திலேயே, கண்ணகி அம்மன் சிலையொன்றை நிறுவி வழிபட ஆரம்பித்தனர். 1990 ஆம் ஆண்டு ஏவுகணைத் தாக்குதலால், வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவி-ல் பெருஞ் சேதத்துக்குள்ளானது. 1992 ஆம் ஆண்டு மேமாதம் வற்றாப்பளைக் கண்ணகி அம்மனின் வருடாந்த உற்சவத்தைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொண்டாடிக் கொண்டிருந்தபோது, முல்லைத்தீவில் ஆக்கிரமித்து நின்ற இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலால், பதினைந்து தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் படுகாயமடைந்தனர்.

தற்காலத்தில் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம் முழுமை பெற்றதோடு, வருடாவருடம் நடைபெறும் வருடாந்தப் பொங்கல் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது., ஈழமெங்குமுள்ள மக்கள் இவ்விழாவிலே பங்குபற்றிக் கண்ணகை அம்மனின் அருளைப் பெறக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

*வளரும்...*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# அன்பின் தொனி - 621

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**3. தேவனுடைய பரிசுத்தம் பாவநிவிர்த்திக்கான இரத்தப் பலியை எதிர்பார்க்கிறது** - God's holiness demands blood atonement.

தேவனுடைய பரிசுத்தம் என்பது, அவர் ஏற்படுத்திய நிபந்தனையின் அடிப்படையில் மட்டும்தான் அதை அடையவும், அவரண்டை கிட்டிச் சேரவும் முடியும். பாவ மன்னிற்பிற்கு பாவநிவிர்திப் பலியாக இரத்தம் சிந்துதல் அவருடைய நிபந்தனையில் அடங்கியிருக்கிறது. ஆகையால் பரிசுத்தம்பெற இரத்தம் சிந்துதல் அவசியம்.

நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும், இரத்தஞ்சிந்துதலில் லாமல் மன்னிப்பு உண்டாகாது. **- எபிரெயர் 9: 22**

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. **- எபேசியர் 1: 7**

(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. **- கொலோசெயர் 1: 14**

குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. **- 1 பேதுரு 1: 19**

தேவனுடைய பரிசுத்தத்தை அவருடைய நிபந்தனையின் அடிப்படையில் மட்டுமே அடைய முடியும். பாவ மன்னிப் பிற்கு பாவநிவிர்த்தி பலியாக "இரத்தம் சிந்துதல்" அவசியம் என்பது அவருடைய நிபந்தனையில் அடங்கியிருக்கிறது. இன்று அநேக மக்கள் தமது நற்கிரிகைகளினால் தேவனண்டையில் கிட்டிச்சேர முற்படுகின்றனர். எப்படியெனில், நான் ஒரு நல்ல கணவன், ஒரு நல்ல தாய், நல்ல வேலைக்காரன், நல்ல நண்பன் என்று தமது நல் நடத்தைகள் பரிசுத்தத்திற்குப் போதும் என்று நினைக்கின்றனர். ஆனால் தேவனுக்கோ எமது நீதியெல்லாம் அழுக்கான கந்தையைப்போல இருக்கிறது.

நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம், எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம், எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது. **- ஏசாயா 64: 6**

தேவனுடைய பரிசுத்தத்தின் எதிர்பார்ப்பெல்லாம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எமக்காகச் சிலுவையிலே செய்து முடித்த கிரிகைகளை விசுவாசிப்பதின் மூலம் அடையலாம் என்றும், தேவனுடைய பரிசுத்த வசனம் கூறுகிற பிரகாரம் அவரண்டை வந்து அவரை ஏற்றுக்கொள்பவர்கள் அந்நிலையைப் பெறுவதும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கை யைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். **- கொலோசெயர் 1: 21-22**

**4. தேவனுடைய பரிசுத்தம் எமது நடத்தையின் தரத்தை நிர்ணயிக்கிறது.** The Holiness of God Sets the Standard for Our Conduct.

தேவனுடைய பரிசுத்தம் எமது நடத்தையின் தரத்தை வகுக்கிறதற்கு ஏதுவாக அமைகிறது.

சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். **- யோவான் 16: 13**

தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், எனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது, அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும், நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல. **- 1 யோவான் 3: 9-10**

தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம், தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான். **- 1 யோவான் 5: 18**

நாம் வாழ்க்கைத் தரம் என்பதைக்குறித்து பேசும்போது, ஒருவருடைய உணவு. உடை, உறவிடம், வாழ்க்கை என்பன வற்றின் அடிப்படையில் அவருடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்ததா? குறைந்ததா? என்று கணிக்கிறோம். பொருளாதாரரீதியில் எமது வாழ்க்கைத் தரத்தை எமது வைப்புக்கள், கணக்குகள், பொருட்கள், சொத்துகள் என்ற அடிப்படை யில் தீர்மானிக்கிறோம். ஆனால் எமது ஆன்மீக வாழ்க்கைத் தரத்தை தீர்மானிப்பது, எம்மிலுள்ள தேவனுடைய பரிசுத்தத்தின் குணாதிசயத்தின் அளவில் தங்கியிருக்கிறது. எனவே எமது வாழ்க்கை தெய்வீக குணாதிசயங்களின் சாயல் உள்ளதாக அமையவேண்டும். தேவனுடைய குணாதிசயம் எமது நடத்தைக்கு அடித்தளமாக அமைகிறது, அது சரியானதைக் கடைப்பிடிக்கவும், பிழையானதை வெறுக்கவும் செய்கிறது. ஆலயத்திற்குப் போவதினாலோ, வேதாகமத்தைப் வாசிப்தினாலோ எமது தவறுகளை மூடி மறைக்க முடியாது. பரிசுத்தத்திற்கு நிகர் பரிசுத்தம் மட்டுமே! அந்தப் பரிசுத்தம் இல்லாமல் தேவனைத் தரிசிக்க முடியாது.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புகள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.



4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077

# மரண அறிவித்தல்



**தோற்றம்:**

**21 - 10 - 1938**

**மறைவு:**

**15 - 08 - 2021**

# திரு. நாகரத்தினம் சண்முகநாதன்

(ஸ்ரீ சபரி பீடம் ஐயப்பன் தேவஸ்தான குருசாமி - கனடா, முன்னாள் இலங்கை புகையிரத முகாமைத்துவர்)

**யாழ். அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட நாகரத்தினம் சண்முகநாதன் அவர்கள் 15-08-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,

கிருஷ்ணமலர் அவர்களின் பாசமிகு கணவரும்,

நல்லைநாதன் (கனடா), எழில்லதா (கனடா), மாலினிலதா (பிரான்ஸ்), திருநாதன் (மருத்துவர், கனடா), தூபஜெகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

புஷ்பலதா, கிருபாகரன், சிவானந்தன், தர்ஷி, அஜந்தா ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, சந்திரசேகரம்பிள்ளை, இராசையா, விஜயலட்சுமி, மற்றும் கோபாலகிருஷ்ணன் (இலங்கை), கோவீரசிங்கம் (கனடா), பேரின்பலக்ஷ்மி (பிரான்ஸ்), வரதநாதன் (கனடா), கஜலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்றவர்களான குணரத்தினம், சந்திரமலர், கணேசநாதஞானமுருகையா, பாலச்சந்திரன், மற்றும் பூலோகரம்பை, யோகேஸ்வரி, சிவஞானதேவி, விபுலானந்தன், சிவதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

கோகுல், அர்ச்சனா, கனுஷா, சவிதா, டேணுயன், சபரீஷ், தர்ஷீகா, டினோஷீகா, அவிஷணா, அகரன், தாமீரன், சங்கவி, சயாணா, நவ்வியா, சமந்தா, டிலக்ஷீ, குருபரன் ஆகியோரின் அன்புப் பேரனும்,

மருமக்களின் அன்பு மாமாவும், பெறாமக்களின் அன்புப் பெரியப்பாவும், பெறாமக்களின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 8911 Woodbine Avenue, Markham இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் *21-08-2021* சனிக்கிழமை மாலை *6:00* மணிமுதல் இரவு *9:00* மணிவரையும் பார்வைக்கு வைக்கப்படும், அப்பொழுது நேரடியாகப் பார்ப்பதற்கான இணையவழி இணைப்பு www.ustream.tv/channel/chapelridgefh2. மறுநாள் *22-08-2021* ஞாயிற்றுக்கிழமை மதியம் *1:00* மணிமுதல் – *1:30* மணிவரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு, மதியம் *1:30* மணிமுதல் – *3:00* மணிவரையும் கிரியைகள் நடைபெற்று, தொடர்ந்து மாலை *3:30* மணிக்கு 12492 Woodbine Avenue, Markham இல் அமைந்துள்ள Highland Hills Crematorium இல் தகனம் செய்யப்படும்.

நேரடியாகப் பார்ப்பதற்கான இணையவழி இணைப்பு gtavideo.com/gta-funeral-live

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| நாதன் (மகன்): | (905) 782-7175 |
| எழில்லதா (மகள்): | (437) 345-7782 |
| மாலினி (மகள்): | 33952974575 |
| Dr. திரு (மகன்): | (647) 237-0099 |
| ஜெகன் (மகன்): | (647) 204-5322 |



ஜீவன் முக்தி (பகுதி ) 120

# மரணத்திற்குப் பின்னால் மற்றொரு நாடகம்

*(சென்ற வார தொடர்ச்சி...)*

இவர்களுக்கு ஒன்றும் பணம் இல்லாமல் இல்லை. ஆனாலும், இதைப் போய், பங்கிடுகிறார்களே, இப்போது இப்படியெல்லாம் முதலில் யோசிக்க முடியுமா?

அப்படியானால் இவர்கள் காண்பிக்கின்ற துக்கம் பொய்.
அதாவது முதன்முறையாக இந்த சமூகத்தை பார்வையாளனாக இருந்து பார்த்தேன்.
நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள், பார்வையாளனாக இருந்து பார்க்கும்போது பல விஷையங்கள் தெளிவாகப் புரியும்.

இந்தச் சமுகத்தினுடைய போலித்தனம், ஏமாற்றுத்தனம் தெரிந்தது.
அவர்களுடைய போலித்தன்மை, எனக்கு முதல் தடவையாக உழைத்தது.
யாராவது பொது மக்கள் வரும்போது உட்கார்ந்து வரும்போது உட்கார்ந்து அழுகிறார்கள், ஆனால் அவர்கள் வெளியில் சென்ற உடனே, கண்ணைத் துடைத்துக் கொண்டு, வீட்டுக்குள் அறைக்குள் வந்து. நகையைப் பங்கு போட்டார்கள்.

அவர்களுடைய விருப்பம், பாட்டியைவிட நகையின் மேல்தான் அதிகம் இருந்தது. அந்தப் பாட்டியோ மகா கெட்டிக்காரி.
எப்பேற்பட்ட விஷயமாக இருந்தாலும், அந்தப் பெட்டியை மட்டும் திறக்காது அதன்மேலேயே கீழே படுத்துக்கிடக்கும். அது அப்பேற்படடட கிழவி.
அப்போது புரிந்தது அந்தக் கிழவியின் சாமர்த்தியம் வீணாகப்போய்விட்டது.
பாட்டி செத்துப் போய்விட்டது.
ஆனால், இந்தப் பைத்தியக்கார மனிதர்கள், அதைப் பங்கு போடுவதினால் என்ன வரப்போகிறது? இவர்களுடைய சாமர்த்தியமும், என்ன ஆகப்போகிறது.
இவர்களும், அதையேதான் செய்யப்போகிறார்கள் என்று புரிந்ததும் அவர்கள் அந்த நகை, பங்கிடுவதைப் பார்த்து சிரிக்க ஆரம்பித்து விட்டேன்.
வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்துவிட்டேன்.

திடிரென்று அங்கிருந்த சித்தப்பா என்னை ஏய்! வாயை மூடு, சிரிக்காதே! அழு!' என்றார்.

எனக்கு அழுகை வரவில்லை.
எனக்கு ஒரே ஒரு கஷ்டம்தான், இருந்தது 'மிட்டாய் போய்விட்டதே' என்று.
அதுவும் கொஞ்சநேரம் கழித்துப் போய்விட்டது. ஒருவரின் மரணம். 'மிட்டாய் போய்விட்டதே! என்ற துக்கத்தை மட்டும்தான் ஏற்படுத்தியது. அப்போது, என்னுள் இவர்களுக்குத்தான் அது கூட இல்லை. கிழவி போய்விட்டது. அடித்தது லாட்ரி? என்பது போலத்தான் அவர்களின் செயல் இருந்தது.

இவர்கள் உட்கார்ந்து குனிந்து. குனிந்து அழுவதைப் பார்த்து எனக்குச் சிரிப்பு வந்து விட்டது.
இரண்டாம் தரம் சிரித்த உடனே சித்தப்பா பளிச்! பளிச் என்று கன்னத்தில் இரண்டு வைத்தார். அழுடா, எல்லாம் அழுதுகொண்டு இருக்கிறார்கள்! இங்கே அழுடா' என்று சொன்னார்.

அப்பொழுதே ஸ்திரத்தன்மையும், தைரியமும் அதிகம்.
சித்தப்பா கையைப் பிடித்துக் கொண்டேன். பிடித்துக் கொண்டு, இதற்குமேல் ஒரு அடி அடிக்காதீர்களென்றால், வருகிறவர்கள் எல்லோரிடமும் நீங்கள் செய்தது எல்லாவற்றையும் சொல்லிவிடுவேன். உள்ளே, நீ பெரியப்பா, அப்பா எல்லாம் நகைக்கு சண்டை போட்டுக் கொண்டதை எல்லாரிடமும் சொல்லி விடுவேன் என்று மிரட்டினேன்.

அங்கே எல்லாப் பெண்களும் சேர்ந்தே நகைகளை பாகம் போட்டார்கள்.
மூன்று வடம் செயின் இருந்தது, அதை ஒவ்வொரு வடமாகத் துண்டித்து, அதன் முகப்பை தனியாகத் துண்டித்து பாகம் போட்டார்கள். இன்னமும் தெளிவாக இதெல்லாம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. வைர முகப்பு, பவழ மாலைகள், அதெல்லாம் துண்டித்து. துண்டித்து பாகம் பிரித்தார்கள்.
உனக்கு இது, எனக்கு அது என்று பெரிய பேரமே நடந்து கொண்டிருந்தது.
நான் சொல்லிவிட்டேன், வருபவரிடம் எல்லாம் இதை சொல்லி விடுவேன் என்று.
உடனே மற்றொரு சொந்தக்காரர் வந்து விட்டார். உனக்குத்தான் தெரியுமில்லையா, இவன் வாய் பெரிய வாயென்று. ஏனடா சும்மா இருந்து தொரையேண்டா, ஏண்டா இவனை அடிக்கிறாய், வருபவர்களிடம் எல்லாம் போய் சொல்லிவிட்டான் என்றால், அசிங்கமடா என்று சொல்லிவிட்டு, இந்த இரண்டு சொந்தக்காரர்களும் சேர்ந்து ஒரு அறையில் என்னை விட்டுப் பூட்டி வைத்து விட்டார்கள். அதுவும் பாட்டி இருந்த அதே அறையில். வருபவரி-டம் எல்லாம் எதுவும் சொல்லக் கூடாது என்பதற்காகவும், தொந்தரவு என்பதற்காகவும் பூட்டி வைத்து விட்டார்கள். ஜனங்கள் எல்லாம் வந்துவிட்டுப் போகும் வரைக்கும் இவனை உள்ளே விட்டுப் பூட்டுடா' என்று உள்ளே விட்டுப் பூட்டி விட்டார்கள்.

உண்மையில் புத்தருக்கு ஒரு போதிமரம் தந்த மாற்றம் போல அந்த அறையில் எனக்கும் ஒரு பெரிய மாற்றம் நடந்தது.
மொத்த சமுதாயத்தின் மேலும் இருந்த மதிப்பு அப்படியே இடிந்து விழுந்தது.
கிராபிக்ஸில் காண்பிக்க வேண்டுமென்றால், அந்தக் காட்சியை அப்படித்தான் காட்ட வேண்டும்.
சமுகம் என்கின்ற ஒன்று அப்படியே இடிந்து விழுந்தது. அப்பா, அண்ணன், தம்பி, மாமா, பாட்டி, அம்மா இந்த எல்லா உறவுகள் எல்லார் மேலேயும் இருந்த மரியாதை சுத்தமாக அழிந்து போய்விட்டது.
வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்கு ஒழிந்தது. இது எல்லாமே ஒரு போலித்தனம்தான். என்று புரிந்தது. இது சத்தியம் கிடையாது. நிரந்தரம் கிடையாது. வாழ்க்கைக்கு ஒரு உபயோகம், அவ்வளவுதான் என்பது புரிந்தது.
உறவுகள என்பது நிரந்தரம் கிடையாது. உபயோகம் அவ்வளவுதான்.
தேவைப்படும்போது, உபயோகப்படுவதாலேதான் உறவுகளே தவிர, அவை நிரந்தரம் கிடையாது. அவை உணர்வ சம்பந்தப்பட்டவை கிடையாது. அவை சாஸ்வதம் அல்ல என்று தெளிவாகப் புரிந்தது.
நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். என்னுடைய 10வது நாள் சண்டை, அன்றைக்குத்தான் முடிந்தது. 10வது நாள் சண்டை அன்றைக்குத்தான், சிகண்டியை முன் நிறுத்தினேன். பீஷ்மரை வென்றேன்.
வளர்ப்பு கூட்டிலிருந்து விடுபடுத்தும் சத்தியம்தான் சிகண்டி
அந்த அறைக்குள் நடந்தது என்னவென்றால், ஒரு ஆழமான பிரார்தனை எனக்குள்ளே நடந்தது. இவ்வளவு போலித்தனமாக எல்லாம் இருக்கிறனென்றால், அப்போது சத்தியம்தான் என்ன என்ற கலககமாக பொங்கி வந்த துக்கம்தான் அலியாகிய சிகண்டி.
அந்த சிகண்டி முன்னால் வளர்ப்புறு கட்டுறுமனப்பாங்கான பீஷ்மரால் இயங்க முடியாது.
அந்த துக்கத்தைப் பாரத்து வளர்வ்புறு கட்டுறு மனப்பாங்கு என்ன நினைக்கும்? பீஷ்மர் என்ன நினைப்பார்?
ஏ இது சின்ன விஷயமடா என்று நினைப்பார். அந்த துக்கம்தான் பீஷ்மரை அழிப்பதற்கான ஒரே வழி. சில நேரத்தில் இந்த மொத்த வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்கின்மீதும், சமுதாயத்தின் மேலும் இருக்கின்ற மரியாதை இடிந்து விழும். அப்போது பொங்குகிற துக்கமும் மதிப்பில்லாத் தன்மை, மரியாதை போய்விடுகிறது, பார்த்தீர்களா? அதைத்தான் சிகண்டி என்று சொல்கிறோம்.
என்னுடைய பன்னிரெண்டு வயதில், பத்துநாள் யுத்தம் முடிந்து சிகண்டி முன் வந்தான். சிகண்டி மேலெழுந்தான். பீஷ்மர் சாய்ந்த உடனேயே, சமூகத்தில் இருந்தாலும், சமூகத்தின் மேல் எந்தவிப் பற்றுதலும் இல்லை.
அதற்கு பிறகு மாமாவைப் பார்க்கும்போது மாமா என்று தேன்றவில்லை.
சித்தப்பாவைப் பார்க்கும்போது சித்தப்பா என்று தோன்றவில்லை. அம்மாவைப் பார்க்கும்போது அம்மா என்று தோன்றவில்லை. ஒரு கதாப்பாத்திர விளையாட்டு விளையாடுகிறார்கள். எப்போது வேண்டுமானாலும் இவர்கள் இல்லாமல் போய்விடுவார்கள் என்பது தெளிவாகப் புரிந்தது. சமூகத்தினுடைய ஸ்திரத்தன்மை மீது ஆழமான சந்தேகம் வந்தது. ஸ்திரமில்லாத் தன்மை புரிந்தது. நமக்கென்று யாரும் கிடையாது என்ற தெளிவுதான், சிகண்டி என்று சொல்வது. அதுதான் பத்தாவது நாள் போர். அன்றைக்கு நடப்பதுதான் பீஷ்மருக்கு நடந்த நிகழ்ச்சி.
இந்த ஜீவன் ஞானக் கருத்துகளாகிய அம்புகளால் துளைக்கப்படும்போது, சிகண்டி என்கிற அந்த துக்கம் வாழ்க்கையில் வளர்ப்புறு கட்டுறுமனப்பாங்கின் மேல் இருக்கின்ற மரியாதையைப் போக்குகிறபோது வருகின்ற அந்த துக்கமும், தேடுதலும்தான் சிகண்டி.
சிகண்டியை முன்நிறுத்தினோம் என்றால், இயற்கையதக பீஷ்மர் வேலை செய்யாது. கட்டுறு மனப்பாங்கு வேலை செய்யாது. அப்போது, நாம் அந்த ஞானக் கருத்துகள் என்கிற அம்பை எய்தோமானால், பீஷ்மர் கீழே சாய்ந்து விடுவார். இதற்குமேல் எழுந்திருக்கவே முடியாத மாதிரி இறந்து போய்விடும். படுத்துவிடும்.

ஞான குருவால் உங்களுக்கு ஞானத்திற்கான வழியைக் காட்ட முடியாது.
கீதையில் 10-ம் நாள் யுத்தம் முடிந்தது. அதற்கு அடுத்து வருவது யார்?
துரோணாச்சாரியார். துரோணர் யாரென்றால்? சின்ன வயதில் இருந்து உங்கள் வாழ்க்கையில் குருவாக இருந்தவர்கள்.
பெற்றோர்களைத் தவிர, உங்கள் வாழ்க்கையிலும், எல்லோருடைய வாழ்க்கையிலும் சில மரியாதைக்குரிய நபர்கள் சிலராவது இருந்திருப்பார்கள்.
ஆசிரியர்களில் கூட சிலபேர் முன் மாதிரியாக இருந்து இருப்பார்கள்.
ஞான சத்குருவை அடைகின்ற வரைக்கும், பல்வேறு தரமான குருமார்கள் உங்கள் வாழ்க்கையில் இருந்திருப்பார்கள். தீக்ஷா குரு, ஏதாவது மந்திர உபதேசம் செய்து இருப்பார். இல்லை, எப்போதாவது நீங்கள் துக்கத்தில் இருக்கும்போதுஈ சரியான அறிவுரை செய்து உங்களை துக்கத்திலிருந்து வெளியில் எடுத்துக் கொண்டு வந்திருப்பார்கள்.
அவர்கூட குருதான், துரோணர்தான். துரோணாச்சாரியார் இல்லாதவர்கள் இருக்கவே முடியாது.
நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். சத்குரு துரோணர் கிடையாது.
துரோணாச்சாரியார் யார்? உங்கள் வாழ்க்கையில் எப்போதாவது ஒரு தாழ்வான நிலைக்கு வரும்போது, துக்கம் வரும்போது ஒரு அறிவுரை செய்து, உங்களை மேலே எடுத்துக் கொண்டு வந்து இருப்பார். எதாவது யோகம், பிராணயாமம் ஏதாவது கற்றுக் கொடுத்திருப்பார். சில நேரத்தில் மூக்கைப் படி, நாக்கைப் பிடி என்று எதையாவது கற்றுக் கொடுத்திருப்பார்கள். அவர்கள் எல்லாம்தான் துரோணாச்சாரியார்களே.

சில நேரத்தில் சின் வயதில் எப்போதாவது சில கருத்துக்களைக் கொடுத்து, ஞானத்தை நோக்கி செல்வதற்கு ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தி இருப்பார்கள்.
ஏதாவது ஒரு விக்ரகத்தை வழிபடச் சொல்லியிருப்பார்கள். இல்லை. ஏதாவது மந்திர தீசைஷ கொடுத்திருப்பார்கள். இல்லை, ஏதாவது யோகம், பிராணயாமம் என்று கற்றுக் கொடுத்திருப்பார்கள்.

இந்த மாதிரி ஏதாவது, இந்த துவக்கநிலை உத்வேகத்தை தருபவர்களாக இருந்திருப்பார்கள். அவர்களை எலலாம்தான் ஆரோணாச்சாரியார்கள் என்று சொல்வது.

அவர்களே ஞானமடைந்து இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு சில குறைகள் இருக்கும். ஆனால் உங்களுக்கு குருவாக, ஆச்சாரியாராக இருந்திருப்பார்கள்.
நல்ல உதவிகளை செய்திருப்பார்கள்.

உங்கள் வாழ்க்கையில் திரும்பிப் பார்க்காதீர்கள் என்றால் தெரியும். அடுத்து வருகிற தடையாக, ஞான சத்குருவை அடைவதற்கு, ஞானம் அடைவதற்கு, அடுத்து வருகிற தடை அவர்களாகத்தான் இருப்பார்கள்.

துரோணாச்சாரியாரை நீங்கள் பிடித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால், கிருஷ்ணனைப் பிடிக்க முடியாது. சில நேரத்தில் கிருஷ்ணன் வழிகாட்டுவதைக் கேட்கக்கூட, சில துரோணாச்சாரியார்களை விட மாட்டார்கள்.

அவர்களிடத்தில் வரும் ஆட்களின் எண்ணிக்கை குறைந்து போய் விடுமே எனற பயம் துரோணாச்சாரியார்களுக்கு உண்டு.
ஆனால் கிரஷ்ணர் அதைப்பற்றியெல்லாம் கவலையே படமாட்டார். தேடுதல் இருக்கிறவர்கள். தானாகவே துரோணரை விட்டு கிருஷ்ணரிடம் வந்து விடுவார்கள்.
துரோணாச்சாரியார் எப்படி அழிக்கப்பட்டார்?

ஞானத்தை நோக்கி நீங்கள் போகின்ற தேடுதலில், துவக்கநிலை உத்வேகத்தை தருபவராக இருந்தவர்களே. சில நேரத்தில் ஞான குருவை அடைவதற்குத் தடையாக இருப்பார்கள்.

ஒன்றும இல்லை. ஒரு மொழியை கற்றுக் கொடுத்தவர்கள், ஒரு தமிழ் ஆசிரியர்.
ஒரு சமஸ்கிருத ஆசிரியர் அவர்களெல்லாம்கூட சில நல்ல கருத்துக்களைச் செல்லிக் கொடுத்திருப்பார்கள். ஆனால், அதனால் அவர்களே ஞான சத்குரு கிடையாது.
ஒரு மந்திர தீட்சை கற்றுக் கொடுத்திருப்பார்கள். ஆனால் அவர்களெல்லாம் ஞான சத்குரு கிடையாது. துரோணாச்சாரியார்கள் ஞான சத்குருவுக்குச் சமம் கிடையாது.

----

### பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.
எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....

மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைண்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைண்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...










காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN

விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.

FRUITS HABY பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்

5925 Victoria Montreal, QC H3W 2R9

514-342-4229 514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph Legal Representative / Paralegal

Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....

416-757-7707

Cell : 416-575-8797

Fax : 1-866-516 0689

E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker — Sun Sanmugathas Broker of Record

PROPERTY MAX Realty Inc. Brokerage

SANMUGATHAS TEAM

6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000

416-666-9464 www.iselldreamcondos.ca

416-291-0005 www.iselldreamhomes.ca



25 வது வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்



JRS AUTO TECH.CA INC

All Mechanical & Electrical Repairs

9 AM TO 9 PM – 7 DAYS A WEEK

ENGINE, TRANSMISSION, RUSTPROOFING, OILCHANGE, TYRES, AUTOGLASS & TINT

416-206-9489 | 416-628-4399

2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3



உதயம் 1324 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 20, 2021


# ஒன்றாரியோ பாடசாலைகளிலும் கோவிட் -19 தடுப்பூசி வழங்கும் மையங்கள் அமைக்கப்படவுள்ளன



ஒன்றாரியோ மாகாணத்தின் பாடசாலைகளிலும் கோவிட்-19 தடுப்பூசி மையங்களை அமைக்க மாகாண அரசு தீர்மானித்துள்ளதாக ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினரும் ஒன்றாரியோ போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான விஜய் தணிகாசலம் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு அறிவித்துள்ளார்.

மேற்படி செய்திக் குறிப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- கோவிட்-19 நோய்த்தொற்றினை முறியடிப்பதற்கு ஒன்றாறியோ அரசாங்கம் பொது சுகாதார அமைப்புகளுடனும் பொது நிதியுதவியைப் பெறும் கல்விச்சபைகளுடனும் இணைந்து பாடசாலைகளில் அல்லது பாடசாலைகளுக்கு அருகில் தடுப்பூசி வழங்கும் மையங்களை அமைக்கவுள்ளது. பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரும், பாடசாலை ஆரம்பித்து முதல் சில வாரங்களுக்கும் இத்தடுப்பூசி மையங்கள் இயங்கிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


*(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)*


# உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழ் பிரதிகள் தொடர்ச்சியாக நண்பர்களுக்கும் பிரமுகர்களுக்கும் வழங்கப்பெறுகின்றன







கடந்த 06-08-2021 வெள்ளிக்கிழமையன்று வெளியான, கனடா உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழ் சிறப்புப் பிரதிகள் தொடர்ச்சியாக நண்பர்களுக்கும் பிரமுகர்களுக்கும் வழங்கப்பெறுகின்றன. வழமையிலும் பார்க்க அதிக பிரதிகள் அச்சடிக்ப்பெற்றதால், பிரதிகள் நேரடியாக சிலருக்கு வழங்கப்பெற்று வருகின்றன.

இந்த வரிசையில் கடந்த வார இறுதியில் தமிழர் விழா ஒன்றில் கலந்து கொண்ட பிரம்ரன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுணுக்கும் “உதயன்“ நண்பர்களும் வர்த்தகப் பிரமுகர்களுமான திருவாளர்கள் சங்கர் நல்லதம்பிக்கும், தனிநாயகம் சண்முகநாதன் ஆகியோருக்கும் நேரடியாக வழங்கப்பெற்றன.

# கோவிட் தடுப்பூசி பெறத் தவறிய ஒன்றாரியோ மாகாண சபை அங்கத்தவர்களுக்கு எதிராக முதல்வர் டக் போர்ட் ‘நடவடிக்கை’





கோவிட் தடுப்பூசி பெறத் தவறிய ஒன்றாரியோ மாகாண சபையின் இரண்டு அங்கத்தவர்களுக்கு எதிராக முதல்வர் டக் போர்ட் ‘நடவடிக்கை’ எடுத்த பின்னர் மீண்டும் அவர்களில் ஒருவரை ஆளும் கட்சி ஆசனங்களில் அமர்ந்து கொள்ள அனுமதித்துள்ளார் என ‘குயின்ஸ்பார்க்’ செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

மேற்படி செய்திக் குறிப்பில் கோவிட்-19 க்கு எதிரான தடுப்பூசி போட்டுக் கொள்ள தவறியதால் முதல்வர் டக் போர்ட் தனது அங்கத்தவர்கள் குழுவிலிருந்து நீக்கியுள்ளார்.

மற்றொரு எம்.பி.பி,யான ஸ்காபுறோ தெற்கு மாகாண சபை உறுப்பினர் கிறிஸ்டினா தனது மருத்துவரிடம் இருந்து ”மருத்துவ விலக்கு” கடிகம் பெற்று அதை குயின்ஸ் பார்க்கில் சமர்ப்பித்ததால் பின்னர் ஆளும் கட்சியின் ஆசனங்களில் அமர அனுமதிக்கப்பட்டார்.

ஆனால் சிரேஸ்ட மாகாண சபை உறுப்பினரான மற்ற எம்பிபி ரிக் நிக்கோல்ஸ் குயின்பார்க் மாகாண சபையில் சுயேட்சைகளுக்குரிய ஆசனத்தில் அமர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட்டார்.

”கோவிட் -19 க்கு எதிரான போராட்டத்தில் தடுப்பூசிகள் வகிக்கும் பங்கை தனது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் ஆதரிப்பது மட்டுமல்லாமல், தங்களையும் தங்கள் சமூகத்தில் உள்ள மக்களையும் பாதுகாக்க தடுப்பூசி போட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு” என முதல்வர் டக் போர்டு நேற்று வியாழக்கிழமை கூறினார்.

”ரிக் நிக்கோல்ஸ் தடுப்பூசியிலிருந்து விலக்குவதற்கான நியாயமான காரணத்தை வழங்கத் தவறிவிட்டார். இதன் விளைவாக, அவர் இனிமேல் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் உறுப்பினராக கணிக்கப்பட மாட்டார். அத்துடன் அவர் அடுத்த தேர்தலில் எமது கட்சி வேட்பாளராக வேட்பாளராக மீண்டும் அனுமதிக்கப்பட மாட்டார்” என்றும் முதல்வர் டக் போர்ட் அழுத்தமாகத் தெரிவித்தார்.

# தமிழ்நாடு *இனிய நந்தவனம்* சந்திரசேகரன் எழுதிய நூலுக்கு ஏர்வாடியாரின் ‘கவிதை உறவு‘ அமைப்பின் சிறப்புப் பரிசு



தமிழ்நாட்டின் சென்னையில் கடந்த 49 ஆண்டுகளாக கலைமாமணி ஏர்வாடி இராதாகிருஸ்ணன் தலைமையில் ‘கவிதை உறவு’ அமைப்பு இயங்கி வருகிறது. இவ்வமைப்பு மூலம் ஆண்டுதோறும் சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கிச் சிறப்பு செய்யப்பெறுகிறது.

இந்த வரிசையில் 2020 ஆம் ஆண்டில் வெளியான சிறந்த நூல்களுக்கான தேர்வில் ‘இனிய நந்தவனம்’ சந்திரசேகரன் எழுதிய ”இன்னொருமுறை முயற்சி செய்யுங்கள்” என்ற நூலுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள் சிறந்த நூலுக்கான பரிசுத் தொகையும் பாராட்டுச்சான்றிதழும் வழங்கிச் சிறப்பித்தார். படத்தில் நாட்டியக் கலைஞர் நர்த்தகி அவர்களும் மேடையில் காணப்படுகின்றார்.


CROSSROAD SHUTTLE BUS SERVICES

647-801-7725

www.crossroadshuttles.com

- Luxury leather seats
- High end entertainment system
- High roof
- Extended storage

Contact us for all your booking and charter need!

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்

Siva & Joy Real Estate Team

416-267-9700

Homelife/Future Reality Inc., Brokerage

Siva Shanmuganathan Broker — Joy H. Selvanayagam Broker